ஆரியத்தமிழாராய்ச்சிக் கழக வெளியீடு க.

உ

ஸ்ரீமந் நடராஜாங்கித

மஹா பாரத சதகம்.

(குறிப்புரையுடன் கூடியது.)

இது

சிதம்பரம் நாவலர் தமிழ்க்காலேஜ் தமிழாசிரியரும்
தமிழ் ஸம்ஸ்கிருத வித்வானுமாகிய
என். கிருஷ்ணமூர்த்தி ஐயரால்
இயற்றி,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது
சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்
தியாகராஜபிள்ளையால்

சென்னபட்டணம்
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

பிரமோதூதஹு ஆவணிமீ

 [விலை ரூபா ஒன்று.

உள்ளுறை.

17-1

உள்ளுறை.

FORWARD

I am glad to testify to the excellence of this work "**Sriman Natarajankita Mahabharata Satakam**" composed by Brahma Sri N. Krishnamurthi Ayyer, Tamil Lecturer, Navalar College, Chidambaram. In a meeting of the Pandits Association of the Oriental Training College, the author had an opportunity to read and expound most of the stanzas in this work. It was fully appreciated by the Tamil and Sanskrit Pandits and the general opinion was that it should be printed and published immediately so that it might reach a wider circle of learned men to delight them. It is eminently suitable for our High School and College students, as it gives in a nutshell the main story of the Great Epic with the morals it teaches. Lastly there is the devotional element in each stanza as it ends with an address to the God Nataraja.

Sri Meenakshi Oriental
Training College,
Chidambaram.
7—2—'29.

(Sd) S. Krishnamurthi Sastry,
M.A., L.T.,
Principal.

FORWARD

I am glad to testify to the excellence of the work '**Srimad Natarajankita Mahabharata Sata kam**' composed by Vidwan Sri V. Vyramuthu Ayyar, Tamil Lecturer, Natyakalp College, Chidambaram. In a meeting of the Pandits' Association of the Oriental Training College the author had an opportunity to read and expound most of the stanzas in this work. It was fully appreciated by the Tamil and Sanskrit Pandits and the general opinion was that it should be printed and published immediately so that it might reach a wider circle of learned men to delight them. It is eminently suitable for our High School and College students, as it gives in a nutshell the entire story of the Great Epic with the morals it teaches. Lastly there is the devotional element in each stanza as it ends with an address to the God Nataraja.

(Sd.) S. Krishnamurthi Sastry, M.A., L.T.
Principal.

Sri Meenakshi (Oriental) Training College, Chidambaram.
..—..—19..

௨

தில்லைவாழந்தணருளொருவரும்

சென்னை யூனிவர்ஸிடி ஓரியண்டல் ஸம்ஸ்க்ருத

பரீக்ஷா சபைத் தலைவரும்

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி ஸம்ஸ்க்ருத காலேஜ்

பிரின்ஸிபாலும் ஆகிய

மஹாமஹோபாத்யாய, சாஸ்த்ராசார்ய

ப்ரம்மஸ்ரீ சிவ. தண்டபாணிஸ்வாமி

தீக்ஷிதரவர்கள் எழுதிய

சிறப்புப்பாயிரம்.

௧. மஹாபாரத சதகம். இது செய்தவர் நமது நாவலர் தமிழ்க்கலாசாலைத் தமிழ் லெக்சாரும், கனந்தங்கிய ராஜா, ஸர். எஸ். ஆரெம். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மேற்பார்வையிலுள்ள வெ. சா. தேவார பாடசாலையில் சிலபோது தமிழ் போதிப்பவருமாகிய என். கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்பவர். இவர் சிதம்பரத்திலேயே பிறந்து வளர்ந்து நடராஜானுக்ரகத்தால் முன்னுக்கு வந்தமையாலும் சைவப்பிரகாசவித்தியாசாலை தேவாரபாடசாலை இவற்றிலிருக்குஞ் சம்பந்தத்தாலும் உண்டாகிய நடராஜபக்திபூர்வகம் இந்நூல்செய்து இதன் மகுடத்தில் நடராஜாவை அமைத்துப் பாடினமையால் ஸ்ரீமந் நடராஜாங்கித மகாபாரத சதகம் என்று பெயர் வைத்து மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ப்ரயோஜனமாக வெளியிட்டது சிதம்பரவாஸிகளாகிய எங்களுக்கும் பொதுவாக எல்லோருக்கும் பேரானந்தத்தை உண்டாக்கியதென்பதில் சந்தேகமில்லை.

இந்நூல் செய்தவர் சென்னை யூனிவர்ஸிடியின் தமிழ் ஸம்ஸ்கிருத பிரிவின்படி வித்வான் பரீக்ஷையிற் கற்றுத்தேர்ந் தவராதலாலும் வடமொழியிலுள்ள பாரதராமாயணங்களையும் அவைகளின் வழிநூல்களையும் ஆராய்ந்தமையினாலும் அது போலத் தமிழில் ஸம்க்ஷேபமாகிய நூல்கள் இல்லாததுபற்றி அவற்றின் ஆவசியகத்தை உணர்ந்து இதுபோன்ற நூல்செய் துறையிலிறங்கியது மாணவர்களுக்கு மிகவும் உபயோகமான விஷயமேயாகும்.

இப்புஸ்தகம் நூறு செய்யுளாயிருந்தாலும் பாரதத்தின் சாரமான கதைகளையும் நீதிகளையும் திரட்டி ஸுலபமான நடையில் விளக்கிச் செல்வதனால் இதைப் படிப்பதனாலேயே அநாயாசமாக நவநீதக்ரஹணம்போல மற்றை விஷயங்களையும் அறியக்கூடியதாகவும் இருக்கிறது. படிப்போருக்கும் படிப் பிப்பவர்க்கும் சுலபமான முறையில் இந்த நூல் அமைந்தது வியக்கத்தகுந்ததேயாம்.

உ. மகாபாரத மகிமையும் வ்யாச தாத்பர்யமும். மற் றைப் புராணங்கள் முதலியனபோல ஒவ்வொரு மத சம்ப்ரதா யத்தைத் தழுவிச்செல்லாமல் வேதம்போலப் பொதுவாக எல்லா நீதிகளையும் தர்மங்களையும் தெய்வோபாசனைகளையும், ராஜ்யபரிபாலனம், மந்த்ராலோசனை, தூது, யுத்தம் முதலி யவைகளையும் ஆஸ்திகப்பற்றையும் விளக்கிக் கூறும் உத்தம நூல் மகாபாரதம் ஆதலால் இதனை யாவரும் உணரத்தக்க தென்பது அதிகம் சொல்லவேண்டியதில்லை. பாரத: பஞ்சமோ வேத: என்பது யாவருமறிந்ததே. விஷ்ணுசிவ மகிமை இரண் டையும் வியாசர் கூறினாரென்றாலும் க்ருஷ்ணனால் சிவமகிமை கூறியதொன்றே சிவமகிமைக்குச் சிறந்த சின்னம். இந்தச் சதகத்திலும் நடராஜமகிமை க்ருஷ்ணனாலேயே கூறப்படு கிறது. இந்த க்ஷேத்ர அமைப்பும் பார்த்தவர்களறியலாம்.

நடராஜதர்சனபலனைத் தருவதற்கு தானுதிகாரியாக விஷ்ணு நியோகிக்கப்பட்டார் என்பது புராணம்.

ரு. சதக அமைப்பு. சதகமெல்லாம் இறுதியடியில் ஒரு தெய்வபரமாக அமைப்பது ஸம்ப்ரதாயமானபடியாலும், பாரதகதைக்கு கைலாஸவாஸியாகிய பரமேஸ்வரன் முக்ய ஸம்பந்தியாதலாலும், சந்த்ரசேகரன் சந்திரவம்ச ஆதிக்கத்திற்குப் பொருத்தமேயாதலாலும், பூலோககைலாசமாகிய சிதம்பர நடராஜாவுக்கு மகுடம் அமைத்ததும், சந்த்ர மௌலீசபதப்ரயோகமும் இச்சதகத்துக்கு மிகுந்த சௌந்தர்யத்தைத் தருவதாகும்.

இந்நூலில் கரு பர்வாக்களின் கதை தர்மராஜ்ய பட்டாபிஷேகம்வரையில் கூறப்பட்டிருக்கிறது. பட்டாபிஷேகம் வரையில் கதைகளை முடிப்பதே ச்ரேயஸ்கரம். ராமாயணபடனத்திலும் உத்தரகாண்டம் படித்து முடிப்பதில்லை. சிலர் உத்தரகாண்டத்தைப் படித்துப் பின் பட்டாபிஷேகஞ் சொல்லிமுடிப்பதுமுண்டு. பாகவதத்திலும் ஸ்வர்க்காரோஹணத்தைக் கூறிப் பின் க்ருஷ்ணவதாரத்தைச் சொல்லி முடிப்பது வழக்கம். இதுபோல் உபநிஷத்திலும் சந்யாச லக்ஷணங் கூறிப் பின் மங்களமாக க்ருஹஸ்தலக்ஷணங் கூறி முடித்ததுங் கவனிக்கத்தக்கது.

சு. புஸ்தகரீதி. நூறு பாட்டுக்களுக்கும் முதலில் அவதாரிகையும், பின் பாட்டுக்களின் அந்தர்க்கதமான நீதிகளும், ஒவ்வொரு மகுடத்தின் முதலிலும் அவ்வப்பாட்டின் கதைக்கேற்ப ஸ்வாமிக்கு விசேஷணமும் தாற்பர்ய விளக்கமும் கடைசியில் அனுபந்தமும் ஏற்படுத்தியிருப்பது புஸ்தக அமைப்புக்கு அழகாகவும் படிப்பவர்க்கு ஸுலபமாகவும் இருக்கிறது.

இப்புஸ்தகத்தில் ஞானுகாசமாகிய சிதம்பரத்துக்கு ஏற்பட்ட கௌரவமான மகுட அமைப்பும் சிதம்பரம், பாசுபத

க்ஷேத்ரமாகிய திருவேட்களம் என்னும் சின்னங்களும் சமீபத்தில் ஏற்பட்ட சிதம்பரம் யூனிவர்ஸிடியாகிய ஞானநிலயத்தையும் அதன் ஸ்தாபகரான ராஜபட்டம்பெற்ற ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்களது உதாரகுணத்தையும் அவரது குலதேவதையையும் ஞாபகிப்பதாக எனக்குத் தோற்றுவதால் இந்நூல் இந்த யூனிவர்ஸிடியில் முதல்நூலாக அங்கீகரிக்கப் படுமென்றும் நினைக்கிறேன். அன்றியும் அவரது கலாசாலைகளிலும் இந்நூலரங்கேறியதும் பொருத்தமான காரணமுடையதாகின்றது.

ரு. சென்னை பாடபுத்தகக் கமிட்டிக்குத் தகுதி. இது மாணவர்களுக்குத் தெளிந்த நடையில் உபயோகப்படுமாறு அமைக்கப்பட்டிருத்தலால் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் பாடபுத்தக அமைப்பில் ஏற்படுத்தக்கூடிய நூலென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

ச—ரு—உகூ.	இப்படிக்கு,
ஸ்ரீ மீனாக்ஷி ஸம்ஸ்க்ருத காலேஜ்	(ஒப்பம்) சிவ. தண்டபாணி
சிதம்பரம்.	ஸ்வாமி தீக்ஷிதர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம் ப்ரம்ஹஸ்ரீ உபந்யாஸரத்நாகரம்

ஸி. எஸ். சிவகாமசுந்தர தீக்ஷிதர் அவர்கள் எழுதிய சிறப்புப்பாயிரம்.

ஆஸ்திக சிகாமணிகளாகிய எனதன்பர்களே!

க. அநேக ஜன்மங்களிற் செய்த புண்யமிகுதியால் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அடையத்தக்க புருஷார்த்தங்கள் நான்கு. அவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பனவாம். அவற்றுள் தர்மம் முதலிய புருஷார்த்தங்கள் மூன்றும் உண்டாக்கப்படுதலாலும், உண்டாக்கிய பொருள் அழிவுடையதென்பது "யத் க்ருதகம் தத் அநித்யம்" என்ற ந்யாயத்தாலும் புண்யகர்மங்களைக் குறைவின்றிச் செய்தவர்கள் ஸ்வர்க்காதி லோகங்களை யடைந்து, தத்தம் கர்மங்களுக்கேற்றவாறு புண்யபோகங்களை யநுபவித்துத் திரும்பவும் இப்பூவுலகத்திற்கே வருகின்றனரென்பதை "க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விசந்தி" என்ற ச்ருதி செப்புதலாலும், தர்மாதி புருஷார்த்தங்கள் மூன்றும் அழிவுடையனவென்பது திண்ணம். மோக்ஷம் என்ற நான்காவது புருஷார்த்தத்தை யடைந்தவன் அதிலிருந்தும் திரும்புகின்றானில்லை யென்பதை "ந ஸ புனரா வர்த்ததே" என்கிற ச்ருதி செவ்வனே செப்புதலால் மோக்ஷம் என்ற நான்காவது புருஷார்த்தமே மிக மேலாகியதென்பதற் கையமில்லை.

உ. இத்தகைய பெருமை பொருந்தியதும், நித்யானந்த ஸ்வரூபமாயுமுள்ள முத்தியைப் பெறுதற்கு ஆசார்யனுடைய உபதேசமே முக்ய காரணமென்பதை "ஆசார்யவான் புருஷோ

வேத'' என்ற ச்ருதி மிகக் கருணையோடு கூறுகின்றது. ஆசார்யனேவென்றால் ஆனந்தாத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் பெற்றவனாக விருக்கவேண்டுமென்பதை "ப்ரம்ஹ வித் ப்ரம் ஹைவ பவதி'' "ப்ரம்ஹ விதாம் வரம் ப்ரணம்ய'' "ஆத்ம தத்வம் அநுப்ரூஹி இதி பப்ரச்ச'' என்கிற ச்ருதிகள் செவ்வனே விளக்குகின்றன. இத்தகைய ஆனந்தாத்ம ஸாக்ஷாத்காரம் "ப்ரஜ்ஞானம் ப்ரம்ஹ'' "அஹம் ப்ரம்ஹ அஸ்மி'' "தத்வம் அஸி'' "அயம் ஆத்மா ப்ரம்ஹ'' என்பனவாகிய வேதாந்த மஹாவாக்யங்களாற்றான் உண்டாகவேண்டுமென்பதை "தம் துஔபநிஷதம்'' என்ற வாக்யம் வற்புறுத்துகின்றது.

ங. இங்கு இவ்விதம் ஒருவாறு சுருக்கி வரைந்த மஹாவாக்யங்களையும், அதன் அர்த்தங்களையும் வெளியிடுகின்ற வேதங்கள் பலவென்பதை "அனந்தா வை வேதா:'' என்ற ச்ருதியிற் காணலாம். கூறியவாறு வேதங்கள் அனந்தங்களாயிருந்தபோதிலும் ரிக்வேதம் இருபத்தொரு சாகைகளையும், யஜுர்வேதம் நூற்றொன்பது சாகைகளையும், ஸாமவேதம் ஆயிரம் சாகைகளையும், அதர்வவேதம் ஐம்பது சாகைகளையும் உடையனவென்பதை முக்திகோபநிஷத்திற்காண்க. கூறிய ஆயிரத்து நூற்றெண்பது சாகைகளுக்கும் தனித்தனியே ஒவ்வொரு உபநிஷத்து உண்டு. அவை வேதங்களினிறுதியிலிருத்தலால் வேதாந்தம் என்று பெயர் பெற்றன. இவ்வேதாந்தங்களில் கர்மம், உபாஸனம், ஜ்ஞானம் என்ற மூன்று ஸாதனங்களும் ஆங்காங்கு அதிகாரிகளின் புத்திக்கேற்றவாறு ப்ரகாசிக்கின்றன.

ச. இவ்வேதாந்தங்களை சிக்ஷை, கற்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்ற ஷடங்கங்களைக் கசடறக்கற்றவன்றான் அறியமுடியுமென்பதை விரிக்கிற் பெருகும். நிற்க, கூறியவாறு ஷடங்கங்களைக் கசடறக்கற்றவனு

யிருந்தபோதிலும் இதிஹாச புராணங்களின் உதவியால் வேதார்த்தங்களை நிர்ணயிக்கவேண்டுமென்பதை "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரம்ஹயேத்" என்ற வாக்யம் விளக்குகின்றது. "இதிஹாஸ புராணாப்யாம்" என்ற வாக்யத்தில் இதிஹாஸத்தை முன்பும், புராணத்தைப் பின்பும் கூறியிருத்தலால் புராணத்தைக் காட்டிலும் இதிஹாஸம் அத்யாவச்யகமென்பது ஆன்றோர் கருத்து.

ரு. "பாரதஃ பஞ்சமோ வேதஃ" என்ற வாக்யத்தால் பாரதம் ஐந்தாம் வேதம் என்று ஏற்படுகிறது. "வேதாந் அத்யாபயாமாஸ மஹா பாரத பஞ்சமாந்" என்ற வாக்யத்தால் வேதாத்யாபனம் எவ்வளவு ஆவச்யகமோ பாரதாத்யாபனமும் அவ்வளவு ஆவச்யகமென்பது மஹான்களின் அபிப்ராயம் என்று தோன்றுகிறது.

சு. இத்தகைய மஹாமஹிமை வாய்ந்த ஸ்ரீமந் மஹா பாரதத்தை மஹாயோகியும், ஸர்வஜ்ஞரும், ஈச்வரதுல்யரும், உற்பத்தி முதலிய ஆறு குணங்கள் நிரம்பப்பெற்றவருமாகிய ஸ்ரீமத் வேதவ்யாஸமுனிவர் தமது ஸாமர்த்ய விசேஷத்தால் இயற்றினரென்பது "அயம் ஸாக்ஷாத் மஹாயோகீவ்யாஸஃ ஸர்வஜ்ஞ ஈச்வரஃ மஹாபாரதம் ஆச்சர்யம் நிர்மமே பகவான் முநிஃ" என்ற வாக்யத்திலிருந்தும் வெளியாகின்றது.

எ. இம்மஹாபாரதத்தில் துஷ்டநிக்ரஹ நிர்வாஹத்தைத் தெளிவுபெறத் தெரிவிக்கும் மஹா யுததலக்ஷணங்களும், சிஷ்டபரிபாலனத்திற்கேற்ற அநேக அத்யத்புத ஆக்யாயிகைகளும், கங்கைமுதலிய மஹாதீர்த்தவைபவங்களும், ப்ராஹ்மண-க்ஷத்ரிய-வைச்ய-சூத்ராதி வர்ணதர்மங்களும், ப்ரஹ்மசர்ய-கார்ஹஸ்த்ய-வாநப்ரஸ்த-ஸந்யாஸாதி ஆச்ரம தர்மங்களும்; நித்ய-நைமித்திக-காம்ய-கர்மஸ்வரூபங்களும், அச்வமேதாதி மஹாயாக ஸ்வரூபங்களும், ஆத்மஜ்ஞானத்திற்கு அந்தரங்க ஸாதனமாயுள்ள அநேக சரித்ரங்களும், ஸர்வ

தேசத்தினராலும் ஸர்வமதத்தினராலும் நன்கு போற்றப் படும் கீதாரத்னமென்ற ஸ்ரீமத் பகவத்கீதா சாஸ்த்ரமும் மிகக் கம்பீரமாக ப்ரகாசிக்கின்றன.

அ. இவ்வளவு மஹிமை பொருந்திய இம் மஹாபாரத சரித்ரத்தை வடமொழி நூலாசிரியர்களிற் பலர் பத்யரூபமாக வும், கத்யரூபமாகவும், கத்ய-பத்ய-உபயரூபமாகவும் எழுதி யிருக்கின்றனர். இம்மஹாபாரதம் தென்மொழியிலும் பல நூலாசிரியர்களால் செய்யுள்வடிவமாகவும், வசனவடிவமாக வும், செய்யுள்வசன உபயவடிவமாகவும் எழுதப்பெற்றிருக் கின்றது.

கூ. ஆனால் இவை மிக்க விரிவாக விருத்தலால் நூல் அளவில் சுருக்கமாகவும், விஷயங்களைத் தருவதில் மிகப் பெரி தாகவும் உள்ள மஹாபாரதச் செந்தமிழ் நூல் ஒன்று நம் தமிழ்மக்களுக்கு அத்யாவச்யகமென்பதை நான் பல நூலா சிரியர்களிடம் தெரிவித்ததுண்டு.

க0. அதற்கேற்ப நமது ப்ரம்ஹஸ்ரீ வித்வான் என். கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்கள் முற்கூறியவாறு நூல் அள வில் சுருக்கமாகவும், விஷயங்களைத் தருவதில் மிகப் பெரிதாக வும் உள்ள இம் "மஹாபாரத சதகத்தை" எழுத ஆரம்பஞ் செய்யும்பொழுது என்னிடம் காண்பித்தார். நான் அச்சமயம் இவர்களிடம் சொன்னதாவது: ஒவ்வொரு பக்கத்தில் ஒவ் வொரு செய்யுளும், அதன் குறிப்புரையும் அடங்கும் முறை யில் எழுதி அச்சிற்பதிப்பித்தல் இக்காலத்திற்கு ஏற்றதாகு மென்பதை வற்புறுத்தினேன். அதற்கிணங்க அச்சிட்ட விஷ யத்தில் எல்லோருக்கும் அநேக உபகாரமுண்டு. இதுபோ லவே இரண்டாம் பதிப்பில் ஒவ்வொரு செய்யுளின் உட் பொருளை வசனவடிவமாக மற்றொரு பக்கத்தில் பதிப்பித்தல் மிக்க நலமென்பதை இச்சமயம் வற்புறுத்தியுள்ளேன். இரண் டாம் பதிப்பில் நாம் அவ்விதம் காணலாம்.

கக. வடமொழியிலும், தென்மொழியிலும் ஆற்றலுள்ள மேதாவிகள் இம் "மஹாபாரத சதகத்தை" உற்று நோக்கின் மனமாறப் போற்றுமலிருக்கமுடியாது.

கஉ. இந்நூலைப் பார்க்கும்போது "மஹாபாரத சதகம்" என்ற வ்யாஜத்தால் ஸ்ரீமத் ஸரஸ்வதியே இந்நூலாசிரியர்க்கு "தமிழ் ஸம்ஸ்க்ருத ஸம வித்வான் டைடிலைக்" கொடுக்கப் புகுந்தனளோ! அல்லது ஸ்ரீமத் வேதவ்யாஸர் த்வாபரத்தில் வடமொழியில் தாம் இயற்றிய "மஹாபாரதம்" மிக விரிவெனக் கருதி, இக்கலிக்கேற்றவாறு கிருஷ்ணனுகத் தோன்றித் தென்மொழியில் நூல் அளவில் மிகக் குறுகியதும், பொருளளவில் மிகப் பெரியதுமாகிய "இம் மஹாபாரத சதகத்தை" இயற்றினுரோவென்றும் ஆலோசிக்கத்தக்கதாகவிருக்கிறது.

கங. நூறுயிரஞ் செய்யுட்களின் கருத்தை நூறு செய்யுட்களிற் பொருத்தியது அருமையினுமருமையே. அன்றி, ஸர்வலோக சரண்யரும், ஸர்வஜ்ஞரும், ஸர்வ தேவாதிதேவருமாகிய ஸ்ரீமந் நடராஜமூர்த்தியை ஒவ்வொரு செய்யுட்களினிறுதியில் முகுடமாக அமைத்தது கவிச்சக்ரவர்த்திகளின் ஆழ்ந்த அபிப்ராயத்தை வெளியிடுகின்றது. அன்றியும் ஸர்வ சேதனுசேதன ப்ரகாசகராகிய ஸ்ரீமந் நடராஜரிடம் அகாராதி ஸர்வ சப்தங்களும் தோன்றி, இறுதியில் அவரிடமே லயிக்கின்றனவென்பதற்கிணங்க இம் "மஹாபாரத சதகமும்" ஸ்ரீமந் நடராஜபாத ஸம்பந்தத்துடன் முடிக்கப்பெற்று ப்ரகாசிக்கின்றது.

கச. பரமகருணுநிதியாகிய பரமன் ஸர்வமங்களகரமாகிய "அ" காரத்தை ப்ரணவத்திலும், வேதத்திலும் முதன்முதலில் உச்சரித்தார். இதற்கேற்ப பகவான் கிருஷ்ணரும் "அக்ஷராணும் அகாரோஹம்" என்று அர்ஜுனனுக்கு உபதேசித்தார். இக்காரணம்பற்றியே வ்யாஸாதி மஹரிஷிகளும் தத்தம்

ப்ரபந்தங்களின் ஆரம்பத்தில் "அ" காரத்தை ப்ரயோகித்தனர்.

கரு. தென்மொழியில் திருவள்ளுவர், ஔவையார் முதலிய கவிகுல சிகாமணிகளும் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களின் ஆரம்பத்தில் "அ" காரத்தை முதலாகக் கொண்டனர்.

கசு. இங்ஙனங்கூறிய சிஷ்டாசாரத்திற்கேற்க நமது ப்ரம்ஹஸ்ரீ வித்வான் என். கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்களும் பாரதத்தின் முதலக்ஷரமாகிய "ப" காரத்தையும், முற்கூறிய வாறு மஹா மஹிமைபொருந்திய "அ" காரத்தையும் "பா" என்ற ஓரக்ஷரத்தில் பொருத்தி "பாரிட்டமுடனேத்து பண்புடைய நல்லறம்" என்று ஆரம்பித்து "இம் மஹாபாரத சதகத்தை"ச் செவ்வனே முடித்திருக்கின்றனர்.

கஎ. ஆதலால் இந்நூலாசிரியர்க்கும், இந்நூலை அன்புடன் நோக்கும் நம் தமிழ் மக்களுக்கும் ஸர்வமங்களங்களும் பெருக எல்லாம் வல்ல ஸ்ரீமந் நடராஜராஜரை எனது உள்ளன்புடன் ப்ரார்த்திக்கின்றேன்.

சுக்லஹு	இங்ஙனம்,
பங்குனிமீ உருவ	உடங்யாஸரத்னகரம்
ஸோமவாரம்.	ஸி. எஸ். சிவகாமஸுந்தரதீக்ஷிதர்.
எ—ச—ககூகூ0.	சிதம்பரம்.

உ

சிவமயம்.

சிதம்பரம் நாவலர் தமிழ்க்காலேஜ் பிரின்ஸிபாலும் உரையாசிரியருமாகிய

ம. க. வேற்பிள்ளை அவர்கள் எழுதிய சிறப்புப்பாயிரம்.

பாரதசதகமென்னும் இந்நூலாசிரியர் என். கிருஷ்ண மூர்த்தி அய்யர் என்பவர். இச்சிதம்பரத்திலேயே பிறந்தவர். சிதம்பரம் நாவலர் தமிழ்க்கலாசாலையில் பலவருடம் என்னிடத்தும் ஏனைக் கலாசாலை ஆசிரியர்களிடத்தும் தமிழிலக்கண இலக்கியங்களும் ஸம்ஸ்கிருத காவ்யநாடக வ்யாகரணங்களும் சிறக்கக் கற்று கக௨உ-இல சென்னை ஸர்வகலாசாலையாரது ஓரியண்டல் வித்வான் பட்டப்பரீக்ஷையில் தேறியவர். இப்போது இக்கலாசாலையிலேயே வித்துவான் வகுப்புக்களில் தமிழ் உபந்யாசகராக இருப்பவர். இவர் காரிகை கற்றுக் கவி பாடத் தொடங்கும்போதே, தாம் பயிலும் வடமொழிச் சுலோகங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது வழக்கம். அப்பழக்கம் அநேக வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும் மொழிபெயர்ப்பு நூல்களை வடமொழியோடு கலந்து சொல்வதற்கும் வல்லமை தந்ததோடு இன்னோரன்ன நூல் செய்திறனைத் தந்ததற்கும் நான் மகிழ்கின்றேன்.

இப்பாரதசதகம் வடமொழி வ்யாசபாரதத்தின் அநேக கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு வில்லிபுத்தூரர் பாரதத்தையுந் தழுவி எழுந்தமை நன்கு புலப்படுகின்றது. பாரதம் சிவவிஷ்ணுக்களின் மகிமை இரண்டையும் உணர்த்துவதேனும் ஸாரக்ரஹணத்தால் சிவோத்கர்ஷமுடையதென்பது ஸ்ரீலஸ்ரீ அப்பய்யதீக்ஷிதரவர்கள் கூறிய பாரதசிவோத்கர்ஷமென்னும்

கட்டுரையாலும் இந்நூலாசிரியர் கூறிய வதுக்களாலும் இனிது விளங்கும். இன்னும் வில்லிபுத்தூரார் கூறிய "மன்னு மாதவன் சரிதையு மிடையிடை வழங்கும்'' என்புழி மன்னும்—மாதவன் என்றும் மன்—உமாதவன் என்றும் பதச்சேதமுண்மையுமுறிக.

யதோத்தேசபக்ஷம், கார்யகாலபக்ஷம் என்பனவற்றைச் சிவஞானமுனிவர் அரசன் இருந்துழியிருந்து தன்னிலமுழுதுந் தன்னுணை செல்வித்தலும் மந்திரி முதலிய தண்டத்தலைவர் செல்வுழிச் சென்று தமதாணை செல்வித்தலும் போல் என்று கூறுமாறு கைலாசவாசியாகிய ஸ்ரீகண்ட பரமசிவன் தன் சந்நிதியிலபசாரப்பட்ட இந்திரரைவரைக் குகையில் வைத்துப் பதியைக் கொடு என்று விதிவயத்தால் ஐந்துதரங் கேட்ட நாளாயனிக்கு அவரைவரையு மணாளரெனத் தந்த கதையாலும், அர்ஜுனன் முதலியோரது சிவலிங்கபூஜையாலும், அர்ஜுனன் செய்த தவத்துக்குருகி அவனோடு திருவிளையாடலாகப் போர்செய்து பாசுபதமீந்தமையினாலும், பாண்டவர் சூது சபையினின்றும் வெளிவந்தபோது தௌம்யர் பலன் கருதி ருத்ரயாமளங் கூறிப்போனார் என்னுஞ் சரிதையாலும், கோஷயாத்ரையில் அவமானப்பட்ட துர்யோதனன் மனமாழ்கிப் ப்ராயோபவேசஞ் செய்தபோது அசுரர்கள் அவனைப் பாதாளலோகங் கொண்டு சென்று மகேச்வர வரப்ரசாதங் கூறி மனமகிழ்வுறுத்தலாலும், சிவன் தந்த வில், கதை, கொன்றைமாலை, வாள் இவற்றைக்கொண்டு சிவேதன், ஜயத்ரதன், அசுவத்தாமன் முதலியோர் பிறரை வென்றமையாலும், பாசுபதத்தாலேயே வெலற்கரும் பகைகளை அர்ஜுனன் வென்றமையாலும் க்ருஷ்ணன் உபமந்யுவிடத்துக் கேட்ட சிவோகம்பாவனை முதலிய மந்திரங்களை கரு-ம் நாள் இரவில் அர்ஜுனனுக்கு உபதேசித்து உடனே கனவில் மீட்டும் பாசுபதமறை பெறுவித்தமையினாலும், பீஷ்மர் குறிப்பின்படி

க்ருஷ்ணன் பாண்டவர்க்குத் தான் கேட்ட சிவஸஹஸ்ர நாமங்களையும் சிவமகிமையையும் ஆநுசாஸிகபர்வத்துக் கூறுவதாலும், கண்ணன் சிவோபாசனையால் ஸாம்பன் என்னுங் குமாரனைப் பெற்றமையாலும், மாலையில் ஜயத்துடன் வந்த தருமர் சேனையில் இரவில் அசுவத்தாமாவால் உபபாண்டவர்வதம் த்ருஷ்டத்யும்னாதியர் வதம் நிகழ்ந்தபோது தருமர் கண்ணனைப் பார்த்து ஏது வினவக் கண்ணன் இது ருத்ர கோபப்ரசாதம் எனவும் தக்ஷயாகத்தின் குறையான தேவாசுரயுத்தம் இப்பாரதயுத்தமென்றுங் கூறிய சௌப்திக பர்வாவின் முடிவத்தியாயத்தாலும், வ்யாசரனுமதிப்படி அசுவமேதயாகஞ் செய்யவேண்டித் தருமர் வடக்குநோக்கிச் சென்று த்ரியம்பகனை உபாசித்துச் சுவர்ணபாண்டாகாரங்களைப் பெற்று மீண்டாரென்னுஞ் சரிதத்தாலும் ஜயத்ரதனிட்ட கொன்றைமாலையைச் சிவன்கோடு கடவேனென்ற அபிமன்யுவின் உறுதியாலும், ஸ்வர்க்கஞ் சென்ற தருமர் த்ரௌபதியை ஆலிங்கனஞ் செய்யச் சென்றபோது இந்திரன் "த்ரியம்பகனால் திருவாகிய இவள் பூமியில் உங்கள் போகார்த்தம் அனுப்பப்பட்டாள்" என்பதனாலும் பிறவாற்றாலும் பாரத சிவோத்கர்ஷம் வெள்ளிடைமலைபோல் விளங்கித் தோன்றும்.

இன்னும் இந்நூலாசிரியர் பாரத நடராஜ சம்பந்த விமர்சனம் என்னுந் தலையங்கத்தில் (கoக) நடராஜனுக்குங் கதைக்குஞ் சம்பந்தங் கூறியதும் பொருத்தமானதே. கைலாசாதிபதிக்குச் சம்பந்தம் யதோத்தேச பக்கநியாயமென்பதும் பூலோக கைலாசம் கலிக்குக் கயிலை தில்லை என்பதும் ஆன்றோர் வழக்கை அனுஸரித்தனவே. கயிலைக்குப் போன அப்பர்சுவாமிகளைத் தாமே தடுத்துக் குளத்தில் மூழ்குவித்துத் திருவையாற்றி னெழச்செய்து தெற்கே கயிலையைக் காண்பித்த ஈசனார் திருவருள் ஈண்டுக் கவனிக்கற்பாலது. இன்னும் சிதம்பரம் பூலோக கைலாசமென்றும் திருக்கழிப்பாலை அர்ஜுனன்

தவஞ்செய்த இந்த்ரகீல பர்வதமென்றும் அர்ஜுனன் பன்றியைத் தொடர்ந்தபோது சிவபெருமான் வேடனாய் வந்து யுத்தஞ்செய்து பாசுபதமீந்தவிடம் திருவேட்களமென்றும் பாரத கதை தழுவிய க்ஷேத்ர அமைப்பாலும் எல்லாத் தலத்தேவாரங்கட்கும் திருச்சிற்றம்பலம் முதற்கண் ஓதப்படுவதாலும் சிதம்பரத்தைக் கயிலையாக்கி நடராஜருக்குப் பாரதத்தைத் தோத்திரத்திலமைத்துப் பொருத்தியது மிகவும் பொருந்துவதேயாம்.

இனி நடராஜர் பாதத்துக்கும் பாரதத்துக்குஞ் சம்பந்தங் கூறிய கலித்துறையில் அவரது ஆடியபாதத்தில் பரதநாட்டியமான பாரதம் அடங்கிநின்றபடியால் பரதவம்ச சரிதமான பாரதமும் அடங்குமென்பதும் சிற்றம்பலத்திற் பேருருவன் அடங்கும்போது பெரும்பாரதம் சதகத்திலடங்கிற்றென்பதும் சிலேடையினும் எதுவினும் மிகச்சிறந்ததாதல் யாவர்க்கும் விளங்கும்.

இதுவரை இதுபோன்ற பாரதராமாயணநூல்கள் சிறுவர்கள் சற்றற்குரிய தன்மையில் அமையாததுபற்றி இந்நூல் பெரிதும் தமிழ்பயிலு மாணவர்கட்குப் பயன்படுமென்று நினைக்கிறேன். இவர் இம்மாதிரி ராமாயண சதகமொன்றும் வான்மீகிமுனிவர் கருத்தையும் கம்பர் போக்கையுந் தழுவி ஆரம்பித்திருப்பதையுங் கண்டேன். அதுவும் சீக்கிரத்தில் இனிது முடிந்து வெளிவருதலை எதிர்பார்க்கின்றேன்.

பாரதசதகத்தில் ௧00 தலையங்கம் வகுத்து அவ்வப்பாட்டின் கருத்துக்களைக் காரியமாகவும் மகுடத்தில் ஈசுவர குணங்களினொன்றைக் காரணமாகவும் காட்டிய அமைப்புப் பொருத்தமாகவே நினைக்கவேண்டி யிருக்கிறது.

இன்னும் அணிவகுப்புக் கூறும்போது "தகைபெற்ற வீதியிற் றூரணித்தேரின் வருவோன்" என்று திரிபுரத்துக்

காகச் சிவன் பேரணி வகுத்ததையும், நிலவறை சமைத்து உண்ணின்ற ஜயத்ரதன் வெளிவந்தபோது "தருமனே வயிர்த் தவர்கள் சாருமிடமமையாத" என்று ஈசனது துஷ்டநிக்ரகத் தையும், அர்ஜுனன் போர்செய மறுத்தபோது "சான்றவர் தீவினையினஞ்சுபொழுதுண்மகிழ்" என்று தீவினைக்கஞ்சு வோரைச் சிவனுவக்குந் திறத்தையும் சிவன் கதை அபிமன் புவை வென்றபோது "தந்தைக்கு நிகர் தனயரென்னு முறை நாட்டுறாஉம்" என்று தன்னுயிர்க்கு நிகர் உயிர்போலும் பிற பொருள் என்பதையும் இங்ஙனம் ஒவ்வொரு கவியினும் கூறிய மகுடங்களின் கருத்துக்களை ஊன்றிப் பார்க்கும்போது நூலாசிரியரின் நுணுகிய ஆராய்ச்சி யாவர்க்கும் புலனாகும்.

இனிப் பதினெட்டு நாட்போர் கூறுமிடத்து இத்தனை யாவது நாள் என்பதைக் குறிக்க மகுடத்தில் வைத்த எண் ணும் ஈசுவரியாகிய சிவகாமசுந்தரியம்பிகையின் திவ்ய சொரூ பங்களும் குறிப்பிடத்தக்கன.

இன்னும் யதோத்தேசபக்ஷ நியாயத்தால் நூன்முதலில் தில்லைநடராஜர் வணக்கங்கூறி ஆங்காங்குக் கண்ணன் செய்கை வருமிடந்தோறும் காரியகாலபக்ஷத்தை யனுசரித்துக் கண்ண னைச் சிறப்பித்ததும் முதல் ஐம்பத்தொரு செய்யுட்களில் ருத் ராம்சம் வெளிப்பட்டதாக வைத்து "ஐம்பத்தொரக்ஷர சொரூபன்" என்று முற்கூறியபடி (உ௦ செ.) ஈற்றிலும் "தகை பெற்ற நீதியிற் றுரணித்தேரின்வரு தண்ணருட் சிவகாமி சேர்...நடராஜனே" எனச் சிவம்பத்தை விளக்கியும், பின் வீட் டுமபருவத்தில் கீதையின் கருத்தையும் விஷ்ணுவின் விச்வ ரூபத்தையும் வர்ணித்து "தன்வண்ணமொன்றினிற் றண்டுழா யவனோடு தண்ணருட் சிவகாமிசேர்...நடராஜனே" என ஹரி யர்த்தர் வடிவில் விஷ்ணுவைச் சிறப்பித்தும், பின் துரோண பர்வத்தில் துரோணரைப் பிரமனோடொப்பிட்டுப் பிரமஸ்

துதியாக அமைத்தும் முக்கடவுளரையும் போற்றிச் சென்றது இந்நூலின் ஆழ்ந்த கருத்தையுணர்த்தும்.

பாரத கதைகளை விட்டிசைத்தலின்றித் தொடர்புகாட்டியமைத்ததும் ஒரு சிறு கதையையும் விடாமையும் பலபாட்டுக்களிலடங்கக்கூடிய கருத்துக்களைச் சுருங்கச் சொல்லற் செறிவு பற்றியும் அணிநயம் பற்றியும் ஒருபாட்டிலடங்கக் கூறியதும் மாணவர்களின் ஞாபகத்தினின்று தக்க பயனைத் தருவனவாம்.

அணிவகுத்து நின்ற அர்ஜுனன் போர்செய மறுத்த போது கண்ணன் கூறியதாகக் கூறப்பட்டிருக்கும் ச பாட்டுக்கள் கீதையின் உள்ளக்கிடக்கையை நன்கு புலப்படுத்துவன. இன்னும் இந்நூலிலுள்ள ச00 பாட்டுக்களின் தலையங்கத்தின் கீழ்க் குறிப்பிட்ட பாட்டினுள்ளுறையாகிய நீதிகளும் அவ்வப்பாட்டுக்களின் கீழெழுதிய இன்றியமையாக் குறிப்புரைகளும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்கவை.

இந்நூலின் முடிவிற் சேர்க்கப்பட்டிருக்கும் அனுபந்தமாகிய பாரதீய நாமவிமர்சனம் என்னுங் குறிப்புரைகள் முதனூல் அனுபவமுடையார்க்கன்றி விளங்காமையின் அக்குறிப்புக்கள் எல்லார்க்கும் அத்யாவசியக மானவைகளேயாம்.

வேதத்தைக் கற்றற்குரியரல்லாரும் கற்பவரினும் அதன் பொருளுணர்ந்துகொள்ள மாட்டாதாரும் வேதக் கருத்தை உணர்ந்துகொள்ளும்படி வேதம் வகை செய்த வியாசரே கூறியதாலும் ஐந்தாம் வேதமென்னும்படி நான்கு புருஷார்த்தங்களும் அடங்கியிருப்பதாலும், ஏனைப் புராணேதிகாசக்கதைகளையுந் தன்கணுடைமையாலும் பாரதத்தைக் கல்லாதார் ஒன்றுமுணரார்.

ஆதலின் அப்பாரதக்கதை முற்றும் ஒருவாறு முன்னருணர இவ்வழிநூல் மாணவர்கட்கு மிகவும் உபயோகமாமென

மதிக்கின்றேன். மௌசலபர்வம், மகாப்ரஸ்தாநிக பர்வம், ஸ்வர்க்காரோஹண பர்வம் மூன்றும் பாண்டவக்ருஷ்ணர்களின் முடிவையுணர்த்தலின் அவற்றைவிட்டுத் தர்மராஜ்ய பட்டாபிஷேகம்வரை கரு பர்வங்களின் கதைகளைச் சுருங்கச் சொல்லலென்னும் வனப்புப்பற்றி இனிது முடிந்த இந்த நூலைத் தமிழகத்தோர் நன்கெதிர்கொள்வதோடு துரைத்தனத்தாரும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் பாடபுத்தக அமைப்பில் ஏற்றுக்கோடற்குரியதென்றுங் கூறி எனதபிப்பிராயத்தை வெளியிடுகின்றேன். சுபம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வறங்க ளின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

நாவலர் காலேஜ் }
உஅ-கக-உஎ. சிதம்பரம். }

(ஒப்பம்)
ம. க. வேற்பிள்ளை.

உ

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க்காலேஜ்
லேட் பிரின்ஸிபால்
ப்ரம்மஸ்ரீ மகாமகோபாத்யாய
உ. வே. சாமிநாதையரவர்கள் அபிப்பிராயம்.

மகா-ா-ா-ஸ்ரீ. வித்வான் கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்களால் இயற்றப்பெற்ற ஸ்ரீ மகாபாரத சதகம் முதலியவற்றையும் அவற்றிற்குப் பல அறிஞர்கள் கொடுத்திருக்கும் அபிப்பிராயங்களையும் பார்த்தேன். அந்த அபிப்பிராயங்களாலேயே இந்நூல் தமிழ்நாட்டிற்கு மிக்க பயனையளிக்குமென்பது யாவருக்கும் தெரியவரும்.

இது தமிழிற் புதுமுறையில் அமைந்திருக்கின்றது. இதன் ஆசிரியர் பழைய கவிகளின் வாக்கியங்களையும் இடையிடையே அமைத்திருத்தல், "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பதற்கு இலக்கியமாகவுள்ளது.

மிக விரிவான பாரதகதையைச் சுருக்கி நூறுசெய்யுளாகப் பாடப்பட்டிருத்தலால், இந்நூல் அக்கதையை விரைவில் யாவரும் தெரிந்துகொள்வதற்கும் பாடஞ்செய்து ஞாபகப்படுத்திக்கொள்வதற்கும் அநுகூலமாக விருக்குமென்பது எனது கருத்து. ஒவ்வொரு செய்யுளின்பின்பும் எழுதப் பட்டிருக்கும் குறிப்புக்கள் படிப்போருக்கு உபகாரமாக இருக்கும்.

ந-கூ-கககூந0.	}	இங்ஙனம், வே. சாமிநாதையர்.

உ

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ் தமிழ்ப்பண்டிதரும
சேதுஸமஸ்தான வித்துவானுமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ
சர்க்கரை ராமசாமிப் புலவரவர்கள் இயற்றிய
சிறப்புப்பாயிரம்.

சீர்கொண்ட பங்கயத் திற்சங்கு தரளத்தி
னைச்சொரிந் துறைதலன்னஞ்
சேக்கைதனின் முட்டையீன் றடைகிடக் குஞ்செய
றெரிக்குந் தடங்கள் புடைசூழ்
பார்கொண்ட கயிலாய மென்றமரர் தொழுசிதம்
பரநகரில் வாழும்வேத
பாரகன் செந்தமி ழிலக்கிய விலக்கணப்
பரவைநிலை கண்டசுகுணன்
நார்கொண்ட சிந்தையிற் சிற்சபா நாதர்பத
நளினத்தை மலரவைத்தோன்
நாவலர் கலாசாலை யாசிரிய னமுதென்ன
நாற்கவியு மோதுகஞ்சத்
தார்கொண்ட தோட்கிருட் டினமூர்த்தி பருணிதன்
றகையுளோர் போற்றக்கதா
சாரமெல் லாம்பெறப் பாரதசு தகமொன்று
தந்திசை படைத்தனனரோ.

—∘∘※∘∘—

உ

சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி கீழ்த்திசைப் போதனாமுறைக் கல்லூரி போதகாசிரியர்

திருவாளர் கந்தசாமியாரவர்கள் இயற்றிய நிலைமண்டில வாசிரியப்பா.

பூமலி கற்பகக் காமலி பொன்னக
ரென்னத் தேவர் முன்னிப் படர்தருந்
தில்லையம் பதிவா ழெல்லையி றவமுறு
மந்தணர் குலத்து நந்தலில் புகழொடு
வந்தவ தரித்தோ னிந்துவாழ் சடைமுடிப்
பண்ணவ னிணையடி கண்ணுமெய் யன்பன்
அருட்டிறஞ் செறியுங் கிருட்டின மூர்த்தியென்
றறைதரு பெயரோன் மறைதரு வியாதன்
கறைகெழு மறிவு முறைபிறழ் செயலு
முற்றிடு முயிர்கள் நற்றிறம் படர
வோதுபா ரதத்துளார் கோதறு பொருளுங்
கல்வியி னுயர்தரு வில்லியன் றருளிய
பனுவலின் பொருளு நனிசிறந் தொளிரப்
பப்பறு பாரத திப்பிய சதக
மென்றொரு நூலை நன்றுற யாத்து
அம்மை மீனாட்சி செம்மைசால் பெயரால்
நாட்டிமெய்ப் புகழ்செறி கீட்டிசைக் கல்வி
போதனா முறைசெறி போதமார் பள்ளியேய்
கழக மதனிற் புளகறு மிருமொழிப்
பாவலர் புகழ நாவலர் மகிழ
அரங்கேற் றினனால் வரங்கொள நமர்கள்
ஏத்துறும் புகழ்செறி கூத்துடை யெம்மிறை
அருளி னிவன் றெருளுறு நலனும்
நீண்ட வாயுளுங் காண்டக வெய்தி
ஊழிதோ றூழி வாழி வாழியவே.

உ

சிதம்பரம் வெ. சா. தேவாரபாடசாலை
ஆனரேரி சூப்ரிண்டேண்ட்
சிற. பொ. குப்புசாமி தீக்ஷிதரவர்கள்
இயற்றிய வெண்பா.

தில்லை நடேசன் றிருவருளாற் பாரதத்தி
னெல்லை யளக்கு மெழிற்சதகம்—ஒல்லும்
வகைசுருக்கி யீங்கமைத்தான் வண்புகழ்சேர் க்ருஷ்ணன்
தகைசேரால் வித்தினுறல் போல்.

களு-கூ-௩0.
சிதம்பரம்.

இங்ஙனம்,
சிற. பொ. குப்புசாமிதீக்ஷிதர்.

உ

சிவமயம்.

நூலாசிரியர் முகவுரை.

உரையிடையிட்ட செய்யுள்.

செந்தமிழ் நாட்டுச் சிறிய கலைகள்
காவலர்ப் பெறாது கவினுருக் குன்றவும்
தோற்றந் துடியெனத் தோற்றிய பரமன்
வன்மீ காம்சமாய்த் தன்னிடை வலிப்பவும்
கங்கை நாடிய காவலன் போலவும்
பொருணூ லாய்ந்த புரவலன் போலவும்
தமிழ்மண மிங்கே தழைத்தல் காண்மினென்
றமிழ்தா மந்திர மகழ்ந்தெடுத் தானினுந்
தமிழ்நூ லுடுந் தகவோ ரரிதெனக்
கலியுக வரதனுங் கந்தவே டானே
ஆறுமுக நாவல அருந்தகை யொருவனும்
சுவாமி நாதத் தூய்மறை யொருவனும்
பூமியிற் றோன்றப் புரிந்தன னென்பதை
அவர்கள் செய்த முயற்சியி னூக்கமாம்
புனித நூல்களைப் போற்றுறு மாணவர்
காலையு மாலையுங் கரத்தினுஞ் சிரத்தினு
மலரத் தாங்கும் மாண்பினைக் கண்டோர்
மெய்ம்மையி னுரைத்தலை விரிப்பிற் பெருகும்.

அத்தகைய பொதுநலத்திற் குழைத்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இடைபிங்கலையொடு சுழுமுனையென்னும் மூன்று நாடியினும் முயங்கறம்போல ஸ்தாபித்த தர்மஸ்தாபனங்கள் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் உள்ள இரண்டு சைவப்பிரகாசவித்தியாசாலைகளும் சென்னையிலுள்ள வித்தியாநுபாலன யந்திரசாலையும் என்னும் மூன்றுமாம். அவற்றுட், சூழ்நடு மணியாய்த் துலக்கமுற்
றோங்கிய, தில்லைமா நகரிற் செழிப்புறத் தோன்றும்
நாவலர் கழகத்து நலமுறக் சற்ற

மாணவர் குழாங்களில் யானு மொருவனாய்ச்
சுவாமிநாதத் தோன்றலும் பலகால்
வினாவிடை நிகழ்த்தும் மேன்மைக் கிளர்ச்சியிற்
புகுந்தவ னாதலிற் புனிதர்மற் றிருவரை
மேற்கோ ளாக விளம்பியே முதற்கட்
செப்புவ னொருசில சீரியர் கேண்மோ
செந்தமிழ் பயிலுஞ் சிறுவர் போற்றப்
பெருக்கநூற் கருப்பொருள் பிறங்கக் காட்டும்
சுருக்கநூல் சிலநீ தொகுமதி யென்றே
பெருகிய நோக்கிற் பிறங்கிய ஆசான்
நாவலர் மரபின னவில்வேற் பிள்ளை
ஆவலி னுரைத்த தகங்கொடு பாரத
முதனூ லோடு பொருந்த ஆய்ந்து
பாரத சதக மென்றிய னூலைத்
தொகுத்தன னேனுந் தொன்மதிப் புலவோர்
அன்பே என்னினின் றறைகுவ தல்லது
யானே செய்ததென் றியம்பவொண் ணாதே
அன்பி னீங்கிசைத்த அன்னோர் பாயிரம்
நிமித்த மாத்திரையி னென்னைக் குறிக்கினும்
நிமல வானந்த நிருத்த நடேசன்
குஞ்சித சரணத்தைக் குறிக்கு மென்றே
அன்புடை யன்னவர்க் கனுதின நன்றி
பாராட் டுதலொடு பண்புற விதனை
நாவலர் தர்ம பாலகன் விச்வ
நாதன் மொழிப்படி நல்வழித் தோன்றல்
தியாக ராஜனுஞ் செம்மையி னச்சிட்
டுதவல் போற்றி யுத்தம பாரத நாட்டுத்
தொண்டரி னொருவனென் றாக்கிய தூய்மைத்
தொண்டது போற்றுந் துணிவுடை யோமே.

௨௫-௮-௩௦.
நாவலர் கழகம்
சிதம்பரம்.

இங்ஙனம்
என். கிருஷ்ணமூர்த்தி.
சிதம்பரம்.

சிவமயம்.

ஸ்ரீமந் நடராஜாங்கித

மஹாபாரதசதகம்.

காப்பு.

பாரிட்ட முடனேத்து பண்புடைய நல்லறம்
பயில்பா ரதப்பனுவலைப்
பன்னுமறை வல்லமுனி சொல்லவெழு தெம்பிரான்
பகர்சதக முங்கேட்கவே
காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு நல்வினை தீவினையி னூக்கியே
பெருமையொடு சிறுமைதந்து
பெருங்கொள்ளி வட்டநிக ரச்சொர்க்க நரகமொடு
பேருலக முஞ்சுழற்றிச்
சீரிட்ட தன்னடிமை சிந்தைமுத னல்வரொடு
சேர்ஜீவ தருமனவனைத்
தேற்றியரு ணீராட்டி முடிசூட்டு மைங்கரத்
தேவதே வைப்பணிகுவாம்.

வியாசர் கூறிய மகாபாரதத்தை அவர் வேண்டுகோளின்படி எழுதியவர் விநாயகராதலின் அவரதின்னருள் பாரதசதகத்துக்குந் தானே எய்துமென்பது. "காரிட்ட" என்பது முதலிய சிலவரிகள் தாயுமானவர் கருத்து. கண்ணிலாக்குழவி, நன்மை தீமைமுயற்சி, சுவர்க்கநரகப் போக்குமுதலியவைகளும் ஜீவதருமன் நால்வர் முதலிய உருவகங்களும் கதைமுதலிய பொருளைக் குறிப்பினுணர்த்துவன. அர்ச்சுனன் சுவர்க்கமுற்று மீண்டதும் துர்யோதனன் ப்ராயோபவேசத்துப் பாதலம்புக்குமீண்டதுங் கவனிக்கத்தக்கன.

தில்லை நடராஜர் துதி.

க. பூவேறு கோனும் புரந்தரனு மாலுநற்
புகலடைந் திரவுபகலாய்ப்
புண்ணியப் பதிதோறும் பூசனை புரிந்துதம்
பொற்புடைய வாழ்வுபெற்றும்
நாவேறு ஹம்ஸமா மந்திர பலங்கொண்டு
நன்குமகி ழீன்றளித்தும்
நண்ணுமதி காரமல மொருவேளை வரயாமு
நவினுய கர்களெனவே
சோர்வேறி நிக்கிரக மெய்தின ரென்னிலுணர்
சொல்லவுஞ் சிறிதுமில்லேம்
சுழல்திகிரி பரசிவை கேட்போர்க் களிக்குநிற்
சொல்லுமா றெவன்சொல்லுவாய்
சார்வாகி யெவ்வுயிர்க் குந்தஞ்ச மாயவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பூவேறு கோன் - பிரமன். பூசித்தவூர் - பிரமபுரம் முதலியன. புரந்தரன் - இந்திரன். பூசித்தவூர் - சிதம்பரம் மதுரை முதலியன. மால் - விஷ்ணு. பூசித்தவூர் - திருவீழிமிழலை காஞ்சிமுதலியன. ஹம்ஸம் - ஸோஹம் என்னு மந்திரம். அவன் நான் என்பது பொருள். உபாசனையால் அநந்யமாக நினைத்து இறைவனருளால் அவன் ஜெழிலிலேற்பன தாமும்புரிதல். இவர்களின் நிக்ரஹம் புராணங்களிற் பிரசித்தம். இங்கே இந்திரர்களின் நிக்ரகம் பாண்டவ ஜனன காரணம் என்பதும் உணர்க.

ஆதி பருவம்.

குருகுலத்தரசர்கள்.

நூல்.

௨. சொன்னீர்மை பெறுமா மதிக்குல மகீபர்கள்
தூயமதி புந்தியுடனே
சொர்க்கமுறு மூர்வசி மணம்பெறு புரூரவன்
றோன்றுபுக ழாயுநகுடன்
வின்னீர்மை கொண்டிடும் யயாதியொடு தன்னிளமை
வேந்தற் களித்தபூரு
மேன்மைபெறு துஷ்யந்தன் பரதனிசை கூரத்தி
விளங்குகுரு சந்தனுமனும்
பன்னீர்மை பெறுபீஷ்மன் பாண்டுவிது ரன்திருத
ராட்டிரப் பார்த்திவர்களும்
பதகர்துரி யோதன்முத னூற்றுவர் வெரிங்கண்ட
பாண்டவ மகாருமினையோர்
தன்னேர் மகப்பேறு கண்ணற்கு நல்கிடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

புந்தி - புதன். மகீபர் - பூமியைக் காப்பவர், அரசர். பூரு - யயாதிக்குச் சர்மிஷ்டையிடத்துப் பிறந்தவன், நாலாவது செய்யுளை நோக்குக. வெரிந் - முதுகு.

பூரு, குரு, அத்தி, பரதன் இவர்கள் பெயரால் பௌரவர், கௌரவர், அத்தினபுரம், பாரதர் என்னும் பெயர்கள் வழங்கலாயின.

மகுடம்: க்ருஷ்ணர் உம்மைப்போன்ற புத்திரன்வேண்டும் என்னும் ஜாம்பவதிக்காக உமாபதியருளால் ஸாம்பனென்னும் புத்திரனைப் பெற்றகதையை உணர்த்தும்.

நருஷன், கஜேந்திரன்.

[கழிபெருங் காமம், குடும்பத்திற் பிறந்தா ரொற்றுமை.]

ரு. கன்மமுறு மொருஞான மற்றெனக் கருதுவோர்
கண்ணுறும் பலனுமுண்டோ
காமியப் பலனான சொர்க்கமொடு மற்றுமுள
காதலுறு புவனமெவையும்
வன்மமுறு பிறவியை மாற்றும்வகை யின்மையை
மயங்கியுன ராநகுடனும்
வளஞ்செறி மகம்பல முயன்றுசெந் தமிழ்முனியை
மதியாது சசிமோகனாய்ச்
சன்மமுறு சர்ப்பமது வாயினன் சகோதரத்
தாயமது கொண்ணீர்மையாற்
றந்தையை மீறிவெங் கானிற் கராங்கரித்
தகைமையுற் றாரிருவர்காண்
தன்மமுறு வாரிடைத் தவளவே றார்ந்துவரு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

கன்மம் உறும் ஞானமற்று - (பலன்பெறற்கு) ஞானமின்றிக் கருமமேபோதும். கண்ணுறும் - குறித்த. மகம் - யாகம். சசி - இந்திராணி. தாயம் - பங்குரிமை. கராம்கரி - முதலையும் யானையும். தவளம் - வெண்மை.

குடும்பப் பாகுபாடு விஷயத்தில் மாற்சரியமுற்ற முனிமைந்தர்கள் தந்தையால் சபிக்கப்பெற்றனர். அதனால் முதலையும் யானையுமாய் நிஜவைரிகளாய்ப் பிறந்தனர். (வில்லிபா-குருகுலச்சரு - ௩0.)

மகுடம்: தர்மமே இடபமாதலின் எங்கே தருமம்செய்யப்படுகிறது அங்கே இறைவன் வெளிப்படுவேன் என்பது குறிப்பு.

யயாதியின் திருமணம்.

[நன்மக்கட்பேறு, பெண்ணின் பேதைமை, பெரியோர் சாபம்.]

ச. நீபமிகு வளர்மார்ப னேரெனும் யயாதிவள
நிமிர்கா னுலாவுபொழுதில்
நிறைகுலிசன் மாயையால் விடபன்மன் மந்திரி
நெடுங்கவி மகள்பிழையெனக்
கோபமிகு மரசன்மகள் கூபமதில் வீழ்த்திய
குயாசலத் தேவயானை
கூப்பிடச் சென்றவளை மேற்பட வெடுத்தவள்
கூறுவகை யின்மணந்தும்
பாபமிகு தன்மையிற் பார்த்திவன் விட்டசன்
மிட்டையிற் பரிவுகூர்ந்தே
பார்க்கவன் மிகுசாப முற்றுநற் பூருவாம்
பாலனன் பான்மிளிர்ந்தான்
தாபமிகு தீவினைய ரேனுமடி மைக்கொளுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

நீபம் - கடம்பு. (முருகனுக்குரியது) குலிசன் - இந்திரன். மாயை - இந்திரலோகத்தைவிட்டுப் பூமியில் விருஷ பர்வ வேந்தனிடம் மந்திரியாகிய சுக்ரனை ஆண்டுந் தவிர்ப்ப இருபெண்கள் வஸ்த்ரங்களையும் முடிந்து ஒன்றினென்று கரந்துவைத்து இருவர்க்கும் பகைமூட்டியது.

யயாதி தன்முக்யமனைவியின் பிள்ளைகள் தன்மூப்பைச் சிறிது காலம் பெற மறுத்தமையின் சர்மிஷ்டை புதல்வனாய பூருவிடத்து மூப்பை நல்கிப் பின் மீட்டுக்கொண்டு அரசுரிமையை நல்கினனென்பது. மகுடம் - யயாதியின் மூப்பு நீக்கத்தையும் உணர்த்தும்.

சந்தனுவின் மணம்.

[பெரியோர்வாய்மைபிறழாமை, கள்ளாமை, ஜிதேந்திரியம்.]

ரு. உருக்கிளரு மம்புய னுரைவரம் பிறவாமை
யுயர்கங்கை யவளருகிலே
உறுகானில் மாவேட்ட மூக்கிவரு சந்தனுவு
முற்றுநீர் வருமங்கையை
மருக்கிளரு மோதியை வாசகப் படிநிற்பன்
மற்றென மணந்துநவைதீர்
வசிட்டனல் லான்கவர் வசுக்களெழு வரையீன்று
மற்றவள் கொல்லமாழ்கிச்
செருக்கிளர் புயத்திறை சீறவவள் செல்லலுஞ்
ஜிதேந்தியந் தான்படைத்துத்
திகழ்காத பரிமளக் கன்னியைச் சேர்வித்த
சேயமையு மென்றனன்காண்
தருக்கிளரும் வான்முதல அன்பர்க் களித்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

அம்புயனுரை - கங்கை பிரமனை வணங்கும்போது காற்றினுற் கலையொதுங்கத் தன்னைக்காதலித்த மைத்ராவருணனைத்தானும் விரும்பினமையின் பூமியிற் பிறக்கப் பிரமன் சபித்தது.

பிரபாகரனென்னும் வசு, மனைவிசொற்படி எழுவர் வசுக்களுடன் சென்று வசிட்டர் பசுவைக் கவர்ந்தான். அவர் சாபத்தால் எழுவர் வசுக்கள் பூமியிற் பிறந்து கங்கையருளால் உடனேமீள, முக்கிய தோஷத்தால் ப்ரபாகரன் பீஷ்மனுகி இங்கேயே தங்கியது. மனைவிசொற்கேட்டதால் இல்வாழ்க்கை நிலையும் இல்லையாயிற்று. பரிமளகந்தி மகனிருக்க மணவேனென்றமையால் மணமறுத்தானென்பது. பரிமளக் கன்னி - உபரிசரவஸு என்னும் அரசனது வீர்யம் காளிந்தியில் வீழ மீன் விழுங்கிப் பெற்ற பெண், பராசரர் அருளால் யோஜனைவீசும் நன்மணம் பெற்றவள்.

சந்தனுவின் வம்சம்.

[ஸபத்நியின்குணம், விதியின்செயல், ஆபத்தருமம்.]

௬. காந்திவளர் பரிமளக் கன்னிசந் தனுவைநற்
காதன்மண முற்றகாலைக்
கவின்பெற வுதிக்குமக வாள்கவர சென்றுசேய்
கள்ளமற நனிசொல்லவும்
பாந்தண்முடி மகிபநின் பாரியையு நின்குணம்
பரிக்கவல் ளோவெனவவன்
பாரியு மெனக்கில்லை யாகவென் றோதினன்
பாவமவள் பாலரிருவர்
நீந்திமண் விண்புக நெடுங்குலம் வேண்டவவள்
நீண்மகார் மனைவியர்வயின்
நிமலனு மறுக்கவே வியாசனை யுணர்த்தியவ
னீரின்வரு வம்சமுளதாம்
சாந்தியொடு துஷ்டியும் புஷ்டியு மெனும்பெயர்த்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பாலர் - சித்ராங்கதன், விசித்திரவீரியன். பராசரரை மணந்ததும் வியாசர் பிறந்ததும் சந்தனுவுக்கு முரையாதவள் பீஷ்மரிடத்து ஆபத்தருமத்தை அனுசரித்துக்கூறி அவ்வியாசரால் வம்சத்தைப் பெற முயற்சித்தாளென்பது.

மகுடம்: பீஷ்மர் மணமறுத்து மகிழ்தலையும் பரிமளகந்தி வரம் பெற்றும் மகிழாமையையும் குறிக்கும்.

சாந்தி - அடக்கம். துஷ்டி - மகிழ்வு. புஷ்டி - அதனால்வரும் வளர்ச்சி.

வியாசர் அருளல்.

[தாய்செய்தநன்றி, தவமகிமை, ஊழின்வியதி.]

எ. சீரணியும் வேதநவில் வாயவன் றூயவன்
செகம்புகழ் பராசரன்வயிற்
செங்கண்மால் வ்யாசனென மேதினித் தோன்றிடத்
திகழ்துணைவி யானவதனாற்
காரணியு மோதிபரி மளவல்லி கூப்பிடக்
காதலனுங் காமநீத்த
கற்பினம் பிகையொடம் பாலிகை மகவெய்தல்
கண்டுதா யுவகைபிறிதா
நாரணி பெறுங்தொழும் பானவளு நலமேவி
நற்குமா ரனையெய்தவே
நகைமுடித் த்ருதராஷ்ட்ர னற்பாண்டு விதுரனென
நாமமும் வகுத்தருளினான்
தாரணித் தாய்ஜகத் காரணி பூரணி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவாழ் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பீஷ்மர் - பயங்கரமான விரதத்தை உடையவர். மணமும் வேண்டாமென்றசொல்லைக் குலரக்ஷணத்தின் பொருட்டுத் தாய் வேண்டவும் மறுத்து நிறைவேற்றியவர்.

வியாசர் தாய்மொழிக்கிணங்கி அம்மகளிர்க்கு ஒருவருஷ விரதங்கூறத் தாய் காலதாமதங் கூடாதென்றமையால் க்ஷமை என்னும் விரதமாவது வேண்டுமென்று கூறித் தம்முருக்காரந்துபோய்ப் பரீக்ஷிக்க அவர்கள் வெருண்டு தோற்றலின் குருடும் பாண்டுரோகமுமுடைய பிள்ளைகள் அம்பிகை அம்பாலிகைகட்குப் பிறந்தனர். மாறுவேடம் பூண்ட தாதிக்கு விதுரன் பிறந்தான். ஊழினால் வந்தவர் மகிமையை அவர்கள் உணர்ந்திலரென்பது.

பாண்டவர் ஜனனம்.

[ஈசுவரன் வைசித்ரியம், சஞ்சித நுகர்வு, நடுவுநிலைமை.]

அ. வகைமைசேர் தேசங்க ளத்தனையும் வலயங்கொள்
வாகுவிற் கொண்டுதாங்கும்
வாகைவளர் வீட்டுமன் முதற்சேய் தனக்கொளிர்
மகுடமுஞ் சூட்டியிளையோர்
பகைமையறு சேனையிறை மந்திரிக் கிழமையிற்
பார்த்திவற் காக்கவைத்தான்
பாண்டுவொரு நாட்கானில் மால்வழித் தோன்றிய
பகர்போக நுகர்மானினை
மிகைமையுற வீழ்த்தியே விளைசாப மஞ்சிமனை
மேவல்விட் டருங்கானுறீஇ
வியன்குந்தி மறையினல் விண்ணிறை யறங்காற்று
மேன்மருத் துவரைவராற்
றகைமைபெறு மகவைந்து பெற்றனன் மகிழவருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ ளீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பீஷ்மர் தம்பியின்புதல்வர் மூவரும் பெரியராம்வரையில் தாமர சாண்டு, பின் த்ருதராஷ்டிரனை அரசனுக்கி, இளைஞரை மந்திரியுஞ் சேனாதிபதியுமாக அமைத்தார்.

பாண்டு வேட்டையாடும்போது கிந்தமரிஷியின் மாறுவேட மாகிய மானைப் போககாலத்தில் எய்து அவர் சாபத்தால் இல்லறம் விட்டு வானப்ரஸ்தனுகி முனிவருடன் ஒருகாற் பிரமலோகஞ் சென்று பிள்ளையின்மையின் அங்கே உபசரிக்கப் பெருதுமீண்டு குந்தியாகிய மனைவியொடு கவன்று அவள் யோசனையால் ஐவர் தேவரருளால் ஐந்துபிள்ளைகளைப் பெற்றுனென்பது.

துர்யோதனாதியர் பிறப்பு. பாண்டவர் நகரி சேர்தல்.

[அழுக்காறு, பெரியோர்கடமை, காமத்தின்றீங்கு.]

௬. ஆன்றமை வியாதமுனி யருள்பெற்ற முடிவேந்த
னன்புடைக் காந்தாரியும்
அருஞ்சூ லடைந்தன ளிருப்பவிவண் குந்தியோ
ராண்மகவு பெற்றுளெனக்
கான்றவிட நாகமே போலக் கருத்தழீஇக்
கருவினைக் கன்மோதிடக்
கருணையொடு நூறுமக வென்றவம் முனிவனும்
கலயத்தி னுதிரமொண்டு
நோன்றுமக நூறுசெய் தான்பாண்டு மாத்திரையி
னையகா மத்திறந்தான்
நூன்முனிவர் கருமங்க ணிறைவேற்றி மக்களை
நுவல்தாதை நகரிசேர்த்தார்
சான்றபுக ழெண்ணான்கு தருமமும் வளர்ப்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

ஆன்று - நிறைந்து. சூல் - கருப்பம். காந்தாரி வியாசர் உபதே சத்தால் கருப்பமுற்றும் தருமன் முன் பிறந்ததைக் கேட்டு ஆங்கா ரத்தால் கருவைக் குலைத்தாள். அசுரப்ரகிருதிகளாதலின் வியாச ரால் மீண்டும் உயிர்ப்புற்றார்கள்.

பாரதயுத்தம் தக்ஷயாக சேடமாய் முடியவந்ததோர் நியதி யென்பது சௌப்திக பர்வாவில் தருமகிருஷ்ண சம்வாதத்தாலறிக.

மகுடம்: பாண்டவர் வளர்ச்சிக்குக் குறைவின்மை ஈசன் செயல் என்பதைக் குறிக்கும்.

புதல்வர்கள் கல்விப் பயிற்சி.

[அறிவுடைமை, கர்மபரிபாகம், கல்வி எழுமையுந் தொடர்தல்.]

க0. ஆர்ந்தபூங் கானமதில் அருமந்த தந்தையி
　　னகற்சியாற் கவலுமைந்தர்
அவலமதொழித்துறுதி திருதராட்டி ரன்மொழிந்
　　தன்பின் வளர்த்தகாலைச்
சேர்ந்தெவரு நூற்றுவருடைந் தென்னவிணை பிரியாது
　　சேதாம்ப லொடுகமலமுஞ்
சிறந்துறுதல் போன்றனர் சிறிதுவய துற்றிடச்
　　சிறுகோப மும்வயிர்த்தல்
தேர்ந்தவிது ராதியர் குயிற்காக மன்னவர்த்
　　தேற்றிவிற் க்ருபன்றுரோணன்
சேட்டமிகு குரவரிற் சேர்த்திருன் கலைபல
　　திறம்பட விளைத்தனர்கள்காண்
சார்ந்தமுற் பிறவிநல மெழுமைபினு நுகர்விக்குந்
　　தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனை தில்லைவளர் நடராஜ
　　சச்சிதா னந்தசிவமே.

அருமந்த - அருமருந்தன்ன என்பதன் மரூஉ. தேவாமிர்தம் போன்ற என்பது பொருள். செம்மை + ஆம்பல் = சேதாம்பல். வயிர்த்தல் வைரங்கொள்ளுதல்.

குயிற்காக மன்னவர் - குயில்கள் காகங்களோடு சேர்ந்து வளரினும் வசந்தகாலத்திற் பிரியுமென்பதுபோல வயதாக ஆக இருகட்சியாயினர் என்பது. துரோணர் - கிருபாசாரியர் தங்கை கிருபியின் கணவர்.

மகுடம்: பாண்டவர்களின் வித்யாபிவிர்த்தியை உணர்த்தும். “ஒருமைக்கட்டான்கற்ற—எழுமையுமேமாப்புடைத்து.” குறள் - சக - அதி - அ.

கன்னன், பாண்டவர்களின் தேர்ச்சி.

[பெரியோர்களைக் கன்னியர்கள் வழிபடல், குருவருள்.]

கக. வேந்தனும் போஜன்மகள் விளையாட் டிளம்வயதில்
 விரிசடைத் துருவாசனை
விளிவில்பகல் பூஜித் தவன்றந்த மறையினல்
 விரோசனன் றனையழைப்ப
வந்தலும் வந்தவட் டமூவியொரு மகவளித்
 தேகவவ ளும்வெரூஉக்கொண்
டியற்பேழை தனில்விடச் சூதனதி யிற்கண்
 டெடுத்திகற் கன்னனென்றே
போந்தியற் பெயராற் புரந்தனன் மழுவினன்
 புடைப்படை பயின்றுமிக்கான்
பூருமர பினர்தமிற் பாண்டவர் குருவருள்
 பொருந்தியிசை நண்ணினரால்
சாந்தமொடு வீரமுந் தட்பமொடு வெப்புமாந்
 தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
 சச்சிதா னந்தசிவமே.

குந்தியின் விசேடம் பின் குறிப்பிற் காண்க. துருவாசர் ருத்ராம்சத்தாற் பிறந்தவர். வியாசபா - ஆதி. உசக ருத்ரனைப்போன்ற கோபப்பிரசாதமுடையவர். இவரருளில் வாழாதவரும் வெகுளியிற் றப்பினவருமிலர். விரோசனன் - சூரியன். எந்தல் - பெருமையிற் சிறந்தோன். வெரூஉ - அச்சம். பேழை - பெட்டி. சூதன் - த்ருதராஷ்ட்ரன் தேர்ப்பாகன். மழுவினன் - பரசுராமன். இசை-கீர்த்தி.

"இருவேறுலகத்தியற்கை" என்பதுபோல மக்கள் இருவகைச் சத்தியுமுடைமையை மகுடங் குறிக்கும்.

அருச்சுனன் துருபதனை வென்றது.

[செய்ந்நன்றிமறத்தல், குருதக்ஷிணை, அருளொடு போதித்தல்.]

கஉ. தன்மமிகு துரோணனுந் துருபதனு மொருசாலை
தகவே பயின்றுறையுநாள்
தன்மையி னுரைத்தசொற் றுருபதன் போற்றாது
தகவின்மை கூறுமிகையால்
வன்மைமிகு மாணவற் கொண்டவற் சிக்கவெணி
வலிதே யுணர்த்துவித்தை
வல்லரென மைந்தரை மன்னர்செறி நல்லவையின்
மாண்புறத் தெரிவுறுத்தித் [ன்
தொன்மைமொழி போற்றிடத் துரோணனு மொழிந்தன
சொற்றிடலு மூற்றுவர்கள்போய்த்
துன்பமுற் றிரிதரலும் விஜயனத் துருபதன்
றேருள்சிக்க யாத்துவந்தான்
தன்னிலுயர் வோர்ப்பணி தக்கோர்கள் சிந்தையுறை
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

துருபதன் - பாஞ்சாலமன்னன். துரோணரது ஒருசாலை மாணாக்கன்; துரோணர்செய்த உதவிக்காகப் பாதி ராஜ்யம் தரவாக்களித்தவன்; பாற்பசு ஒன்று தரவும் மறுத்தமையால் அருச்சுனனைக்கொண்டு துரோணர் வென்றாரென்பது.

வலிதேயுணர்த்துவித்தை - பீஷ்மர் வேண்டுகோளுக்கன்றித் தன்பகை முடிக்கவும் வேண்டி உணர்த்தும் வித்தை.

தொன்மைமொழி - துருபதனை வெல்லக்கூறிய மொழி. இரிதரல் - ஓடுதல். யாத்தல் - கட்டுதல்.

மகுடம்: அர்ஜுனனது குருவருளை யுணர்த்தும்.

வீமனுந் துரியோதனனும்.

[பால்யவைரம், அநாதைகட்குத் தெய்வமே நாதன்.]

கரு. பின்னமற வைவரும் பெட்புற்று வைகலும்
பெருந்தொழிற் றிறலுமோர்ந்தே
பேசரு மழுக்காற்றி னரவவெங் கொடியனும்
பீமார்ச்சு னர்வலிபொறுன்
கன்னனொரு வற்குநிகர் கன்னிகர் வீமனைக்
கடிதியாங் கோறல்வேண்டும்
காலமுற வெனவெண்ணி யாற்றிற் பிணித்திடல்
கழுநிரை பாய்வித்தலும்
இன்னமுதி னஞ்சிட லெனைத்தும் புரிந்தனன்
இவையெலா மவனன்மையாய்
இயனுள்கள் சிலநாக ருறைபா தலத்தமுது
மேன்றன நுகர்ந்துவந்தான்
தன்னந் தனித்தவர் சார்பாக வுறைபவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பெட்புற்று - விரும்பி. வைகுதல் - தங்குதல். அழுக்காறு - பொறாமை. கோறல் - கொல்லுதல். அமுது - சோறு.

கன்னன் துர்யோதனனுக்குத் துணையாய், அவனால் அங்கதேசத்துக் கதிபதியுமாகிப் பாண்டவரை வெல்லச் சூழ்ச்சித்துணைவனுமானன் என்பது.

வீமன் பிறந்த சிலநாளில் தாய்கையினின்றும் கீழேதவறிவிழ ஒருபாறைக்கல் வெடித்தலால் அங்குவந்த புலிபயந்தோடிப் போயிற்று. இயற்கைப்பலமமைந்த இவனை துர்யோதனன் சூழ்ச்சிகள் ஒன்றுஞ் செய்யவில்லை.

தன்னந்தனிமை, பென்னம் பெரிய என்பது போல.

வாரணாவதப்ரவேசம்.

[தீயோர் செய்கை, நல்லோர்க்கெல்லா நன்மையுமாதல்.]

கச. பாவலர்கள் சொன்மதி குலத்துவரு மைந்தர்கள்
பான்மையிற் றிரிதல்கண்டே
பண்புடைய வீட்டுமன் த்ருதராட்டி ரன்விதுரன்
படைவல்ல குரவர்தாமும்
மேவலர்க ளாயினர் விளைபொழுதின் மைந்தர்கள்
வேறிவரை வைக்கவேண்டும்
வேறுநகர் வாரணா வதத்திற் புரிந்திடுக
மேவியதி லுறுகதர்மன்
ஆவலொடு மென்றிறை வகுப்பதுர் யோதன
னகத்துநிகழ் வஞ்சமனையில்
ஐவரு முறைந்தனர்க ளிறைமகன் சூழ்ந்திடு
மங்கியென் செய்யுமிவரைத்
தாவருமண் புனலனல் தத்துவ மெலாமாய
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதா னந்தசிவமே.

பான்மை - தன்மை. மேவலர் - விரோதிகள். அகத்துநிகழ் வஞ்சமனை - மனசோடுகூடிய வஞ்சனையாலாகிய அரக்குமாளிகை. (புரோசனன் என்னும் மந்திரியைத் தன்வசமாக்கி இயற்றுவித்தான்) இறைமகன் - துர்யோதனன். அங்கி - அக்கினி என்பதன் மரூஉ.

வாயுபுத்ரனுதலாலும் தத்துவாத்மிகையான அம்பிகை யருளுடைமையாலும் அவனை அக்கினி என்செய்யுமென்பதுமருடக் கருத்து.

அரக்குமாளிகையின் வீமன்வெளிச்சேறல்.

[நீதியின்செயல், நினைத்ததுமுடித்தல், ஆண்மைத்தன்மை.]

கடு. தொக்கபல மைந்தருஞ் சமமென்ற த்ருதராஷ்ட்ரன்
 துர்யோ தனற்கிணங்கிச்
சூழ்தடப் பாசிபோ லாயினு னதுநிற்க
 தூயமதி விதுரனென்றும்
மிக்கபல பாண்டவர் மனங்கொளத் தீயின்வரு
 விளைவையு முன்குறித்து
வேண்டுபல வுதவியும் அமைத்தனன் விறல்வீமன்
 வேறுசில ரழலின்மாள
அக்கினியை மூட்டியே யருந்தூண் பிலத்துவழி
 அடனுல்வர் தாயொடுந்தன்
அணிக்கரந் தோண்முதுகி லமர்தரச் சென்றனன்
 அவனுண்மை யாருரைப்பார்
தக்கன தகாதன பகுத்துணரு ஞானமாந்
 தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
 சச்சிதா னந்தசிவமே.

தடப்பாசி - தடாகத்திலுள்ள பாசி. கல்லெறிந்தால் விலகலும் மீளக்கூடலும்போல் தருமரைக்கண்டால் த்ருதராஷ்டிரன் இரங்கலும் மகன் பொரூமையால் வலித்தலும் உடைமையால் இது அவனுக்கு உவமையாயிற்று.

விதுரன் தருமனுக்குப் பைசாசிபாஷையில் சிலேடையாக அக்நி பயமொன்றுண்டென்பதையும் எலிபோல் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்னும் உபாயத்தையுங் கூறிப் பிலமும் அமைப்பித்தான். "ஆத்மநாபஞ்ச ஹத்வா" என்னுஞ் சுலோகத்தால் பிறர் நம்பிக்கைக்கு அறுவரை மாளிகைத்தீயில் அகப்படுத்திச் செல்க என்றுங் கூறியபடி வேடர்கள் அவர்தாய் மந்திரி இவர்களை வீமன் தீயில் அகப்படுத்தினுன் என்பது.

இடிம்பன் வதம்.

[மாதர் மையல், மானுடன் இராக்கதமகளை மணத்தல்.]

கசு. அரக்குமா ளிகைவிட் டநேககா தந்தாண்டி
ஐவருந் துயிலுணர்முனம்
ஐந்தலைய நாகமென அடல்வீமன் செல்வேக
மாற்றும லவசராக
இரக்கமிகு மவர்களை யிறக்கிவெண் மணன்மிசை
யியல்பிற் படுக்கவிட்டே
இரும்புனல் கொளச்செல விடிம்பனென் றெண்டிசையு
மேங்குங் கொடுஞ்செய்கைசேர்
அரக்கனவ ராரென அறிதர இடிம்பையை
யவணேவி யவடாழ்த்தலால்
அரும்போர் தொடங்கிவர வவனுரம் போழ்ந்துபின்
அணியேக சக்ரமுற்றான்
தருக்குநிறை வார்கொலுஞ் சாதவா கனமூர்ந்த
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

விதுரனது ஏவலனுகிய தபதியாலுணர்ந்த வீமன் தானே மாளிகையில் நெருப்புவைத்துப் பிலவழிபோகி இவர்வருகையை நோக்கியிருந்த ஓடத்தாற் கங்கையைக் கடந்து வனமுற்று வியாசனருளால் வந்த இடிம்பையைத் தாய் தமயன்னுமதியால் மணந்து இடிம்பனைக் கொன்று ஏகசக்ரபுரி சேர்ந்தானென்பது.

பதினுயிரம் யானைபலங்கொண்ட இடிம்பன், பகன், ஜராசந்தன், கீசகன் இவர்களைக்கொன்று பின் துர்யோதனப் பெரும் பகையையும் வீமனழித்தல் இறைவியருளென்பது மகுடத்தின் கருத்து.

திரௌபதி மணம்.

[நிறையுடைமை, கார்யத்திற்கண்ணுடைமை, பெரியோர் வாய்மை பிறழாமை.]

௧௭. கொங்கூது வண்டினங் குலவுதண் டலைசூழ்ந்த
குளிர்நறும் பாஞ்சாலர்கோன்
கொடுஞ்சிலை வலாற்குமவ் வலாரிசேய்க் காகவுங்
குறித்தியன் மகத்துவந்தோர்
சங்கேத மொழிதப்பல் சாலுமோ பாண்டவர்கள்
சங்கைமொழி யென்னையென்றே
தனித்துய ருழந்துபின் றிரௌபதி சுயம்வரம்
சாற்றவே நகரெங்கணும்
நன்கோது முனிவாய்மை யாலைவ ருந்தாயும்
நற்றவரி னேகிமன்னர்
நாணுறச் சிலைகொண்டு நாணேற்றி மங்கையை
நன்மண நாட்டினரால்
தன்கூற்றி னென்றினற் றிரௌபதியின் மேவிடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சிலைவலான் - துரோணன். வலாரிசேய் - அருச்சுனன். அருச்சுனன் தோளுக்கியைந்த பெண்ணும் துரோணர் தலைக்கியைந்த பிள்ளையும் வேண்டுமென்று பெற்ற தவப்புதல்வராதலின் சங்கேத மொழி என்றது. சங்கேதம் - குறிப்பு. சங்கைமொழி - யாஜக உப யாஜகர் தவமகிமையாலும் பாண்டவர் குணம், மதி, தெய்வசகாயம் இவற்றாலும் இறக்கவுமாட்டார்கள். ஆனால் ஆறு எற்புடம்புகள் காணப்படுதலென்? என்னுஞ் சந்தேகம். தவரினேகி - வியாசருரையால் பிராமண முனிவர் வேடமாய்ச்சென்று. பாஞ்சாலி - ஸ்வர்க்கலக்ஷ்மியின்கூறு; காளியம்சமுமுண்டென்பர்; இவள் தமயன் வீரபத்ராம்சமுமுடையனென்பர்.

பாண்டவர்கள் அத்தினபுரிக்கு வருதல்.

[கரந்துறைவன்மை, விதிவலிக்கடங்குதல், பெரியோர் மொழி கடவாமை.]

கஅ. வண்டலையு மோதியை மறையோரி னைவரும்
வந்துமண முற்றகாலை
மாமன்னர் குழுவிலுள கன்னனுந் துணைவனும்
மறுத்தணி வகுத்தபோரில்
உண்டலையும் வெம்பக னுணேடு முயிருண்ட
உத்தமனு மொருதம்பியும்
உற்றவெம் பகைகளைய வுறுகால மிதுவென
வொருநொடியில் விட்டகணைகள்
கொண்டலொடு மன்னரைக் கொண்டோட நகர்தொறுங்
கோமனையி லைவருறைநாட்
கூடும்வலி பெற்றனர் எனவஞ்சு தாதைமொழி
கொண்டுநகர் மீண்டுமுற்றுர்
தண்டலையுங் காடுமுறு மாரிபோ லெங்குஞ்செல்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மன்னர்கள் வில்வளைத்தெய்ய வொண்ணுமையின் அந்தணரும் எய்யலாமோ என்று கேட்டு அர்ச்சுனன் வில்லைவளைத்துக் குறியை எய்ய மன்னர்க்கெதிர் அந்தணரோ என்று கன்னன் முதலியோர் போர் தொடங்கித் தோற்றனர் என்பது. பகை - அரக்கு மாளிகை நிகழ்ச்சி முதலியன. கொண்டல் - மேகம். தாதைமொழி- விதுரனுற் பாண்டவரை வதூவரர்களாகக் கிருகப்ரவேசத்துக்கு வரவேண்டுமென்று கூறிவிட்ட தகப்பன் மொழி. காட்டினுங் கடலினு நிகரச் செல்லு மேகம்போல தெய்வசகாயத்தால் எங்குந் தங்கலிற் பயமில்லாதவர் பாண்டவர் என்பது மகுடக் கருத்து.

இந்த்ரப்ரஸ்த நிர்மாணம்.

[நல்வினைப்பயன், நட்புக்குன்ருமையின் காரணம்,
தீர்த்தமகிமை.]

கக. அலமுரு நல்வயற் குருநாடர் தருமனுக்
கணிமகுட முந்தரித்தே
அணியெவ ரும்புகாக் காண்டவ ப்ரஸ்தநக
ராள்கவென வருகண்ணனல்
வலமுரும் இந்திரன் விசுவனு னிருமித்த
மாளிகையி லடலைவரும்
மால்வழித் தோன்றலொடு மன்றல்வளர் குழலியொடு
மன்னியர சாண்டுறையுநாள்
நலமுரு மிசைவல்ல நாரதன் சொற்றபடி
நாரியை யோரோராண்டில்
நண்ணுதன் மனங்கொண்ட நாளினிற் க்ரீடியோர்
நாட்டரும னுறையுள்வருவான்
தலமூர்த்தி தீர்த்தமாந் தன்னுருக் காணவருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அலம் - கலப்பை. மால்வழித்தோன்றல் - க்ருஷ்ணன். நாரி - திரௌபதி. நாரதர் சுந்தோபசுந்தர் சரிதங்கூறி ஓரோராண்டெ ன்று நியமித்தார். வேடராற் பசுநிரை கவருற்றதென்ற அந்தண னுக்காகக் கண்ணைக் கட்டிக்கொண்டு கதவைத்தட்டி வில்லெடுக் கச் சென்ற அர்ச்சுனன் விற்கொண்டேன் விடையுங்கொண்டேன் எனத் தருமர் பலவாறுகூறித் தடுப்பவுங் கேளாது ஆருமூழ்வசத்த ணுய், தலம் மூர்த்தி தீர்த்தங்களைக் காணவு மாடவுஞ் சென்றுனெ ன்பது.

சுபத்திரை மணம்.

[நன்மைவருங்காலம், காந்தருவமணம், ஆக்கத்தின் சிறப்பு.]

உ௦. ஐம்பத்தொ ரக்ஷர சொரூபனுறை யாயதனம்
ஆயிரத் தெட்டுமுற்றே
அணிகிளரு நதிசுனை யளப்பில குடைந்துறவு
மணிமனங் கொண்டகாளை
செம்பொன்வரை நின்றிழி செழுங்கங்கை தோய்தலுஞ்
செந்திருவை வென்றலூபி
திறநாக கன்னிகைத் திருமணங் கொண்டுநற்
சேயிரா வானையுற்றான்
கும்பநிகர் கொங்கையாள் கூடலரா சன்மகட்
கூடியோர் மகவுபெற்றான்
குமரியின் மூழ்கிமேல் வரைநெறித் துவரையின்
கொம்பையுங் கொண்டுசென்றான்
சம்பத் சொரூபமொடு நித்யமுறு கல்யாணி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஆயதனம் - கோயில். குடைதல் - ஸ்நானஞ் செய்தல். வரை - இமயம். கூடலரசன் புதல்வி - சித்ராங்கதை. மகவு - பப்ருவாகனன். மகற்கொடைவேண்டிப் பாண்டியன் மகளை யளித்தானதலின் அர்ச்சுனன் ஓராண்டு தங்கி மகன் பிறந்தபிறகு மேற்சென்றானென்பது. துவரைக் கொம்பு - த்வாரகையிற் பிறந்த பெண் சுபத்ரை.

மகுடம்: விஜயனது நல்வினைப்பயன் நாடிவருங் காலவிசேடத்தை உணர்த்தும்.

இரண்டாவது

சபாபருவம்.

பாண்டவர் சபை.

[கைம்மாறு, சொன்னசொற்பிறழாமை, நிக்ஷேபமெய்துதல்.]

உக. ஓதைஜமூ வாக்கடற் றுவாரகையி னுள்ளவரை
யுற்சவங் காணவேவி
யுற்சாக மொடுபத்ரை தேரூர வர்ச்சுனன்
ஓடினு னென்றுதேடிச்
சீதைமுன் கொண்டமன் இந்திரப் ரஸ்தநகர்
சீர்பலவு மேந்திவந்தான்
சீர்விஜய னொருவேளை செந்தழற் பசிதெறச்
சேர்தந்தை செற்றமுமெனுன்
காதைஜமூ வாறுகணை தொட்டெழிற் காண்டவங்
கலந்தெரிய மூட்டிவெளியே
கடைக்கணி மயன்செயுங் கைம்மாறு பாண்டவர்
கனகசபை யதையென்சொல்கேன்
தாதைஜமூ தாதைபொருள் தன்மரைச் சேர்த்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஓதைஜமூவா - ஓசைகெடாத. காதஐமூவாறுகணை - கொல்லும் ஐந்து பதினெட்டென்னுந் தொகைப் பாணங்கள். ஐ - அழகுமாம். எண்கள் பல அம்புகள் என்று கொள்ளினுமமையும். எடுப்பினென்றுந் தொடுப்பிற் பலவுமாம் பாணமென்பது. கனகசபை-மகுடநாதன் சபைக்கேற்பக்கூறியது. மணியும் கனகத்திற்குயிற்றப்படுதலின்.

சுக்ரன் விருடபர்வா இருவர் மகளிரையும் யயாதியென்னும் மூதாதை மணந்தானுதலின் விருடபர்வாவின் பொருள்கள் தருமருக்குச் சேர்ந்தனவென்பது மகுடத்தின் கருத்து.

நாரதர் பாண்டுமொழி பகர்தல்.

[நன்மக்கட்பேறு, புதல்வர் கருமத்தாற் பிதிரர் கதிபெறல்.]

உஉ. அம்பொரு ளெனத்தகும் நவரத்ந கசிதமா
யடுக்குயர்ந் தம்பிவடிவாய்
அகத்தொடு புறத்தணிக ளத்தனையு முற்றிலகி
அயன்வருண னிந்திரனகர்
தம்பொருவின் மன்னவையுந் தன்கீழ்ப் படுத்தியே
தரணியின் மயன்செய்திடும்
சான்றபுக ழவைதனைத் தருமனொ டுபேந்திரன்
சாற்றுமன ரெவருமுற்றூர்
தும்புருவி னுடனெண்ணு மாமுனியும் வாழ்த்தியே
தோன்றலாம் பாண்டுமொழியாற்
றுணைவரொடு தருமனைத் தோற்றமுள ராஜசூ
யம்புரிமி னென்றுசொற்றான்
தம்பொரு ளெனத்தகும் ஷண்முக கணேசர்வளர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ரத்நகசிதம் - ரத்நமிழைக்கப்பட்டது. அடுக்கு - மேனிலை உப்பரிகை. அம்பி - தோணி. அயன், வருணன், முதலியோர் சபைகளைப் பின்னாக் காண்க. இவற்றை நாரதர் வருணிக்கும்போது யமன் சபையில் இவர் தகப்பனாகிய பாண்டு முதலியோர் பெயரைக் கூற அதுபற்றிவினவிய தருமருக்குப் பாண்டுவின் சமாசாரத்தையுங் கூறினர். உபேந்திரன் - வாமனரூபி; ஈண்டுக்கண்ணன். உடனெண்ணுதல்-தும்புரு நாரதரெனல். ராஜசூயம் - அரசர்களாலியற்றக் கூடியது - ராஜா என்னும் ஸோமலதையாற் செய்யும் யாகமுமாம்.

"தம்பொருளென்பதம்மக்கள்." குறள் - அதி - எ.

ஜராசந்தன் வதம்.

[நீதியின் சிறப்பு, குறிப்புணர்தல், அரசன் பெருந்தன்மை.]

உரு. வர்மபுரி கிரிவிரஜ மென்றெவரு நண்ணிடா
மற்றவ னொருங்கியின்னே
வருதுமென மாழ்குறாஉந் தருமனைத் தேற்றியே
வளர்பலம் ஜயநீதிபோல்
நிர்மலன் வீமனொடு விஜயனைக் கொண்டுற்று
நிமிர்தோட் சராசந்தனை
நினைக்கரும் போர்முனையில் வீமற் குணர்த்திய
நிகரில்குறி யாற்றொலைத்தே
கர்மபரி பாகமுறு கருணைமிகு வேந்தரைக்
காவலின் விடுவித்துடன்
கருதுநகர் சென்மின்கள் காதலொடு தருமன்செய்
கடிமகங் காமினென்றான்
தர்மபரி பாலகர் தன்மகா ரெனமகிழுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

வர்மம் - வலிமை, பகை. நீதி - நடத்துந்தன்மை, காலத்தையும் இடத்தையும் தன்வலி, மாற்றான்வலி, வெல்லுமுபாயம் இவைகளையும் அறிந்து வினைசெயல்; இதில் வல்லவர் க்ருஷ்ணர். பலம் - வீமன். ஜயம் - அர்ச்சுனன். குறியென்றது ஒரு தரும்பைக்கிள்ளி மாறி எறிந்தது.

காவல் - ஜராசந்தன் நரமேதயாகஞ்செய்யப் பல அரசர்களைக் கொண்டுவந்து சிறையிலிட்டிருந்தானென்பது.

கண்ணன் அவ்வரசர்களை விடுவித்ததும் அவர்கள் யாகத்துக்கு வேண்டியன உதவியதும் மகுடத்தின் கருத்து.

அருச்சுனன் திக்விஜயம்.

[வடதிசைப் பருவதங்கள், கந்தருவாதியருறையுள், தவமகிமை.]

உச. நவத்தினூறு கண்டமும் நாடியிசை நாட்டியே
நால்வரும் வருகமென்றே
நயம்பட மொழிந்துரை வகுத்துநல் விஜயனும்
நகைமுடித் தருமனருளால்
பவத்தினூறு துன்பங்கள் பாற்றிடும் வடதிசைப்
பல்பெயர்ப் பதியெதிர்கொளப்
பகர்விந்த மேமகூ டங்கிடத மணிமால்ய
மந்தரஞ் சிகரநீலம்
சிவத்தினூறு கந்தனுறை யுண்மேரு முதலாய
செழுமலைக ணண்ணிவிஜயச்
சீர்க்கம்ப நாட்டியே தேவர்கந் தருவர்திறை
சிந்தையிற் றரவுமீண்டான்
தவத்தினுடல் வாட்டுநர் சாரமிர்த மாயவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

நவகண்டங்கள் பின்னர்க் காண்க.

பதி - ஆகுபெயர், பதியிலுள்ளவரசர்கள். கந்தனுறையுள் - கந்தமாதனம். விஜயகம்பம் - திக்விஜயஞ் செய்யுமரசர்கள் தம்மால் வெல்லப்பட்ட இடங்களில் தம்பெயரும் உருவமும் பொறித்து நாட்டும் ஸ்தம்பம்.

அரிதிற் பயின்ற மந்திரங்களாலும் வில்வன்மையாலும் பிறப்புரிமையாலும் அர்ச்சுனன் தேவரிடங்களையுங் கடந்தானென்பது மகுடக் கருத்து.

வீமன் திக்விஜயம்.

[வங்கங்கலிங்கமுதலிய நாடுகள், ஜீவகாருணியம்.]

உ௫. கோத்திரஞ் சூத்திரங் குடிமர புரைத்துமே
வேத்ரகீ யத்துறையுநாள்
குளிரேக சக்ரபுரி கூடிநற் றிருவனையள்
கூறுதுய ராற்றவொண்ணுன்
மாத்திரஞ் மலையனைய வெம்பகற் கொன்றவன்
மாண்படை புடைசூழவே
மாதிரக் குணமாலின் மன்னிய கலிங்கமும்
வங்கங் குலிங்கமற்றும்
தோத்திரப் புகழ்பாட மேவலர் களத்தோட
தொந்தயுத் தம்பலசெய்தே
துதைமதக் களிறுமாத் துன்றுநிதி பலகொண்டு
தொல்பதி புகுந்தனனரோ
சாத்திரத் துட்பொருள் சார்பவர்ச் சார்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கோத்திரம் - முனிவர்பரம்பரை. சூத்ரம் - வேதநெறி அநுட்டானங்களைக் கூறும் ஆச்வலாயனம் ஆபஸ்தம்பம் முதலியன.

திருவனையள் - பாண்டவர்களைத் தமர்போலுபசரித்த அந்தணன் மனைவி. துயர் - தாபத நிலைத்துன்பங்களைக் கூறிக் கணவனொடு நானே பகனுக்கு உணவுகொடுசெல்வேன் என்று பேசிக்கொள்ளும் துயர்நிலை உபந்யாசம். மாதிரம் - திசை. மா - குதிரை. சாத்திரத்துட்பொருள் - ஈகை தயை முதலியன உடைமை. ௬உ அறமும் வளர்த்தவளாதலின் தன்றெழில் புரிவாரைச் சார்பவள் என்பது.

நகுல சகாதேவர் திக்விஜயம்.

[துஷ்டநிக்ரகம், சிஷ்டபரிபாலனம், தக்கோரை வினைவயினேவல்.]

உசு. விண்ணளிக் கும்மிறை வியன்மகன் றம்பியர்கள்
மேதினி மதிக்கும்புகழ்
மெய்த்தருமன் பணிகொண்டு மேற்றிசைத் தென்றிசை
மிகும்பதி புகுந்தனரிப்பால்
கண்ணளிக் கும்மெழிலி னகுலனுங் கண்டவர்
கருத்துணர்ந் தன்பராகக்
கறுத்தவர் சிரங்கொய்து காற்றென்று வருணனுங்
கழறெழக் கண்டுமீண்டான்
பண்ணளிக் கும்புகழ்த் தமிழ்வேந்தர் திறைகொண்டு
பாண்டவன் சகதேவனும்
பாண்டியன் மனையிருந் தீழமுந் தூதிற்
பணித்திறை பரித்துவந்தான்
தண்ணளிக் கும்பொறை தருநீதி கோயிலாந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

தம்பியர் - நகுல சகாதேவர்கள். பணி - கட்டளை. கருத்து - தருமர் யாகத்துக்குப் பொருளுதவ வேண்டுமென்பது. கறுத்தவர்- கோபித்தவர். கண்டு - செய்து. பாண்டவன் - பாண்டுவின் குமரன். பாண்டியன் - அர்ச்சுனன் மாமன். ஈழம் - இலங்கை.

விபீஷணனிடத்துக் கடோற்கசனைத் தூதனுப்பி அநேக பொற்பனை மணிகள் உதவப்பெற்றானென்பது.

தருமரது பொறையும் நீதியுங் கேட்டார் உவந்தளித்தல் மகுடத்தின் கருத்து.

வேள்விக்கு வேந்தர்கள் வருதல்.

[வினைத்தூய்மை, விருந்தெதிர்தல், மரியாதையறிதல்.]

உஎ. விளைத்தசீர்ப் பாண்டவர்கள் வேந்தர்க ளெவர்க்குமே
வேள்விநன் னாட்குறித்து
வியன்புகழ்க் கண்ணற்கும் வீட்டுமன் முதலோர்க்கும்
வ்யாசமுனி மற்றுளோர்க்கும்
திளைத்தமதி யொற்றரை வகுத்தேவி நூல்வலோர்
செழுமதியின் யாகசாலை
திறம்பட வகுத்தனர் செம்பொரு ளுணர்ந்தாரும்
தேர்வேந்த ரெவரும்வந்தார்
களைத்துமதி தவழ்முடிக் கோபுரத் வாரங்கள்
காணுமொன் பதுபடைத்த
கவின்புரம் பொறிகளைந் தெனுமைவ ரோடும்
புகுந்தனன் கண்ணபுருடன்
தளைத்தலற அன்பர்மதி யைத்தனி விளக்கிடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மதி ஒற்றர் - அறியக்கூடாத நுட்பங்களையும் பல்வேறுருவின ராய்ச் சென்றறிந்தும் பல தேய நிகழ்ச்சியையும் தம்மைப் பிறரறியா வகை சென்று நாடியும் வரும் மதியையுடைய ஒற்றியுணர்வோர். புரம் - நகரம். சரீரம் - சிலேடை, சிலேடைக்கிணங்கப் பெரிய நக ரமும் ஒன்பது கோட்டைவாயில்களுடைய தென்பது.

கண்ணனாகிய புருடன் (உயிர்) ஐம்பொறிகளாகிய எதிர்கொள் ளும் பாண்டவரோடு புரத்துட் புக்கான். உயிர் ஐம்பொறிகளோடு சரீ ரத்துட்புகுவதுபோல. (சிசுபாலவதம் கங-சர்க்கம் உஅ-சுலோகம்.)

இராஜசூயம்.

[கர்வமின்மை, அரசனிலக்கணம், அன்பினுயர்வு.]

உஅ. மன்பெருமை கொண்டவர சன்புரிவ திம்மகம்
மன்பதை யனைத்துந்தன்போன்
மாண்புற நினைத்தலும் தன்னுற்றன் பந்துவால்
வன்கணர் பகைவிலங்கால்
துன்புற லொழிப்பவன் அரசனித் தரையைமுன்
தூக்கினை கண்ணநீயே
சொன்மகம் புரிகமற் றென்றுமொழி தருமனைத்
தூயனினை யன்றியுண்டோ
அன்புறுதி யுடன்மகம் புரிகென்று மாலருள
அத்வர்யு ஹோத்ருமுதலோர்
அறன்மைந்தன் பாஞ்சாலி யிருவரையு நீராட்டி
அணிவேள்வி முந்துறுத்தார்
தன்பெருமை நோக்காது தமியரைப் பின்றொடர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ராஜசூயம் எல்லா அரசர்களையும் வென்று ஏகசக்கரமுருட்டு வோனும் ஜனனுகூலனுமாய்ப் பெரும்பெயர் படைத்தோனுற் செய்யப்படுவது.

உன்னுலேயே பூமி நிலைபெற்றதாதலின் நீயே இம்மகம் புரிக. நாங்கள் க்ருஷ்ணசகாயிகள் என்று தர்மர் கூறியது கர்வமில்லாத அன்புபற்றியது. (சிசுபாலவதம் கச - சர்க்கம் கச - சுலோகம்.)

கண்ணன் சகாயமற்ற பாண்டவரை நாடி உறைதலை மகுடம் உணர்த்தும்.

சிசுபால வதம்.

[பாக்யம், அக்ரபூஜை, கோபப்பயன், உருவுகண்டெள்ளாமை.]

உகூ. அழற்பொறி வலஞ்சுலவ அங்கிமுக மாந்தேவர்
அண்மியெதிர் வீற்றிருப்ப
அரிரூபன் வ்யாசமுனி அணிமகஞ் செய்திட
அடலைவ ரும்பெற்றனர்
கழற்பொலி பதத்திறை வீட்டுமன் முதலோர்கள்
கருணையொடு வாழ்த்துரைத்துக்
காவலர்க ளனைவர்க்கு முகமன் வழங்குக
கண்ணனுக் கக்ரபூஜை
நிழற்பொலியுந் தருநமக் காவாற் களிக்கவென
நேரிளையன் பூஜிக்கவே
நெடுங்கோப ரூபமிகு சிசுபாலன் போர்வேண்டி
நீளாழிக் காளாயினுன்
தழற்பொறியை நுட்பமென் வைப்பொதி யனுர்க்காயுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அங்கி - அக்நி. முகம் - எல்லாத் தேவதைகட்குமுரிய அவியை இதன்கட் பெய்தலின். அண்மி - அணுகி. முகமன் - உபசாரம். அக்ரபூஜை - சபையில் ஒருவரை அக்ராசனராகத் தேர்தல்.

காலிங்கநர்த்தனம், கோவர்த்தனதாரணம், கம்சவதம், முதலியன செய்யக்கண்டும் தான் அத்தைமகனுகியும் உபசரியாது நீளாழிக்காளாயினுனென்பது. ஆழி - சக்ராயுதம். பீஷ்மன் விதுரன் முதலியோர் அறிந்து ஆமோதித்தனர் என்பது. வைப்பொதி - வைக்கோற்போர்.

"உருவுகண்டெள்ளாமைவேண்டும்" - குறள் அதி - கஎ.

துர்யோதனன் சூழ்ச்சி.

[அழுக்காறு, விதியின் மதிமாறுதல், சூதின் கொடுமை.]

௩௦. விதுரனொடு வீட்டுமன் முதலோர்த நகரெய்தி
வியந்துதரு மற்புகழவே
விளையசூ யைப்பிண்ட துர்யோதனன் கன்னன்
மேற்சகுனி துச்சாதனன்
எதிரங் கிலாதசபை யும்ராஜ சூயமும்
எல்லையில் வேந்தர்பணிவும்
இனியவர் மேல்விளைவு மெண்ணிமன மாற்று
திருஞ்சூதில் வெல்லலன்றி
மதுரங்க மாடுமலர் மார்பரை வேறலரி
தென்றுவிதி சேர்நிருபனை
மதிமோக மாய்ப்பேசி விதுரனாற் பாண்டவரை
மாநக ரழைக்கவென்றார்
சதுரங்க நீவியே ஷடங்கத்தின் மேலுறையுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அசூயைப்பிண்டம் அசூயை ஒருருவெடுத்தாற்போன்றவன் இதுபோன்ற யாகமும் தருமன் அரசராற் பெற்ற கௌரவமும் தான் பெறமுடியாதென்று நாடோறும் இளைத்ததும் தகப்பன் உபதேசமும் முதனூலிற் காண்க.

ரங்கம் - சபை. தேன் பூக்களில் அரங்கமாகக்குதித்தல். நிருபன் - த்ருதராஷ்ட்ரன். சதுரங்கம் - சூது. நீவி - நீங்கி. சடங்கம் - ஷட்தரிசனம். சாங்க்யம் யோகம்-வேதாந்தமுதலியன. அறுகோணமும் சடங்குமாம். சடங்கு - நெய்தருப்பை சருக்குச் சருவமுதலிய ஆறுறுப்பாலாகும் யாகம் ஹோமம் முதலியன.

சூதுபோர்.

[மூத்தோர் மொழியிகவாமை, கற்பின்மாட்சி, பொறுமை.]

௬௧. திருமனை யெனத்தக்க மண்டப மமைத்ததிற்
செய்யுங் கிருகப்ரவேசங்
திகழவரு கெனமகார்க் கோலையொடு விதுரனைச்
சென்றைவரைத் தருகெனுங்
கருமனத் தாதைசொற் காணவரு தருமனைக்
காலங் கழிப்பவறிதே
கவறுகொண் டாடுகம் வாவெனச் சகுனியாற்
கண்ணிலான் சேய்கவர்ந்தான்
விரிமனத் தாசையிற் றன்னொடுந் தமவெலாம்
வேந்தரெவ ருங்காணவே
விளைவேது முணரார்கள் செயலாற் றிரௌபதி
விளைத்தசெய லுலகஞ்சுமே
தருமனை யுதிட்டிரப் பெயர்நிறுவி யாக்கஞ்செய்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கவறு - சூது. ஆடுகம் - ஆடுவோம். கண்ணிலான் - த்ருதராஷ்டிரன், தாக்ஷிண்யமற்றவன். விரிமனம் - பேராசை. தம தருமனுடையபொருள்களும் மனைவிமக்கள் முதலியனவும்.

செயல் - பாண்டவர்களை உத்தரீயத்தை எடுப்பித்ததன்றித் திரௌபதியையும் உத்தரீயத்தை எடுக்கச்சொல்ல அவள் மறுத்தமையால் துகில் உரியச் சென்றதும் பாண்டவர்களைப் பசுக்களென வைதது முதலிய செயல். உதிட்டிரன் - யுதிஷ்டிரன். யுத்தத்தில் ஸ்திரமானவர் - செல்லார், சென்றால் திரும்பார்.

பாண்டவர் சபதம்.

[பச்சாத்தாபம், கற்பின்வலிமை, வெகுளியினெல்லை கடவாமை.]

௩உ. மின்னிடைப் பாஞ்சாலி வேந்தர் குழுவத்துளே
மேவியொரு கண்ணனருளால்
விளைத்தபல பட்டாடை மேதினி நிரப்பலும்
மெய்யொடுஞ் சிந்தைபதறி
மன்னிடுங் காளியோ வென்றுகட் பொறியிலான்
மற்றவரை யடிமைநீக்கி
மன்னுபன் னீராண்டு வனமுறைந் திங்ஙகர்
மறித்துமுறு வீர்களெனவே
துன்னிடுங் கதைவிலொடு தோன்றுமற் றிருவருந்
துணைவன் மொழிக்கடங்கிச்
சுயோதனற் கன்னனொடு துணைவரைச் சகுனியைத்
தோமறப் பொருதுமென்றார்
தன்னடி யரைச்செயுந் தண்டனை தனக்கெனுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பாஞ்சாலி - பாஞ்சாலதேசத் துருபதன் மகள். குழுவம்-சபை. பொறி - கண், தலையிலெழுதிய நல்ல எழுத்துமாம். காளியோ எனல் - இவள் தெய்வத்திறத்தாலும், கணவரை வசீகரிக்கக்கூடிய வனப்பும் குணநலனுமுடைமையாலும் பாண்டவராற் றம்புதல்வர் நூற்றுவரைத் தொலைப்பாளென்னும் பயம்.

அடிமை நீக்கல் - சேலைகள்வரக்கண்ட த்ருதராஷ்ட்ரன் பயந்து பாஞ்சாலியை யாதுவரம் வேண்டுமென, அவள் முதலிற் றன்னையும் பிறகு மக்களையும் அதன்பின்னர்த் தருமரையும் பிறகு நால்வரையும் அடிமையினீக்குவித்துப் பிறகு ஒன்றும் வேண்டவில்லை என்று முதனூல் கூறும். அரசன் அதற்கு மகிழ்ந்து நாட்டையுமளித்தவன் பிறகு துர்யோதனன் உபத்ரவத்தால் மறுசூதாடினன் என்பது.

மூன்றுவது

ஆரணியபருவம்.

பாண்டவர் வெளிச்சேறல்.

[கண்ணன் வருகை, அரசர்களுக்குக் கண்ணன் உபதேசம்.]

௬௬. சீர்மறையின் ருத்ரபதி யாமளங் கூறியே
செழுமுடியர் வெளியேறலுஞ்
சிந்தையொ டடன்வருந் தேர்வேந்தர் செற்றமொடு
செங்களப் போர்வேண்டலும்
கார்மறைபு மின்னெனக் கடிதின்வரு கண்ணனுங்
கலுழுமைவர்த் தேற்றியே
கழற்றுரையின் மன்னரை விளித்தபோ தறுகென்று
கடிநகர்ச் செல்லவுய்த்துப்
பேர்மறையும் வஞ்சகர் துஞ்சிடப் பாசுபதம்
பெறுமாறு பேசிநரனைப்
பெருவனத் துறைநன்மை பெட்புறுத் தினைஞரொடு
பின்னவட் கொண்டுசென்றான்
சார்மறைக் காட்டின்வரு மன்பர்முகில் காண்மயில்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பாண்டவர்கள் சூதசபையினின்றும் எப்படிப் புறப்பட்டார்கள் என்ற த்ருதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் விடையளிக்கும்போது தௌம்யர் ருத்ரயாமள முதலியவற்றை ஜபித்துக்கொண்டு உடன் போகிறார் என்பதும் முதனூலிற் கூறப்பட்டுள்ளது. அதற்குப் பலன் இறைவனருளால் திரும்பப் பெரும்பயனெய்துதல். மின்னல்-கார்யகாலத்தில் திடீரெனத் தோன்றுதற்குவமை. இதுகாறும் கண்ணன் சூதுபோரில் மறைந்து நின்றது எதிர்விளைவுநோக்கி.

கழறல் - மறுத்துரை. துஞ்சல் - இறத்தல். மறைக்காடு - மறைவாகிய காடு, வேதாரணியம். காட்டில் உபாசிக்கப்படுவோள் என்பது.

அருச்சுனன் தவஞ்செய்தல்.

[சகுனம், வினைக்குறைநிரப்பல், தவமுஞ் சிரத்தையும்.]

௬௪. அவத்தினுறு வஞ்சகரி னைவருங் காடுற
லறிந்துவரு முனிவேந்தனும்
அணிராஜ சூயத்தி னுற்றவுற் பாதமும்
அவற்றின் பலன்களுமினிச்
சிவத்தினுறு சிந்தையிற் க்ரீடியவ னம்புறுஞ்
செம்மையு மறையுமோதிச்
செழுமதித் தாபதர்ச் சேர்ந்துநனி வாழியர்
சிந்தையிற் சேர்வலென்றான்
பவத்தினுறு முளையெனக் கயிலையிற் பார்த்தன்செய்
எழினோன்பி னாக்கமுளையும்
இயலன்பி னீராற் பணைத்துநற் கதிர்கூடி
ஏர்பெற வளர்ந்ததன்றே
தவத்தினுரு கும்மனந் தவிசெனச் சார்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

முனிவேந்தன் - வியாசர். உற்பாதம் - அசம்பாவிதம் சம்பவித்தல் (மேல்வருந் தீங்கை முன்னறிவிப்பது.) பலன் என்றது - தடுக்க முடியாத உலகக்கலக்கமுண்டாகுமென்பது. நின் னிமித்தம் பெரும்போர் ஏற்படும் என்ற வியாசர் மொழியினாலேயே தருமர் துர்யோதனாதியர் செய்த பிழைகளைப் பலதரமும் பொறுத்த தென்க.

அவ்வப்போது சிறுபிழைகளைப் பொறுக்காது கண்டியாமையே பின் பெரும்போர்க்குக் காரணமென்பதும் ஊகிக்கத் தக்கது.

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்" நாலடியார்.

அருச்சுனன் பாசுபதம் பெறல்.

[இந்திரிய நிக்ரகம், இறைவன் கருணை, தாயன்பு.]

௬௫. பாயம்பு சோராது பார்த்தனைக் காமனும்
 பயில்விழி யரம்பைமாரும்
பண்ணொடு தொடுத்துமே பயனில்லை யிந்திரன்
 பரீக்ஷித்து நன்றுவந்தான்
தூயன் புறஞ்செலா இந்தியத் துடன்மனம்
 தோகையொரு பாகனையுறச்
சொல்லுவமை பிறிதறத் துறுகுற்றி போன்றனன்
 தொடர்மூக னிடர்நீக்கவே
ஏயம்பு வில்லுட னிறைவியொடு வேடனா
 யெதிர்கேழல் விளைபோரினில்
இறைவனவ னோடுபொரு தெழில்விலடி கொண்டுமே
 யிணையிலத் திரமுமீந்தான்
தாயன்பை யொத்துருகு தக்கார்க் கிரங்குறாஉந்
 தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
 சச்சிதானந்த சிவமே.

காமம் தவத்திற் கிடையூறுதலின் கயிலைச் சார்பிலுள்ள பல தேவ போகமாதரையுங் கருதாது அர்ச்சுனன் நோற்றானென்பது. இந்தியம் - இந்திரியம் என்பதன்மரூஉ. தோகை ஒருபாகன் - அம்பிகையை இடப்பாகத்திலுடையவர். குற்றி - விளைநிலத்து விலங்கு பறவைகள் அஞ்சுமாறு புல்லாற் செய்யப்பட்ட மனிதவுரு. மூகன்-பன்றிவடிவாகிய ஓரசுரன். கேழல் - பன்றி. அடிகொளல் - அன்பர்க்கிடுபடுவோனென்பது பற்றி.

உலகமாதாவாகிய அம்பிகையின் பேரருட்டிறத்தை உணர்த்துவது மகுடம்.

நிவாதகவசர் காலகேயர் வதை.

[தவப்பயன், மனிதர்க்குத் தேவலோக சஞ்சாரம்.]

௩௬. வன்மையொடு வின்மையுங் காணலாம் வருகென்று
வன்பதத் தெற்றிவிண்மேல்
வருமைந்தன் வன்பவத் துகளறப் பாசுபத
மறையொடுங் காட்சிதர லுந்
தொன்மைபெறு தாதையுந் தோன்றலை வியந்துதன்
சொர்க்கநகர் கொண்டுசென்றே
தூநகர் வலங்கொண்டு துன்றரிப் பீடமேற்
சூழ்மகுட முஞ்சூட்டினுன்
பன்மைகொ ணிவாதகவ சர்மூக்கி ஞட்டவிரல்
பான்மைமிகு காலகேயர்
பல்படைப் போர்செயக் கடவுடரு நற்படை
பயிற்றியவ ராண்மைகொண்டான்
தன்மெயுறு மாதலார் பெண்மை நயவாற்கருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

வின்மை - விற்சாதுரியம். வருகெனல் - வேடர்குலத்தைப் பல காலும் வென்ற வெகுளியோய் வேடனுகிய என்னேடும் பொருக வருக என்று அசதியாடியது. எற்றுதல் - மேலேபோக உதைத்தல். பக்குவர் எய்தும் பாதமாதலின் பவத்துகளற எற்றி என்றது. பவத் துகள் - பிறவியாகிய குற்றம். தாதை - தகப்பனுகிய இந்திரன். தன்னகரிற்கொண்டுசென்றது தவத்தின் சிரமநீங்கவும் தன்பகை யாகிய நிவாதகவச காலகேயரை அழிக்கவுங் கருதியென்க.

அருச்சுனன் ஊர்வசி காமத்தை விரும்பாது தாயெனமதித்த தும் அதனுல்வந்த சாபமும் எதிர்காலத்து நன்மையாவதைக் குறிக் கும் மகுடம்.

வீமன் புஷ்பயாத்திரை.

[முயற்சியின் பெருமை, சிரஞ்ஜீவித்தன்மை, சகோதரவாஞ்சை.]

௩எ. சாருமைம் பொறிவென்று காமிய வனந்தனிற்
றருமன்முத லோருறையுநாள்
தக்கஜய சீலனுங் க்ரீடிவர லிந்திரன்
றகைமையிற் சாற்றவிட்ட
பேரமை யுரோமசப் பெருமுனிவ னுரைதழீஇப்
பெட்பினவ னோடுமேகிப்
பிறங்குவன மலைகண்டு கங்கைபாய் புனிதகிரி
பேசுகந் தர்ப்பமுற்றான்
ஓரமைய மருகுவீழ் பொன்மலர் பாஞ்சாலி
யுறுகந்த மோர்ந்துவேண்ட
உடன்வீம னளகைப் புறஞ்சார்ந்து நல்லனும
னுறவுடன் மலருமுற்றான்
சாருமைம் பூதமுந் தருவலி பெறச்செயுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அருச்சுனன் சுவர்க்கத்தினின்றும் வந்தது சிலவருடங்கழித்து வீமன் புஷ்பயாத்திரையின்பின். இது குபேரனுக்கும் தருமனுக்கு முண்டாகிய சம்பாஷணையால் விளங்கும்.

அமையம் - வேளை. அனுமனுறவு - வழியெதிர்ப்பட்ட அனுமன் வீமனைக்கண்டு வெகுள, நீயென்ன வாயுபுத்ரன் அனுமனோ. குரங்கே வாளா இரு என்ற வீமனுரையால் அனுமன் உண்மைகூறி இருவரும் பெருநட்பாயினர் என்பது. பின்னர் வீமன் தான் அனுமனது விசுவரூபத்தைக் கொள்ளவும் அனுமான் தம்பியின் கொடியிலிருக்கவும் வரம் பெற்றான்.

வீமனாகிய வாயுவின் வலியையுணர்த்த ஐம்பூதத்தின் வலியை உணர்த்துவது மகுடம்.

தருமர் அளகை சார்தல்.

[பெரியோர் தமர்பிழையும் வெறுத்தல், பழிக்கஞ்சுதல்.]

௩அ. மெத்திய வியன்பொழிற் சுரபிமலர் பெறல்வேண்டி
மீட்டுமொரு நாளளகையில்
வீமனு மரும்போர் விளைத்துமணி மானுயிரை
வீட்டவத் தனதனேற்றான்
கொத்தியன் மலர்குழலி கூறவுயர் தருமனுங்
குறுகுங் கடோற்கசன்றோர்க்
குலவியொரு நொடியினிற் கூடியள காபுரிக்
கோவைப் பணிந்தேத்தலும்
நத்திய புகழ்த்தரும நன்மதி குலத்தலைவ
நவையிலோய் வருகவென்றே
நகரியிற் கொடுசென்று நல்விருந் தாற்றியே
நவிலும்வின் மன்னனுரையே
ஸத்தியம் வெல்லவுயர் சாந்தந் தழைக்கவருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மெத்துதல் - மெச்சுதல். சுரபி - வாசனை. மணிமான் - குபேரனது சேனைத்தலைவன். வீட்டல் - அழித்தல். தனதன் - பொருளைக் கொடுப்போன், குபேரன். ஏற்றல் - எதிர்த்தல். குழலி - திரௌபதி. நத்துதல் - மிகுத்தல். நவை - குற்றம்.

வீமன் கிளர்ச்சியாற் பொங்கியெழுந்த குபேரன் தருமன் றண்ணளிக்கும் நீதிக்குமிரங்கி அவனோடளவளாவித் தான் சுவர்க்கஞ் சென்றதும் தம்பியையும் இந்திரனையுங் கண்டதும் அவன் வருகையையும் விளம்பி விருந்தோம்பி ஆதரித்ததையுணர்த்த எதுவாய் நிற்பது மகுடக் கருத்து.

சடாசுரன் வதை, துருவாசர் விருந்து.

[பிறர்மனைவிழைதலின்கேடு, விருந்தெதிர்தலின் பயன்.]

௩௯. போர்வித் தகன்வீமன் போயளகை யிற்பொருது
பொன்மலர்கள் பலவுமுற்றே
புரம்புகச் சடனெனும் பொருநசைத் தானவன்
பூங்குழற் பாஞ்சாலியை
ஓர்வித்து நாசமுறு தற்கீ தெனுதெடுத்
துயர்வானி னகல்போதிகல்
உருவான ஒருவீம னுயர்வீர ரிருவரொடு
முடல்வானை யுயிர்வானுறச்
சேர்வித்து மீண்டனன் றிரௌபதி திறத்தாசை
சேர்ந்தெவர் வாழுநீரார்
தெறுபசியி னோர்பகற் றுருவாசன் வனமுறீஇத்
தேவருண் டரவுவந்தான்
சார்வித்த தின்றியே தனிவிளைவு செய்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சடன் - சடாசுரன். நசை - விருப்பம். தானவன் - தனுவின் புத்திரன். தனு - தக்கன்மகள், காச்யபர் மனைவி. திதி, அதிதிசகோதரிகள். உடல்வானை - போர்செய்பவனை. நீரார் - தன்மையர்.

துர்வாசர் ஒருநாள் துர்யோதனன் வீட்டிலுணவருந்தி வேண்டும் வரத்தைக் கேளென, அவன் இன்றுபோல் நாளைக்குத் தருமனுறையுளில் நீயும் நின்கணமும் உண்டு மகிழ்திர் என்றான். தருமன் விருந்தோம்பற் கியலாது சாபமெய்துவ னென்பது அவன் கருத்து.

“செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்” தருமர்க்கு உலகத்துக்கும் விருந்தாற்றும் வன்மை அவருபாசனைக் கடவுளாகிய அறக்கடவுளின் அருளென்பது மகுடக் கருத்து.

அருச்சுனன் நெல்லிக்கனியை எய்தல்.

[தவத்தின்வலிமை, சத்தியத்தின் பெருமை.]

௪0. பொய்ந்நிலைத் துர்யோத னன்புகல வருமுனியும்
 புண்ணியத் தருமனன்பாற்
போனக நுகர்ந்துநனி வாழ்த்தியே போதலும்
 புகழ்மயி லமித்ரமுனிவன்
மெய்ந்நிலைய நோன்புசெய் துண்ணுமா மலகமதை
 விஜயனைக் காட்டவவனும்
விரைவினுங் காரவிலி னஞ்ஞான வம்பேற்றி
 வீழ்த்தலுந் தருமனுங்கே
துன்னுமறி வுருவனை யுன்னவரு கண்ணனும்
 சொற்றபடி யைவருமினும்
சூழ்ந்துநெஞ் சறியுமது பொய்யா துரைத்தலும்
 துன்றியது கனியுநிலையே
தன்னிலையி லெப்பொருளு முண்மையி னிறுவுறாஉந்
 தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
 சச்சிதானந்த சிவமே.

தருமர் சூரியனிடத்து அக்ஷயபாத்ரம் பெற்றவர். துருவாசர் வந்த அன்று திரௌபதியின் தியானத்தாற் கண்ணன் வீசிய அமிர்ததிவலைகள் முனிவர்மூழ்கிய அருவியிற் கலந்து ஆசமனத்தில் உணவாகிக்களை நீக்கி மகிழ்வித்துப் பாண்டவர்களை ஆசீர்வதிக்கச் செய்தனவென்பது. கண்ணன் பாத்திரத்தொட்டிய ஒரு பருக்கையை எடுத்து உதட்டிற் சுவைக்க முனிவர்கள் பசிநீங்கினர் என்பதுமாம்.

அமித்ரன் - உலகப்பற்றற்றவன். அஞ்ஞானம் ஒருவனை அவாவுவித்துப் பொருளைப் பற்றுதலின் அம்பென்றும் அதற்கேது ஆணவமாதலின் வில்லென்றும் அதனாலாய நிகழ்ச்சியை மாற்றுவது ஞானமாதலின் ஸத்தியஞானம் ஒட்டும் பசை என்றும் உருவகிக்கப்பட்டன.

உண்மையால் எல்லாம் நிலைபெறுகின்றன என்பது மகுடம்.

யக்ஷப்ரச்நம்.

[நினைக்கத் தனக்கு, அறத்தினியல்பு, தத்துவ ஞானம்.]

சக. கான்புக்க மாசிலாக் காளையர்க ளைவரைக்
கண்ணிலான் சேய்செகுப்பக்
காளமுனி யைக்கொண்டு காண்மகத் தெழுகுறள்
கானத் துலாவுபொழுதில்
நோன்புற்ற முனிமைந்தன் மான்றோல் கவர்ந்தநுண்
கள்வனென வோடுமறனை
நோக்கியே யோவாது செல்லும்வா யெல்லாமு
நொடியினிற் பின்றொடர்மகார்
தேம்புற் றமைந்தனர் தீம்புனற் றடகமொடு
தியநீர்ப் பருகிவீழ்ந்தார்
செல்பூத முனிபாற் றிரும்பிய தியக்கன்மொழி
தேற்றிநற் றருமருய்ந்தார்
தான்பிறர்க் கெண்ணுமின் னாத்தனக் கேயெனுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ ளீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

செகுத்தல் - அழித்தல். காண்மகம் - செய்யப்பட்ட அபிசார ஓமம். குறள் - பூதம். அறன் - இருடிகுமாரனது மான்றோலைக் கவர்ந்தோடிய மானுருவாகிய யமன். ஸ்வர்க்காரோகண காலத்தில் யமதரும ஸம்வாதத்தாலறிக. ஓடுமறனைத் தொடர்தல் - சிலேடை. தினந்தோறும் தரும வழுவிற்குக் காரணமாகும் மோகவலைகளிற் சிக்குண்ணாது நடுவு நிலையினிற்பதை யுணர்த்தும்.

"ஒல்லும் வகையானறவினை யோவாதே செல்லும்வா யெல்லாஞ் செயல்." குறள், அறன்வலியுறுத்தல். திரும்பியது - தன்னை இறந்தார் மேலேவினனென்று வெகுண்டு விட்டவன் பாலே திரும்பியது. இயக்கன் மொழி - அநேக நுட்பமான வினாக்கள். முதனூலிற் காண்க. "மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்பது குறள்.

நான்காவது

விராடபருவம்.

பாண்டவர் கரந்துறைதல்.

[காலத்திற்கேற்ற கோலம், குறிப்புணர்தல், தேர்ந்துவினைசெயல்.]

சஉ. இங்கிதத் தோடுருவ மென்றுமுணர் நீர்மையர்
இயல்பினுடன் வருநரையொரீஇ
எழில்கொண்ட கானில்வரு மின்னல்வினை போல்வன
இனியொரான் டாகாதெனத்
தங்குரத் தோடுபகர் தருமன்மொழி போற்றினர்
தங்கிடம் விராடநகரே
சான்றதென நேர்ந்தனர் தருமனுயர் கங்கனுத்
தரணிபர்க் குழையனுனன்
அங்கிதத் தோடடிசி லட்டுறு தொழிற்பலா
யனனுக வீமனுற்றான்
ஆனிரைகள் காத்தலி னணிகொண்மாக் காத்தலின்
அமர்ந்தன ரிருவீரரும்
தங்கனன் மரத்தினிற் சார்தலென வெங்குமுறை
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

இங்கிதம் - நோக்கின் மனக்குறிப்புணர்தல். ஆகாரம் - உருவச் சேட்டையினுள்ளநிலை யுணர்தல். இன்னல்வினை - பகாசுரன்வதை, அளகையுத்தம் போல்வன. ஆகாதெனல்-வீரச்செய்கை கண்டோர் வீமனென்றயிர்த்து அறிவாரென்பது. அறிந்தால் ஐவர் மறித்தும் பன்னிராண்டு வனமுறைய வேண்டுமென்பது. உழையன் - பக்கத்திருப்போன், அமாத்யன் என்பதுமது. அங்கி - அக்கினி. மா - குதிரை.

நெருப்பு மரத்திற் சூக்குமமாய் மறைந்திருத்தல் ஈசுவர வியாபகத்துக்கும், பாண்டவர் கரந்துறைதலுக்கும் உவமை.

திரௌபதியின் கற்பு.

[பெண்களின் ஆபத்தர்மம், தீமைப்பயனையுமியைந்து நுகர்தல்.]

சஙு. தொக்கமனர் சூழவைவயி னுணமொடு கூப்பிடத்
தொடர்கலைகள் பலதோற்றியே
தூயசொற் போற்றிமிகு கற்பினைக் காத்தவன்
றுணையுண் டெனத்தேறியே
மிக்கமன நோன்பின ளெனும்பெயரின் மன்னவன்
விழைசுதேட் டிணைமருங்கின்
மேவித் திரௌபதியு நற்றோழி யாயினள்
விஜயன்முன் றந்தையுலகில்
உக்கமன வூர்வசியி னுறுபோக நீக்கியவ
ளுரைசாப ரூபவலியால்
உறுபரத நூல்பயிற் றும்ப்ருகந் நளையென
வுத்தரை கோயில்புக்கான்
தக்கமன வுறுதியர் பெண்டன்மை காப்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கலை - பட்டாடை, சதுர்த்தசகலைகள், சிலேடை. நோன்பினள் - விரதசாரணி. உக்கமனம் - காமத்தானெகிழ்ந்தமனம்.

அர்ச்சுனன் கன்னியரை விரும்பி மணத்தலல்லது பிறர் மணந்தவரை விரும்பாமை யுடையவன். "பிறர்மிச்சில்" என்பர் சிந்தாமணிகாரர். சாபரூபவலி - வலி, அலி எனப் பிரியும். சாபவன்மை, சாபத்தாலாகும் அலித்தன்மை எனப் பொருள்படும்.

விரும்பாப் பெண்டிரைக் காமநுகரமுடியாமை மகுடத்தின் கருத்து. இறப்பினுமிறப்பளேயன்றிக் காமந்தராள் கற்பினள் என்பது. இராவணன் சாபமும் ஈண்டுக்கவனிக்க.

கீசகன் வதை.

[திரௌபதியின் தோற்றம், காமுகர் துன்பம்.]

சச. காரணிந் தனகண்ட னல்லருளி னவர்தங்
காதலியெனப் பிறந்தாள்
கருப்பத் துருதுமக வேள்விக் கனன்முகங்
கவினவரு புனிதமுடையாள்
பாரணி பெறச்செயும் சொர்க்கநற் றிருவெனும்
பாவையர சன்றேவிபாற்
பண்பொடு பயின்றுவதி நாளினிற் சோலையிற்
பார்த்திவன் மைத்துனன்கண்
டாரணங் கிவளென்ன வருகுற்று மற்றவள்
அகல வகலான்றொடர்தலும்
அவளினைதல் காண்வீம னற்குறி படைத்தேகி
யவனுரம் போழ்ந்தனனரோ
தாரணியி லறிஞர்தரு மந்தரும மென்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

நீலகண்டன் அருள் - பதிம் தேஹி என்று விதிவயத்தாலைந்து தரங் கேட்ட நாளாயனிக்கு ஐவர் இந்திரரையளித்தது. வேள்விக் கனல் முகத்து வருதல் - யாஜகன் என்னும் வேள்வியாசான் பாயச மருந்த அரசன் றேவியை அழைத்தான். அவள் அலங்காரத்தாற்றும திக்க உடனே அவ்வவியை அனலிலே ஆகுதிசெய்தான். அவ்வோ மத்தியில் ஆண் பெண்ணாகிய இருமக்களுதித்தனர். அரசன்றேவி பயந்து வேண்ட வளர்க்குந் தாயாகெனப் பணித்தானென்பது. அற்குறி - இரவிலிவ்விடம் வருகெனத் தலைவனையுணர்த்தும் சங்கேதத்தலம்.

அறிஞர் நூலாற்கண்டதாதலின் அவர்செய்கை எதுவோ அதுவே அறமெனப்படுவதென்பது மகுடக் கருத்து.

துரியோதனன் நிரைகவர்தல்.

[நல்லோருறையு நாட்டினியல்பு, காலமறிதல்.]

சரு. உலைப்பெய்த வரிசியென வுள்ளம் புழுங்கியே
யுறுநாக கேதுபுவியில்
ஓர்ந்தைவ ருறுநாடு மும்மழையு நால்வளமு
மோவாது பொலியுமதனால்
இலைப்பெய்த தாரின ரிருப்பதெழின் மச்சமா
மென்றுநிரை கவர்தலுற்றான்
எதிர்வரு த்ரிகர்த்தனை நால்வரொடு மச்சர்கோன்
ஏற்றனன் குருசேனையும்
வலைப்பெய்த மானென வளைத்திடலு மாநகரை
வடபாலி லுத்தரனொடும்
மான்விழிப் பேடியும் மான்றேரி லேகிமுன்
வடிவம்பு தேருமுற்றான்
தலைபெயலை நோக்குநர்க் குறுமாரி போல்வருஉந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

உலைப்பெய்த - உலையிலிட்ட. நாககேது - அரவக்கொடியை உடைய துர்யோதனன், அன்மொழி. மும்மழை - மாதமும்மாரி. நால்வளம் - கடன்மலை முல்லை மருத வளங்கள், நானுவளங்களு மாம். ஓவாது - நீங்காது.

ஆனிரைகவர்தல் - போரின் முதலங்கம், இதனைவெட்சி என்பர். கரந்தை நிரைமீட்டல். த்ரிகர்த்த வரசனை நிரைகவரத் தூண்டிக் குருசேனை பின்வந்தது.

மகுடம்: பாண்டவர் அஞ்ஞாதவாசந்தீர்ந்து வெளிப்படுங் காலத்தை எதிர்நோக்கலை யுணர்த்தும். தலைப்பெயல் - முதன்மழை.

பாண்டவர் வெளிப்படல்.

[தம்மிற்பெரியோரை ஏவலாகாமை, காலத்திற் கடங்கியோன் மேல்வினைமுடித்தல்.]

சசு. மழைமுகடு தொடுமுடித் தேரிலனு மான்கொடியில்
வந்திருந் துறுசேனையை
வாயிடிக் குரலினெடு யோஜனை துரப்பவும்
வல்விஜய ஞெலித்து
முழையகடு புகவரசர் முடிவணங் கான்கன்னன்
முதுகிட த்ரோணன்முதலோர்
முதுமொழி கிளத்திடப் போர்காட்டி நிரைமீட்டு
மொய்ம்பினெடு மூர்புகுந்தான்
விழைமுகத் தனயனல் விராடனும் பாண்டவரை
வேண்டிநனி யெங்கள்பிழையை
வெறுதுதன் மகட்பெறுக விஜயற் கெனத்தருமன்
விறலபிமனுக் கிசைந்தான்
தழைமுகிற் ற்றேன்றிடு மின்னெனக் கடிதின்வரு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மழை - மேகம். அருச்சுனன் கொடியில் அனுமன் உறைதலை,

செருச்செய் வான்வரு சேனைவெண்டிரையையுங் கடப்பான்
பருச்சிலம்பினின் றுகைதரு பாவனைபோல
வுருச்செழுஞ்சுட ரெறிப்பநின் றுலாவினன் உண்மைக்
கருச்சுனன்றடந் தேர்க்கொடி யாடையி லனுமன். (சுO)

உரவினுல்வட மேருவைக் கொடுமுடி யொடித்து
விரவியென்பெருந் தாதைநின் றூதையை வென்றான்
பரிவினின்னையான் வெல்வனென் றவனிபன் பதாகை
யரவை மற்றிவன் பதாகையி லனுமன்வந்தடுத்தான். (சுி)

என்னும் நிரைமீட்சிச் சருக்கமுதலியவற்றுட்காண்க.

உலூகன் தூது.

[தருமயுத்தத்தில் முதற்கட்டுதேனுப்புதல், மந்த்ராலோசனை.]

சஎ. சோர்தலற வஞ்ஞாத வாசமு மிருந்தைவர்
தூதினிற் கண்ணன்முதலோர்
சுகத்திநெடு மணவினை குறித்துணர விட்டனர்
சூழ்ந்தெவரு நண்ணினுரால்
கார்தலத் துற்றெனக் கடிமுர சியம்பிடக்
கருதுநல் லோரையதனில்
கண்ணன்மரு கன்மணங் களிப்புற நடாத்தியணி
காணுமுப லாவ்ய நகரிற்
றேர்தலொடு செய்வினை திறம்பட வகுத்தனர்
சீதரன் த்ருபதன் மொழியால்
செலக்கடவ நாள்சென்ற ஐவர்பொரு டருகெனச்
சென்றன னுலூகமுனியே
சார்தலெதிர் வோர்முனந் தகவறி வமைப்பவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அஞ்ஞாதம் - அறியப்படாமை. கார்தலத்து உற்றென - மேகம் இடியோடு பூமியில் வந்ததுபோல. மேளமுழக்கத்திற்கு உவமை.

ஓரை - முகூர்த்தம். உபப்லாவ்யம் - விராடன் அபிமன்யுவுக்குக் கொடுத்த சீதன நகர். இங்கிருந்து யோசித்தார்களென்றது மந்த்ராலோசனை மறைவாக நிகழ்த்தவேண்டுமென்பது பற்றி. உலூகன் - துருபதனது புரோகிதன்.

மகுடம்: "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்பதுபோல அவனருளே அவனையுபாசித்தற்கேது என்பதை உணர்த்தும். "தவமுந் தவமுடையார்க்காகும்" குறள். நல்லறிவை அருள் கொடுப்பதுபோலத் தருமயுத்தத்தில் தூதுவிடல் (நல்லறிவூட்டல்) முதலாவதென்பதும் மகுடத்தில் தொனிக்கும்.

ஐந்தாவது

உத்யோகபருவம்.

க்ருஷ்ணன் தூது.

[பெரியோர்கள் பொறுக்குமளவும் பொறுத்தல், உண்மைவீரம்.]

சஅ. உசாத்துணை கொளாமதிக் கௌரவ ருலூகனுரை
யொன்றும் பெறுதுவல்லே
யுற்றகுரு சஞ்சயனே யோரைவர் வனமிருந்
துனுற்றுதவ மொழியவிட்டார்
அசாவெதிர் தடுப்பவனு மைவர்மன மறிதரலு
மறன்மகன் சந்திநிதென
அடையார்கள் வெருவுறாஉம் வீமனும் விஜயனும்
அவக்குல மகற்றுமவனும்
நிசாவெதிர் பனிப்பகையி னீள்போர் கிளத்தலும்
நின்னுள்ள மெனமற்றையோன்
நிமலா வெனக்கதற நேரிழையு நெடியனும்
நேர்தூது செலவலித்தான்
தசாவதா ரச்செயல்கள் தன்விரலி னுெடுகாட்டுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

உசாத்துணை - ஆலோசனைக்குத்துணை. கௌரவர் - குருவம்சத்தவர், ஈண்டு நூற்றுவர். அசா - துன்பம். தடுப்பவன் - கண்ணன். சந்து - சமாதானம், ஐந்தில்லங் கொடுப்பினும் போதுமென்பது. வல்லார்க்கு 'யாதானுநாடாம்' என்றலின். ந+குலம். பகைவர் குலத்தை இல்லையாக்குதல். பனிப்பகை - சூரியன். மற்றையோன்-சகதேவன். நேரிழை - திரௌபதி. வலித்தான் - துணிந்தான்.

சக்தியின்செயல் இச்சாமாத்திரம் ஆதலின் தசாவதாரச் செயல்கள் பத்துவிரலசைப்பின் முடியுமென்பது. (லலிதாஸஹஸ்ர நாமம்.)

கன்னன் பிறப்புணர்த்துதல்.

[விதியின் மதிகெடுதல், பெரியோர்ப் பிழைத்தல்,
கருதியது முடித்தல்.]

சசூ. பாரத நிகழ்த்தவரு பண்ணவனு மெதிர்விதுரன்
பவனத் திருந்துமறுநாட்
பயில்குரு குலச்சபையி லவர்மொழி சாற்றலும்
பதகனொரு வரையுமதியான்
நீரதுணர் விதுரனைக் கழறுதலு மற்றவன்
நிகரிலா வில்லிறுத்தான்
நிமலன் றனித்தவ னெனச்சூழ்ந்த வோர்விரகி
னெட்டுலக நடுநடுங்கும்
காரது நிறத்தினன் கன்னன்மன நெகிழ்தரக்
கண்டிந்த்ரன் குந்தியிவரைக்
கடிதேவி யுறுவரங் கொளவலித் தசுவனைக்
காண்வரப் பிரிவுசெய்தான்
சாரதா லக்ஷ்மியிவர் சார்தரும் பாங்கினள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பாரதம் - பாரதப்போர். பண்ணவன் - தேவன். பவனம் - வீடு. பதகன் - பாவி. நீரது - (பகுதிப்பொருள்விகுதி) செய்யுந் தன்மை. வில்லிறுத்தான் - அருச்சுனன் வில்லுக்குநிகராம் வில்லை முறித்தான். விரகு - நிலவறைமேற்சமைத்த பொய்யாசனத்தமர்த்துதல். கடிதேவல் - கவசகுண்டலம், நாகபாணத்தை மறித்தெய்யாமை இவற்றைப் பெற விரைவினேவல். வலித்தல் - வற்புறுத்தல், இன்றேல் நம்மகார் பிழையாரென்றல். பிரிவுசெய்தல் - குனிந்து மோதிரத்தை எடுப்பித்து மேலே நாழிகை பார்ப்பித்தது. துர்யோதனுதியர் அசுவத்தாமனைச் சூளுற்றுனென நம்பாராயினரென்பது.

கண்ணன்செயல் பாண்டவர் திருவிற்கேதுவென்பது மகுடக் கருத்து.

தருமர் படைத்துணை கோடல்.

[பெரியார்த்துணைக்கோடல், அன்புடையாரை எவருமணுகுதல்.]

ரு௦. விம்முமுர சோவாத் துவாரகையி னண்ணலை
மேவித் தனித்துணைபெறாஉ
மிடலைவர் வேந்தர்க ளெவர்க்குநன் னீதியின்
விளைசமர்த் துணைசொற்றிட
மெய்ம்மையொடு நீதிவிறல் வேந்தரே ழக்ரோணி
வியன்படைகள் சேரவந்தார்
விராடனவன் மைந்தர்கள் வேற்றுருபன் மகனோடு
விளைதவச் சிகண்டிமற்றும்
செம்மைமுத் தமிழ்வேந்தர் சீனரொடு சாவகர்
தெலுங்கர் கன்னடர்மாளவர்
திரௌபதர் கடோற்கச னராவானு முற்றனர்
சிவேதனற் றலைமைபூண்டான்
தம்முயர்வு நாடியே தலைபணி பவர்க்காக்குந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஓவா - நீங்காத. அக்ரோணி - சேனைகளின் ஓரளவு, பின்னர் அனுபந்தத்திற் காண்க. சல்லியன் தருமருக்காகத் துணைக்கு வந்தவன், இரட்டையர் மாதுலன், துர்யோதனன் சூதாகத் தனக்காக்கினான். எனினும் பாண்டவர்பாற் பக்ஷபாத முடையவன். விராடன் மைந்தர் முதலியோரை அனுபந்தத்திற்காண்க. அராவான் - அருச்சுனன் புதல்வன். சிவேதன் - விராடன் மகன், க்ருஷ்ணன் பக்கலிருப்பவன்.

பணிதல் உயர்தற்கேதுவென்பதும் பணிவார்க்கு வேண்டிய தருளல் இறைவிகுணமென்பதும் மகுடக் கருத்து.

பாண்டவர் அணிவகுப்பு.

[கற்ளுேர் கடமை, பிறர் உபாயத்தைவேறல்,
அதிரதர் முதலியோர்.]

ருக. சிகைபெற்ற ஞானிசக தேவனின் ளுட்கொண்டு
சேருமர வானைப்பலிதேர்
செய்கையனை விரகினந் நாண்மாற்றி யத்திறச்
செய்கையிற் ளுன்முந்துறாஉம்
வகைபெற்ற கண்ணனு மணிவகுத் தான்றிறல்கொ
ளதிரதர் சிவேதன்வீமன்
வருவிஜய னபிமனு மகாரதர் சிகண்டிதரு
மன்த்ருஷ்டன் சாத்தகியொடு
நகைபெற்ற முடிவிரா டன்சம ரதர்துருபன்
நாடுதா மன்னுத்தம
நவில்பானு வர்த்தரத ரிருவீரர் கடகசனு
நயமிகுந் துறுகவென்ளுன்
தகைபெற்ற நீதியிற் ளுரணித் தேரின்வரு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சிகை - முடி, முதன்மை, அதர்வசிகைமுதலிய மறைமுடிவுமாம். நாள் - பாண்டவரை வெல்லத் துர்யோதனன் ஸஹதேவனைக் கேட்டநாள். அவனும் ஞானியாதலின் சாத்திரம் மறையாதுரைத்தானென்பது. துரோணர் த்ருஷ்டத்யும்நனுக்கு உபதேசித்தது மறிக. நாள் கூறினும் காலநியதிகளையும் நடத்துவோனுகிய கண்ணன் அன்பால் மாற்றினுன் என்பது. கடகசன் - குடம்போன்ற மயிர்க் கற்றையன். கட+உத்+கசன்=கடோற்கசன் இதுவுமப்பொருட்டு.

தாரணித்தேர் - திரிபுரசம்ஹாரகாலத்துச் சிவனூர்ந்த பூமித்தேர். பூமியில் அநீதி தோன்றுங் காலத்து வெளிப்படுவோனென்பதையும் உணர்த்துவது மகுடம்.

ஆறுவது

பீஷ்மபருவம்.

பீஷ்மர் அணிவகுப்பு.

[குருசேனையோர் அதிரதர் முதலியோரை வகுத்தமை.]

ருஉ. மங்குத லிலாதுவளர் வாகைபுய வீட்டுமன்
மன்னுகுரு சேனைபதியாய்
வன்மைமிகு த்ரோணனொடு மாமகன் பூரிச்ர
வாவுமதி ரதர்களெனவும்
பொங்கொளி மகாரதர்கள் பகதத்த துன்மர்ஷர்
போதுசம ரதர்கிருபனும்
புகலவரு சல்லியன் க்ருதபன்மன் சகுனியொடு
புன்மைகொள் ஜயத்திரதனும்
கொங்குவளர் காவெனுங் கொடையனவ னூற்றுவர்
கூறுதே ரர்த்தரெனவும்
கூறியணி பெறவகுத் துக்களங் குறுகினன்
குறுகினன் கன்னனுளமே
தங்குயிர்ப் பன்மையுந் தன்னுணை செல்விக்குந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மகன் - அசுவத்தாமன். புன்மை - திரௌபதியிடத்துச்செய்த அபசாரத்தால் வீமன்வதைக்கத் தருமனுலுய்ந்தும் மீளப் பொர வருதல்.

கன்னன் உளங்குறுகுதல் - தன்னை அதிரதனிற் சேர்க்காமையின் மனங்குன்றுதல், வீட்டுமன் முடியுமளவும் பொராது நிற்றல்.

கன்னன் தனித்துநின்றதும் ஒருநன்மையாக ஆயிற்றென்பது மகுடக் கருத்து. கன்னன் முன்னணியேறின் இன்னுங்கொஞ்சங் கடும்போர் நிகழும். கன்னன் பரசுராமரிடத்துக் கற்றவன், பீஷ்மர்க்கு நிகர் எனினும் விதியால் வலியடங்கினன். கற்றதுங் காலத்திற் கைகொடாமை பின்னர்க் கன்னயுத்தத்திற் காண்க.

அர்ஜுனன் போர்செய மறுத்தல்.

[கிளைஞர் கேண்மை, தர்மஸ்தாபனம், தன்மதிப்பு.]

ருரு. ஆன்றமை துரோணனும் வீட்டுமன் முதற்கிளைஞர்
அனைவரு மமர்க்களமுறல்
அரியவன் றேரூர வணியொடுறு மர்ச்சுனன்
அடைவினிற் கண்டவுடனே
நோன்றமையு மதிவலான் வில்லொடு மனஞ்சோர
நுவலுவன் கண்ணனோடும்
நுண்குல வறத்தோடு மன்னர்குல நூறியே
நுதலுமென் விஜயமென்னே
ஊன்றுமதி யறன்மகனை யும்மனங் கோட்டினேன்
உற்றகுர வரையுமதியேன்
ஒன்றுமன முற்றன னன்றினி யுறும்போரில்
உறுபடை யெடேன்மெயென்றான்
சான்றவர் தீவினைபி னஞ்சுபொழு துன்மகிழ்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஆன்று - கல்வி கேள்விகளால் நிறைந்து. அரியவன் - (ஒரு சொன்னீர்மை) க்ருஷ்ணன். அருமையானவன் என்பதுதொனி. அணி - அழகு, சேனை. நூறல் - அழித்தல். குலத்தை அழித்தால் பற்றுக்கோடின்மையின், குலவறமுந்தானே யழியுமென்பது.

ஒன்று - பகைவரை வெல்வேனென்னு முறுதி. நன்று - என் எண்ணம் நன்றாயிருந்தது, இகழ்ச்சிக்குறிப்பு. தீவினையச்சமும் புண்ணியஞ் செய்தலோடொக்குமென்பது. அஞ்சாமையும் தாஞ் செய்வது நன்றெனச் சாதித்தலும் அருட்புறத்தார் செய்கை என்பதும் குறிப்பு. “பூதங்களைந்து மகத்தேநகும்” குறள்.

கண்ணன் க்ஷத்ரிய தர்மங் கூறல்.

[தத்வோபதேசம், நீதி, அநீதியோர் கெடுதல், அறக்கடவுள்.]

௫௪. பேரன்பி னுடன்வந்த பெருமானு மறைகுவன்
பேதைமை நரனீங்கவே
பெருங்குல வறந்தவாப் பெருநீர்மை கொண்டனை
பேசுநின் குலதர்மமென்
ஏரன்பி னுவுக் கிளங்கோவை மாய்த்தநல்
லியன்மனுவு மொருவனுமுளன்
எழின்மக ளொருத்தியைப் பேரவையி னிறுவியே
என்செய்த விவர்களையெலாம்
பேரன் பெரும்பாட்ட னென்றனை நீதியும்
பிறங்குநுண் கலையும்வலையால்
பேசுறும் பாசுபத மும்மழகு காணவோ
பெற்றனை வீரவென்றான்
சாரன்பி லாரைவெயில் புல்லுயி ரெனக்காயுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

நரன் - அர்ச்சுனன். நரநாராயணரில் ஒருவனென்பது. நின் குலதர்மமென் என்றது பிறர் பொருளை அபகரித்தவரும் அவர்க் குதவி செய்தவரும் நீதி கோடியவரும் தண்டிக்கப்படவேண்டும் என்னும் நின்குலதர்மத்தை நீயும் புரிக என்பது. குலதர்மத்தைக் காப்பது குலத்தையழியாமையன்று:நீதியை அநுட்டித்தலே என்று னென்பது.

என்செய்த என்றது சொல்லத்தகாத இழிசெயல் என்ற குறிப்பு. வலை - வல்லனையினுய், இகழ்ச்சிக் குறிப்பு. வீர - இது வுமது.

“என்பிலதனை வெயில்போலக் காயுமே” என்ற குறட் கருத்து மகுடம்.

கண்ணன் தத்வோபதேசம்.

[ஸர்வாந்தர்யாமித்வம், புண்யபாவமும் இன்பத்துன்பமும்.]

௫௫. அகலனிக மன்னவரி லன்புறவு பகைநொதுமல்
அளிமனங் கொண்டபார்த்த
அருவினையி னுமுட லணைந்துபல பேதங்கொ
ளனைத்துயிரு மென்றனுறையுள்
இகலனிக வைவர்பொறி கூடுமன மாயைமகன்
ஏவலிற் புண்யபாவத்
திருதுறை யியங்கிவரு மின்பமொடு துன்பமு
மியைந்துயிர்க ளுகருமென்ப
பகலநிகர் நீதியிற் பன்னுமுறை வழுவாது
பயனெடும் பலமுமோராய்
பயிலுமென தியானெனும் பற்றற்று நின்வினை
பாணியா தாறுகவென்றான்
சகலநிக மாகமஞ் சார்ந்தொழுக வைத்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அனிகம் - சேனை. நொதுமல் - அயலோர். பார்த்தன்-பிருதை (குந்தி)யின் புதல்வன், அருச்சுனன். கர்மப்பயனாகிய இன்பத்துன் பங்களை நுகர உயிர்கள் பிறக்கு மென்பது. பகல் - நுகத்தின் நடுத் துவாரம், நடுநிலைக்குவமை. பயன் - வினைவுதனதெனல். அவரவ ரும் நிமித்தமேயன்றிக் கருமப்பயனை விடுக என்பது.

நீதியாகிய அவரவர் கடமையைச் செய்து ஈசுவரார்ப்பணமாக் குதல் ஈண்டுக் கூறியது.

கற்றது ஒழுகுவதற்கென்பது மகுடக் கருத்து.

கண்ணன் விசுவரூபங் காட்டுதல்.

[ஈசன்செயல், சித்தசுத்தி, இறைவனருள்வழிநிற்றல்.]

௫௬. பொன்வண்ண மேனியிப் புவனமெல் லாமூடப்
பொற்புடைச் சிரங்கரமிவை
போதண்ட மெங்கணும் புகழ்பெறத் தோன்றுதல்
போதநிகழ் விழியினுணர்வான்
மின்வண்ண வுடலினிற் பலவுலகு மாந்தரும்
வீற்றுவீற் றமைதல்கண்டான்
மிளிர்வதன தந்தநிரை யிடையிடைக் குருசேனை
வியலுறப் புகுதல்கண்டான்
மன்வண்ண மாறியரி மலரடியில் வீழ்ந்தெழூஉ
மகிழ்ந்துறும் பணிவினவினான்
மாலுமுன் வடிவெய்தி நந்திறலின் மாய்ந்தனரை
மாய்க்கநீ நிமித்தமென்றான்
தன்வண்ண மொன்றினிற் றண்டுழா யவனோடு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

போதம் - ஞானம். வீற்றுவீற்று - தனித்தனி. பணி - ஏவல். மாய்ந்தனரை மாய்க்க நீ நிமித்தமென்றான் - உள்ளுறைவா னுதலின் சிந்தைமுதலிய கரணங்கள் தன்னுலியங்கலின் அவ்வியக்கத்தை மாற்ற இறந்தார்போற் செயலறுதலின் மாய்ந்தனரை எனப்பட்டது. நீ மாட்டேனெனினும் இது செய்ய யாரும் முற்படுவரென்பதும் குறிப்பு.

ஒருவண்ணத்தில் இருவருமுறைதல் - ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர் வடிவத்திலென்பது.

கண்ணன் அர்ச்சுனனைப் பணித்தல்.

[தைவிகச்செயல், கண்டுந்தெளியாமை, அகந்தைப்பயன்.]

௯எ. வானேய் மகத்திறை மகிழ்ந்தபலி மாற்றியும்
வளர்கிரி கரத்தேந்தியும்
வாளரவி னுடியும் வான்பகையை முற்றியும்
மாமன்மைத் துனர்ப்போக்கியும்
கானேய் மலர்த்தொடை ஜரைமகனை வீட்டியும்
கலந்தைவர்க் காவனசெயூக்
கண்ணென வனைத்துயிர்க் குயிராகி யுடனுறைந்
தகன்றிடுங் கள்வனுய
நானே தனித்தூது சென்றிடவு நல்கிடான்
நண்ணுநில வறைசமைத்து
நம்முலக ரூபமும் விறல்கண்டு நண்ணுவார்
நண்ணுகென் ருனம்பனே
தானேய்ந்த பேமெறணுத் தக்கனைச் செற்றிடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மகத்திறை - இந்திரன். பலி - போகிபண்டிகை. அரவு-காளிங்கன். ஜரைமகன் - ஜராசந்தன். வீட்டல் - அழித்தல். கள்வன் - இன்னதன்மையனென உயிர்களாலறியப்படாதவன். உலகரூபம் - விசுவரூபம். கண்டும் நண்ணுவார் - இகழ்ச்சிக்குறிப்பு.

சோற்றுக் கடன் தீர்க்கவும் போர்முனையிற்பட்டு மேற்சேறவும் வந்தாரென்பதுமாம்.

அந்தியுடைமையிற் றக்கனுந் தந்தையையு மழிப்பித்தாள் என்பதும் தான் பலரை அழித்ததும் உவமைக்கு வந்தன.

கண்ணன் பீஷ்ம துரோணரைக்காணல்.

[ஞானத்தின்பயன், சுகதுக்கத்தின் உண்மையுணர்தல்.]

ருஅ. மிக்கோர் தொழுங்கண்ணன் விஜயற் குணர்த்தியே
வீட்டும துரோணரையுறீஇ
மீளா வரத்தோடு மிளிர்மறையி னேடுமுறு
வீர்நுங்க ளருள்பெறுமல்
தொக்கோர் சுகம்பெறல் பாண்டவர்க் கேதெனத்
தூயனுஞ் சொலமற்றையோர்
துக்கமொடு சுகமுமொன் றுநினைத் திவ்வுடற்
சுமைதீர நின்றநெறியான்
மிக்கோர் செயும்போரில் மேவுஞ் சிகண்டியெதிர்
வீட்டுமன் வீழ்தல்சொற்றான்
மெய்த்திறன் மகன்படு பொருட்பிசி யறன்மகன்
விளம்பன்மறை யோனுநேர்ந்தான்
தக்கோர்கள் காலவரை சாரத் தெருட்டுறாஉந்
தண்ணருட் சிவசாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மீளாவரம் - பரிமளகந்தியை மணநேர்வித்தமையால் உவந்த தந்தையாகிய சந்தனு நீ நினைப்பினல்லது நின்னுயிர்மேற் கூற்று நாடான், என்று வீட்டுமனுக்குத் தந்த வரம். நீதியொடு பொருந்தும் வாய்ச்சொற் பலிக்குமென்பது. யயாதி தேவயானி மக்களைச் சபித்ததுங் காண்க.

உடற்சுமை - உடலைவெறுத்துத் தானேவிடாது விழுங்காலம் வரைச் சுமையாகவெண்ணுதல். மகன் - அசுவத்தாமன். வீரனாகிய மகன் முதலியோரிருக்க மேலிருப்பவர் முன்பொராமையுங் குறிப்பு. பிசி - அச்வத்தாமா ஹத: என்னும் பொய்.

முதனுட் போர்.

[கார்யகாலத்தில் விதியின்மதிமாறுதல், வஞ்சகர் சூழ்ச்சி.]

ருகூ. கூருமிரு சேனையுங் குறித்தமர் தொடங்கலும்
கொற்றமிகு தேரதிபருங்
கூடியொரு வர்க்கொருவர் கோதிலா மோதுபோர்
கொண்டுவிறல் கூறியிகலப்
பாருமிரு பாகுபடு மென்றுய தவ்வயிற்
படைவல்ல சல்லியன்றன்
பயிலுமயி லுத்தரற் கொன்றது சிவேதனும்
பானுவாற் குருசேனையா
யாருமிரு ளறுதல்கண் டவனெடெதிர் வீட்டுமனு
மணிமுதுகு தந்தும்விரகால்
அரன்றந்த வில்லவனை வாட்போரில் வருகவென்
றவன்கர நெகிழ்த்துவீழ்த்தான்
கூருமொரு முகிசுத்த வட்டமேன் மெய்யின்வளர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கொற்றம் - வெற்றி. விரகு - உபாயம். முதுகுதருதல் - புறங்காட்டி ஓடுதல். வில்லவன் - வில்லையுடையவன், சிவேதன், பாகவத யுத்தத்திற் பிரசித்தன். கர்வநிக்ரஹத்தின் பொருட்டுக் கண்ணனும் புறக்கணித்தான் போலும்.

ஆருதாரங்களில் விசுத்தத்திலும் ஸப்த தாதுக்களில் தோலிலும் வியாபித்தவள், ஒருமுகமுடையவள் ஈசுவரி என்பது மகுடக் கருத்து. அம்பிகைக்கு ஆருதாரங்களிலும் ஸப்த தாதுக்களிலும் வியாபகமும் ஒன்றுமுதலாறுமுகங்களும் ஸர்வதோமுகமுமுடைமை பின்வரும் ஆறுசெய்யுண் மகுடங்களினு மறிக.

இரண்டாநாட் போர்.

[யானென்றலின்பயன், அரசிளங் குமரனுண்மை.]

கூ0. வெகுமுரண் படைவென்ற வில்லன்விதி யிற்படலும்
விளைகோப மிகுமைவரும்
வேற்றுருப தன்சேய் விறற்சேனை யிறையாக
வெம்போர்க் களங்குறுகினர்
மிகமுனைந் திருபடைத் தலைவரு முடற்றினர்
விற்குருவு நீடமர்செய்தான்
வீமன் றனோடுபொர வருகலிங் காதியர்
வெந்நிடப் பொருதழித்தான்
அகமுளைந் தடர்சேனை யலறிடப் பொருதபிமன்
அன்றிவரு வீடுமனையும்
அரன்கொலென நாடும்வகை யப்புமழை வீசியே
ஆதித்த னோடுமோட்டினன்
தகுமுட விரத்தமுறை யநாகதத் திருவதனி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

துருபதன் மகன் - த்ருஷ்டத்யும்நன். உடற்றுதல் - போர்செய்தல். விற்குரு - துரோணர். வெந்நிடல் - முதுகிடல். உளைதல் - வருந்துதல். அன்றி - கோபித்து. அப்புமழை - பாணமழை. ஆதித்தனோடுமோட்டினன் - அஸ்தமிக்கும்வரைபொருது சூரியனுமறைய பீஷ்மனையும் ஓடச்செய்தானென்பது. அபிமன்யுவின் விறல் கூறியவாறு. பாண்டவர் வனம்புகும்போது வந்து போர்வேண்டிய அரசரைக் கண்ணன் கழறியது இவன் வளர்ச்சி கருதியே என்பதுங் காண்க.

ஆறுதாரங்கள்:—ஆறுதாரஞ்சுத்தா னுகமணி பூரமொடு
கூறுசுவா திட்டமூலா ணே.

௫க முதல் கூ பாட்டுக்களினுங்காண்க. ஒருமுகமுதலிய இயைபுபற்றி முறைமாறிற்று.

மூன்று நாட் போர்.

[சஞ்சீவியௌடதம், வீரர்கள் அதிசயத்தால் தன்னையுமறத்தல்.]

சூக. மெத்துவிற லபிமற்கு வெருளுமெதிர் வேந்தர்கள்
வெகுண்டுமெறு நாட்கண்ணனை
விஜயனை வளைத்தனர்கள் வீமனுஞ் சேயுமெதிர்
வேந்தனொடு வருசேனைகள்
தத்திவிழ நற்போர் புரிந்தனர் வலம்புரித்
தாரவனை வீட்டுமனுயிர்
தங்கவொர் மருந்தூட்டி மோதியெதிர் சேனையைத்
தாக்கினன் விஜயன்வாளா
சித்திரம் போனிற்றல் கண்டதிரு மால்குதித்
திகலாழி கைக்கொளவெரீஇச்
சிந்தைநிலை கொண்டனன் றுடொழுது வீட்டுமன்
சீர்விஜயன் பேர்நிறுவினன்
சத்திமணி பூரகத் தசையினொளிர் மும்மைமுகி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்தபமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மகனுக்கு வெருளும் வேந்தர்கள் தந்தையை வளைத்தனர், இகழ்ச்சிக்குறிப்பு. வலம்புரித்தாரோன் - நந்தியாவர்த்தமாலையன் துரியோதனன். மருந்து - சஞ்சீவிகரணி. விஜயன் பீஷ்மயுத்த விசித்திரக் காட்சியாற் றன்னைமறந்தானென்பது. சிந்தைநிலை - கண்ணனே டொப்பியது கடந்தமையைத் தெளிதல். விஜயன் பேர் நிறுவுதல். பொருது விஜயம் பெறுதல்.

எழ்தாதுக்கள்:—தோலிரத்த முன்மேதை சூழென்புமச்சையே
சால்சுக் கிலத்துடனேழ் தாது.

ருக முதலிய எ பாட்டுக்களிலும் முறையே காண்க.

நான்காநாட் போர்.

[வீரர் சங்கத்தொனி, சுகத்தினின்ரோர் துன்பத்தினழிதல்.]

கூஉ. அதிர்முழக் கொடுவளைக ளாயிரஞ் சூழ்ந்துவரு
மணிகண்மறு நாட்கோவியே
அரும்போர் தொடங்கலும் வீமனெனும் வடவையால்
அழிந்தவெதிர் சேனைவெள்ளம்
கதிர்முகத் துற்றமின் மினியாச் சுயோதனன்
கன்றவவ னிளவலைவர்
கருதியம னூர்புகக் கடோற்கசன் வேழமூர்
கடுந்திறற் பகதத்தனை
எதிர்முகத் தீடறப் பொருதுவரு சேனையொடு
மிரியத் துரந்தனனரோ
இன்பநிறை காந்தாரி யின்சிறுர் சிலர்மாய
இன்னலிற் பதமும்வைத்தாள்
சதுர்முகத் தவள்சுவா திட்டான மேதையுறை
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

வளைகள் - சங்குகள். வடவை - வடவாமுகாக்கினி, ஊழித்தீ. கதிர் - சூரியன். இளவலைவர் - நூற்றுவரிலிளையோர் ஐவர். ஈடு - வன்மை. இரிதல் - ஓடல். இன்னலிற்பதமும் வைத்தாள்-இதுவரை துன்பமென்பது தெரியாத காந்தாரி ஐந்துமக்களிறத்தலால் துன்பத்திற் காலிட்டாள் (இறங்கினுள்) என்பது. தருமர் நூற்றுவர் மனைவியர்க்குள் அதுமொழி கூறிவிட்டது முதனூலிற் காணப் படும்.

காந்தாரி முதலிய பெண்களும் பாசறையில் வந்திருந்தார்கள் கஎ-ஆம் நாள் கன்னன் இறந்தபின் சஞ்சயன் திருப்பிக்கொண்டு சென்றுன் என்று முதனூலிற் கூறப்பட்டது.

ஐந்தாநாட் போர்.

[இடக்கையாலும் வில்லெய்தல், அசுரரையும் மனிதர்வேறல்.]

௬௩. சதயமீ னிறைமகன் சவ்யசா சிப்பெயரன்
றன்னொடைந் தாநாளினிற்
றனிச்சம ருழந்தனன் ரார்வேந்தர் பிறரொடுந்
தண்டுகொடு வீமனுற்றான்
இதயம் பிளந்தன ரிரிந்தோடல் கண்டரவ
மியல்கேது துணைவருடனே
எதிர்பொருது நிறமூழ்க வொருவேல் விடுத்தவ
னியக்குமொரு வேலினொந்தான்
திதியின் பினோர்ச்செற்ற திறல்வீமன் பூரிசிர
வணனொடும் வில்லுமல்லும்
செறிந்துடலு மற்றைநா ளிருசேனை மன்னரிற்
சென்றதிரு பானுயிரம்
தகையென்பி னுறுவளோம் முகிமூலட் டானமுறை
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சதயமீனிறைமகன்-மைத்ராவருணனதவதாரமான வீட்டுமன். தண்டு - கதை, சேனையுமாம். நிறம் - மார்பு. திதியின்பினோர் - தைத்யர், பகாசுரன் முதலியோர். இருபான் - இருபது. பூரிசிரவணன் - மிக்ககேள்வியன். உடலுதல் - பொருதல். தகையென்பு - நெருங்கிய எலும்புகள். மூலாதாரஸ்தானம் - கீழும் மேலும் உள்ள எலும்புகள் பிணைந்த இடம் என்பது. பிளந்தனர் - எச்சமுற்று. தார்வேந்தர் - தும்பைமுதலிய மாலையையணிந்த அல்லது சேனையையுடைய அரசர். ஸவ்யசாசி - அர்ச்சுனன்.

ஆறுநாட் போர்.

[மகரவியூகம், கரிஞ்சவியூகம், ஆறுதாரம், ஸப்ததாதுக்கள்.]

கூச. கூருமக ரத்தினணி பாண்டவர் வகுத்திடக்
கூறுங் கரிஞ்சவடிவாய்க்
கூடலுங் குருசேனை மற்றைநாள் வீமனுங்
குனிவிலா சானும்வன்பாற்
சேருமாங் காரமொடு செய்தவெம் போரினிற்
றேர்ப்பரியும் பாகும்வீழச்
சிலைக்குருவு மிரிதரச் சல்லியன் மல்லமர்
சினத்தொடு குயிற்றியெற்றுண்
டோருமுர னற்றன னுரகவெங் கொடியனும்
ஒருவீம னாற்றளர்ந்தான்
உற்றபக தத்தனுஞ் சௌபலனு மபிமனு
லுறைவிடஞ் சென்றுநின்றார்
சாருமாஞ் ஞாசக்ரி சண்முகியொர் மஜ்ஜைவளர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மகரஅணி - மீன்வடிவினதாக அமைக்கப்படும் ஓரணி வகுப்பு. கரிஞ்சம் - கிரவுஞ்சம். இவ்வணிகளின் உறுப்புக்களும் அவற்றி னிற்போர்களும் முதலியவற்றை முதனூலிற் காண்க.

குருசேனைகூடலுமென இயையும். குனிவில் - வணக்கப்பட்ட வில். ஆசான் - துரோணன். பரி - குதிரை. பாகு - பாகன். வேந் தன் - வேந்தென்பதுபோல. இரிதரல் - ஓடுதல். குயிற்றி - செய்து. எற்றுண்டு - மேலேவீசி எறியப்பட்டு. சௌபலன் - சகுனி.

அபிமன்யுவின் வீர்யத்தினாலும் விஜயத்தினாலும் எதிர்நிற்ற லாற்றாது பகைவர்கள் பயந்தோடினரென்பது.

ஏழாநாட் போர்.

[சர்ப்பவியூகம், ரதவியூகம், பாரதயுத்தத்திற் பாண்டியருதவி.]

௯௫. கதவிதழ் திறந்திடக் கமலபதி யெழுதலுங்
கமலைநா தற்பணிமகார்
காண்பணிப் படைவகுத் தடைதரலும் வீட்டுமன்
கவினணித் தேர்வகுத்தான்
பதவிதப் பகடூர்ந்த பார்த்திவர் கடோற்கசன்
படையினுக் கழியவிற்கோப்
பஞ்சவனை யெதிர்தரப் பவனகும ரன்சல்ய
படையிரிந் தோடவட்டான்
விதவிதப் போர்முனையும் விஜயனொடு வீட்டுமன்
விளைத்தவெழு நாட்போர்குகன்
மேகவுரு வண்ணலிவர் மேவுசம ரொக்குமால்
வெட்டவெளி யானதளமே
சதவிதழ்க் கமலமேற் சர்வதோ முகமெழுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கமலை - இலக்குமி. பணி - பாம்புவியூகம். பதவிதப்பகடு-நடைவிதங்களையுடைய யானை. படை - பாணங்கள், சேனையுமாம். விற்கோ - துரோணன். பஞ்சவன் - பாண்டியன். பவனன் - காற்று. குகன் மேகவுருவண்ணல் இவர்மேவுசமர் - ஸ்காந்த ராமாயண யுத்தங்கள். தளம் - சைந்யம்.

சதவிதழ்க்கமலம் - ஹ்ருதயம் ஸஹஸ்ரகமலமுமென்பர். சுக்லம் ஔரஸம் எனப்படுதலின் ஏழாவது தாதுவும் உறைவிடமாகக் கூறப்பட்டதுங் காண்க. எழும் - ஏழெனுமெண்ணையும் குறிக்கும். இவை அம்பிகையின் விசேடநூல்களிற் காணப்படுவன,

எட்டாநாட் போர்.

[மனுநீதி, வினை செய்தவனைத் தொடர்தல், அஷ்டமூர்த்தம்.]

௯௯. உரைமுதல் கடந்தவ னுசாத்துணைகொ ளைவரும்
ஒருபிதா மகன்சேனையும்
உற்றவெண் ணாட்போ ருருத்தெழலு மன்னவன்
உயிர்த்துணைவ ரோடுசென்றே
வரைமுதல் பறித்தவன் மகனொடு செயிர்த்தெண்மர்
மாய்தலு நதிசுதன்பால்
வந்தயர மற்றவன் மனுநீதியும் பின்வரு
மாற்றரு விதியுஞ்சொனான்
நரைமுதிர் கடற்சேனை நாகனொடு நிருதனு
நண்ணமந் தரமுற்றென
நலமழிந் தலமரலு நாடுமெழு வர்ச்செற்று
நாட்டினன் சீர்வீமனே
தரைமுதற் பூதமுஞ் சவித்ருமதி யுயிருமாந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பிதாமகன் - பீஷ்மன். உருத்து - கோபித்து. மன்னவன் - துர்யோதனன். துணைவர் - தம்பியர், ஏனைத்துணையோருமாம்.

வரைமுதல் பறித்தவன் - சேடனொடுவெகுண்டு மேருவின் கொடுமுடிகளை வேரொடு குலைத்தவன். மகன் - வீமன்.

நதிசுதன் - கங்கையின் புதல்வன், பீஷ்மன். சேனைக்கடல் அராவான் கடோற்கசன் என்னும் வாசுகி மந்தரங்களால் கலக்குண்டதென்பது. நரை - கடலுக்கும் சேனைக்குஞ் சிலேடை "நரைமுதிர்திரைகவுள்" என்பது நோக்குக. பயனின்மூப்பு இகழ்ச்சி குறித்தது.

ஒன்பதா நாட் போர்.

[இளைஞரின் பேதமை, மூதறிவு, குறிப்பினிகழ்தல்.]

கூஎ. தொக்குவரு தன்சேனை தோற்றலுங் கன்னனொடு
துர்யோ தனன்மாழ்குறக்
சூழ்தலைமை யின்வேறல் மற்றவன் சொற்றிடல்
சூழிளைஞன் மூதாதைபாற்
புக்குமதி யோடுபுக லப்புகல்வன் புகரிலான்
பொருபோரில் விஜயனையினிப்
புகழுற்று வேறலரி திருநாளும் யான்பொருவன்
புவியாள வைப்பன்கன்னன்
மிக்கமதி யீர்பொறுமி னிருநாளு மென்றுபுகு
வேட்களத் தொருவீமனால்
வெம்பகா சுரனனுஜன் வீழ்ந்தனன் வீட்டுமன்
விராடானு ஜனைவீழ்த்தினன்
தக்கமதி சூடியோர் சாற்றுநவ பேதமாந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மாழ்குதல் - மயங்குதல். தலைமையின்வேறல் - தான்சேனாபதியாயின் உடனே வெல்வேனென்பது. இளைஞன் - துச்சாதனன். புவியாளவைப்பன் - இகழ்ச்சிக்குறிப்பு. ஒருவரிறவாமற்காப்பேனென்றான் நூற்றுவரிற்பாதியாயிற்று - இன்னும் புவியாளவைப்பன் எல்லாரையும் பூமியிற் புதைப்பானென்று இகழ்ச்சி.

மதியீர் - கேட்டின்கண்மதி தோன்றுதென்று இகழ்ச்சி. பகன் அனுசன் - பகாசுரன் தம்பி அலம்பசன். விராடானுசன் - சதாநீகன்.

நவபேதம் - நவசத்தி. "நவந்தருபேதமாகி" நின்ற நாதற்கேற்ற நவபேத சக்தியுமாம்.

பத்தாநாட் போர்.

[தீயசகுனம், செய்யுங்கடமை, நாடிசுத்திசெய்தல்.]

கூஅ. வசைநாடி வருநாக வன்கொடியன் சேனையும்
வருவிஜய னொருசேனையும்
வளர்தசமி நாட்போர் தொடங்கலும் கண்ணனை
வணங்கிவரு கதைவில்வலோர்
இசைநாடு காற்றெரிபுக்கெனக் குருசேனை
யிரிதர வுடற்றுபொழுதில்
இன்னலுறு சகுனமுங் குறியாது வீட்டுமனு
மெதிர்பொருது சின்னபின்னத்
தசைநாடி குடருகத் தாக்கினன் சேனையைத்
தருகால மெனவிஜயனும்
தளர்வுறு சிகண்டியை யெதிர்நிறீஇத் தன்சரந்
தகவொடட னூன்றிவீழ்த்தான்
தசநாடி யுஞ்சுத்தி பெறுயோகி யுள்ளமிளிர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

தசமி - பத்தாநாள். அமாவாசையன்று களப்பலிகொடுத்துத் தொடங்கியதாதலிற் றிதியுமதுவாமென்பது.

வசைநாடல் - ஆணவத்தாலழிந்தான் துர்யோதனன் என்பது. கதைவில்வலோர் - வீமார்ச்சுனர். இன்னலுறுசகுனம் - தீயசகுனம். செல்லுமிடந்தோறும் தீய நாற்றமும் காகம் பருந்து முதலியவை மேற்றூக்கலும் முதலியன.

சிகண்டியைக் கண்டவளவில் பெண்ணெனப்பொரக் கருதாதும் அம்பையின் தவமினைந்தும் விதிவலிக்கடங்கி யோகத்தின் மனமுற்றானென்பது.

பீஷ்மன் சரதல்யம்.

[ஜிதேந்திரியம், விரதங்கெடாமை, யோகத்தினுயிர் நிறுவுதல்.]

கூகூ. மின்கடமை வென்றவிழி யார்விழியு மன்மதன்
வெல்பகழி யுந்தோற்றிடும்
மிகுவீர னுலகங்கள் வெருவுற்ற விரதங்கொள்
வீட்டுமப் பேர்முனிவனும்
நன்கடன்மெ யுற்றசர மொன்றெடுத் தம்பைவிட
நண்ணுசர மோவிதென்பான்
நாட்டுபொறி க்ரீடியெனு நாமமுற மகிழுவான்
நவில்சர வணப்பாயலிற்
செங்கடம் புற்றணியுந் திருமகனின் யோகினுற்
செல்லுமுயிர் நிறுவிமிளிர்வான்
தேவர்மலர் பொழிதலும் விஜயனை யிறங்குதலை
செம்மையி னுயர்த்துகென்றான்
தன்கடமை யோவலன் றன்னுணை செல்விக்குந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

வெல்பகழி - மூவுலகையும் வெல்லும் பஞ்சபாணங்கள். வீரன்- இன்னுமொருதரம் கங்கைவயிற்றிற் பிறந்தால் மணப்பேனென் றது.

சரவணப் பாயல் - சிலேடை, சரம்-பாணம், நாணல். மிளிர்தல்- தெய்வீகமாய் விளங்குதல். இறங்குதலை உயர்த்துக - தலையையும் ஒருபாணத்தாலுயர்த்துக. நீ என் தலையிறங்கி நிற்கின்றாய் நிமிர்க. விதிக்கு நீ என்செய்வாய் என்பதுமாம்.

அரசர் யுத்தகளத்திலிறவாமல் வீட்டிலிறந்தால் தலையில் எழு செங்கற் சுமத்தல் முதலியன கூறலின் பொருதல் கடமை என்பது.

திருதராட்டிரன் சோகம்.

[துரியமூர்த்தி, மாயைச்சிறப்பு, துன்பகாலத்திலும் உயர்ந்தோர் மனநிலை.]

எ0. உற்றுமறி யாமனத் துரகப் பதாகையனும்
உறுசேனை மகிபரெவரும்
உயர்மகார் சித்ராங்க தன்விசித் திரவீர்யன்
உன்சந்நி தானமுறலால்
முற்றுமறி வுருவனெதிர் முத்தொழிற் படுமாறு
முடியொடு கிளர்ந்ததென்ன
முயக்கிலை முடியெம்மை யென்றுற்று மாழ்கினர்
முன்னீதி யேபின்மொழிவான்
செற்றமறி யாமனத் தருமனும் வணங்கிடச்
சிந்தையக லப்பணித்தான்
செய்தியுணர் த்ருதராஷ்ட்ரன் சேரவரு விதியினுள்
சிந்திக்கு ஞானியானான்
சற்றுமறி யாமையிலர் தனையன்றி யில்லாத
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

உற்றும் - பீஷ்மனையிழந்தும் துணைவரை யிழந்தும். சிந்தை - கவலை. ஞானியானான் - கருமத்தால் ஞானமுண்டாம் என்பது போல இவ்வளவுபட்டு உண்மை தேர்ந்தான் என்பது. அறிவுருவன் எதிர்முத்தொழிற்படுமாறு - சதாசிவன் சந்நிதியில் மூவர்முத்தொழில்களைப் புரிதல்போல வீட்டுமன் முன்னிலையில் சித்ராங்கத விசித்திர வீரியர் ஆண்டாரென்பது.

தான் ஞான சொருபிணியாதலின் உயிர்கள் காமவெகுளி மயக்கத்துட்பட்டன தன்னருள்பெறின் ஞான மெய்துமென்பது மகுடம்.

ஏழாவது

துரோணபருவம்.

துரோணர் சேனுபதியாதல்.

[தூய்மைப்பயன், யோக்யதையின் சிறப்பு.]

எக. அமர்க்களத் தொருவனும் வீட்டுமெனு முடலெலா
மம்புகளி னூர்கொணேமி
அணியுருவி னுற்றகம் புறமுமிளிர் மாலுருவ
மன்போடு கண்டுபோற்றி
நமக்களப் பரியதொர் நலங்கொண்டு மேவினன்
நவில்தாதை மொழிகொண்டுபின்
நண்ணுவின் மறைவலனை நாடுகுரு சேனையின்
நாயக னெனக்கொண்டுதன்
றமர்க்களப் பலிதந்து தரணிபெற நாடுவான்
சமரமறு நாள்வகுத்தான்
தருமனுஞ் சிந்தைமுத னல்வரொடு ஜயவிந்தை
சாரவேள் விக்களமுற்றுன்
சமர்க்களத் திடுகளத் தெவருமதி பெறவருள்
தன்னருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஆர்கொணேமி - ஆரங்களையுடைய சக்கரம். உடலூன்றிய அம்புகள் ஆரங்கள். முட்பன்றிபோலென்றும் உவமிப்பதுண்டு.

தாதைமொழி - கன்னன் உடனிருக்கட்டும். துரோணரைத் தலைவனுக்குக என்றமொழி. தமர்க்களப்பலி - தமரையிழத்தற் றுணிவுபற்றிப் பலியென்றது.

சிந்தைமுதனல்வர் - அந்தக் கரணம் போன்ற தம்பியர் நால்வர். மாறுபட்டுப்பேசினும் தருமர் வழியில் நின்று புரிவர் என்பது.

பதினொராநாட் போர்.

[துரோணர் சிறப்பு, அருச்சுன னுயர்வு, வீடுமெனிலாத சேனை.]

எஉ. அங்குரித் தொருதூணில் வந்தவன் கடவுதேர்
அணிவிஜயன் முனைகிட்டலும்
அம்புயத் தானைநிக ரருமறையி னுன்முகமு
மடைவினிற் கொண்டுசீடர்
தங்குலம் பலபடைத் துறுநாவிற் சாரதா
தழைத்தொளிர வருவிப்பிரன்
தன்னிலுயர் மாலொடுஞ் சங்கரன் படையொடுஞ்
சார்ந்தமா ணவனையுறவே
மங்குலம் புலியின்மை மானவரு சேனையில்
வருசகுனி மருகரையெதிர்
மாணுறப் பொருதிரித் தாரிளைய ரிருவரும்
மன்னியது சல்லியப்போர்
தங்குருத் திரர்களே காதசர் பணிந்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அங்குரித்தல் - முளைத்தல், தோன்றுதல்.

துரோணர் ப்ருகஸ்பதியின் அம்சமாகப் பிறந்தவர். எனினும் சிலேடையாக இங்கே பிரமனுக் கொப்பிட்டது. தருமனை முருகனிகர் என்றதும் முன் உவமைக்கினம். வீரருட் சிறந்தான் முருகனுதலின் உவமைப்பொருளாகக் கூறியது.

மங்குல் - ஆகாயம். சல்லியப்போர் - சல்லியன் யுத்தம் கலக்கமாகிய யுத்தமுமாம்.

வீடுமெனிலாத சேனை பொலிவிழந்த தென்பது கருத்து. ஏகாதசருத்திரரும் தன்னருள் வழிப்பட்டாரென்பது மகுடக் கருத்து.

அபிமன்யுவும் இலக்கணகுமரனும்.

[பகைவரை உயிருடன்பிடித்தல், போரினும் அருள்.]

எரு. போர்தந்த குலமொழிக் குந்நகுலன் சல்லியற்
புறங்கண்டு மீளவிஜயன்
புதல்வனெடு சுயோதனன் மகனிலக் கணகுமரன்
பொரவரச் சிலையுநாணும்
வர்தந்த வில்லிசேய் இறுத்துயிரி னெடுபற்றி
வகுபொழு துறுசல்யனை
எழினிறத் துழுதன னிழிந்துவரு தேரனை
யிகல்வீமன் கதையில்வீழ்த்தான்
நார்தந்த நன்மனக் குமரனவர் நிலைகண்டு
நாடவரு ளோடுகுமரன்
நலங்குலை தருஞ்சல்ய னிருவரையுங் க்ருதபன்ம
னண்ணுதே ரிற்கொடுய்ந்தான்
சார்தந்த போரினுந் தனிநகை புரிந்திடுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

விஜயன் புதல்வன் - அபிமன்யு. வில்லி - அர்ச்சுனன். உயிரொடு பிடித்தல் யுத்தகருணை. நிறம் - மார்பு. இழிந்து - இறங்கி. நார் - அன்பு. அருள்நாட என்றது அம்மான் பாட்டன் என்பது பற்றி. சல்யன் - மத்ரதேசாதிபதி, மாத்ரி சகோதரன். தேரிற்கட்டுண்ட இலக்கண குமரன் அவிழ்த்துக்கொண்டு ஓடினுனென்பது.

போரினு நகைத்தல் - சுலபயுத்தமாகிய தன்வீரம் பற்றி. திரிபுர சுந்தரியாதலின் போரில் நகைத்தல் அம்பிகைக்கு முண்டென்பது.

பன்னிரண்டாநாட் போர்.

[பிரமன் பிரணவப்பொருளில் மயங்கியது, தருமர் யுத்தம்.]

எச. பாபவினை ஞன்மகனை யபிமன் பிடித்தவசை
பாறவறன் மகனைநாளைப்
பங்கவினை செயவென்று பாரமறை வல்லனைப்
பணிந்துநிரு பன்வேண்டலும்
சாபகலை வல்லவனு மோமென்று முன்பட்ட
தறியாமன் மறுநாளுமே
தருமன்முனை வந்துறலு மிளையரொடு பாண்டியன்
தக்கபல னுறுசிகண்டி
கோபவிளை வாற்பொருதல் குறியாது வென்றுகுறி
குகனனைய தருமனென்றே
கூறுவித் தெனுமம்பு விட்டுவிளை வாமவன்
கூர்வேலி னெங்தோடினன்
தாபவினை சேர்நரைத் தகுநீதி யின்வெனுங்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பாபவினைஞன் - துர்யோதனன். பாற - நீங்க. மறைவல்லன் - துரோணன். சாபகலை - தனுர்வேதம்.

ஓமெனல் - அங்கிகாரம். முன்பட்டது - முன்பலதரம் தோற்றது; பிரமனுக்குச் சிலேடையினுவமித்தமையின் முன்முருகனுற் குட்டுண்டதுமாம்.

துரோணன் விட்ட அம்புகள் விதைகள் போலவும் தருமன் விட்ட அம்புகள் பலவாய் அவ்வித்தின் விளைவுபோலவு மாயின என்பது தருமனீதியின் பயன் என்பதைக் குறிக்கும் மகுடம்.

பகதத்தனும் அர்ஜுனனும்.

[நினைப்பின் வருதல், பெருங்கருணைத்திறம், தத்துவஞானம்.]

எரு. போர்துறந் தன்றுமுடி தாழ்ந்துபோங் குரவன்றன்
புடைவந்த சேனைவெள்ளம்
புனைவாகை முரசோன்பி னுறுநிருத னபிமன்கை
பொழிவாளி பொரநீங்கலும்
ஏர்தருங் கடமழையி னிபமூர்ந்து பகதத்த
னெவருமெதி ரணுகிடாப்போர்
இயற்றநற் றருமனுன வருமாலொ டுறுதுணைவ
னெதிர்பொரச் சிலைகோட்டினுன்
கார்தரும் பெயலெனக் கணையிருவர் தூர்த்தலுங்
கடியன்விடு மாலம்பைமால்
கரங்கொண்டு தான்றந்த ஒருவேலி னவனுவி
காலனூர்க் கேகுவித்தான்
சார்தரு துவாதசாந் தத்துமிளி ராசனி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நட ராஜ
சச்சிதானந்த சிவமே.

வாகை - வெற்றிமாலை. நிருதன் - கடோற்கசன். கடமழை - மதப்ரவாகம். இபம் - யானை.

தருமர் நீடுபோர் கண்டு நினைத்தலும் வேறுமுனையிற் சென்ற கண்ணனும் அர்ஜுனனும் வந்தாரென்பது.

பகதத்தன் விட்ட நாராயணாஸ்திரத்தைக் கண்ணன் கரத்தேந்தித் தானொரு அம்பை அருச்சுனனுக்குக் கொடுத்து அழிப்பித்தானென்பது.

பகதத்தன் - நரகாசுரன் புத்ரன்.

பதின்மூன்றுநாட் போர்.

[அறைகூவுதல், வஞ்சகப்போர், கர்ப்பவாசனைக்கல்வி.]

எசூ. மலையின்வரு வேழமொடு பகதத்தன் மாளவும்
வன்றிறல் குன்றுநிருபன்
மற்றைநா ளபிமனொடு வஞ்சகப் போர்செய
மனங்கொண்டு நேமியூகஞ்
சிலையின்வரு கலைவலான் வகுப்பவந் துற்றனன்
செழுமகர வணியொடுமெதிர்
திறல்விஜய னறைகூவு சஞ்சத் தகர்க்கொண்டு
தென்பாலி னுடனேகினன்
புலைமைகொள் மனத்தவர் போருற்று நாடவும்
பொருதேற்ற பாஞ்சாலனும்
புகழ்முனியி னிரிதரப் புராரியென வபிமனும்
புக்காழி கடைதலுற்றான்
தலைமைகொள் த்ரயோதசித் தமியனக முறுபவள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

நிருபன் - துர்யோதனன். நேமியூகம் - சக்கரவியூகம். அறைகூவல் - வேறொருசார் யுத்தத்துக்கு அழைத்தல்.

ஸம்சப்தகர் - நன்றாகநெடுமொழி கிளத்துவோர் என்பதுபொருள். புலைமை - வஞ்சகம். பாஞ்சாலன் - த்ருஷ்டத்யும்நன். முனி - துரோணன். புராரி - சிவன். இவனுற் பெரும்படையழிதல் பற்றி உவமை. ஆழிகடைதல் - கடலைக்கடைதல் - சக்கரவியூகத்தைத் தகர்த்தல்.

இந்நூல் ப்ரதோஷ விரதோத்யாபன ஞாபக சின்னமாக இயற்றப்பட்டதை உணர்த்துவது மகுடம்.

அபிமன்யு சக்ரவியூகத்தைப் பிளத்தல்.

[ஆண்மைச்சிறப்பு, தெய்வவரம்பிகவாமை, சூழ்ச்சித்திறம்.]

எஎ. பொங்கெரியி னுருசினந் திருகவரு மபிமன்யு
புக்காழி யூகமதனிற்
போதுநாற் கோணமும் புரிவினிற் சுற்றியே
புகல்வட்ட முற்றநிருபர்
அங்கிரிய நற்படை செலுத்தியசு வத்தாமன்
அருங்கன்னன் சகுனிக்ருபனும்
அணிமுது கிடச்சகுனி மைந்தரவ ரெண்மருயிர்
அடையாரொ டோடவட்டான்
பொங்கரவன் புனைகொன்றை மாலையை ஜயத்ரதன்
புரிவோடு நடுவிட்டனன்
புகுந்துணை கடோற்கசனு மபிமனும் மேருவின்
புறஞ்சுற்று கதிர்களானார்
சங்கரிப் பான்மந்யு தனிவடி வுறச்செயுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

தெய்வவரம்பிகவாமை - கொன்றைமாலையைக் கடவாது உண்ணின்று பொருதல். புரிவு - உபாயம், ஆலோசனை. அடையார் - பகைவர். அவ்ரோட சகுனிமைந்தர் உயிரும் உடனோடின இறந்தாரென்பது. எண்மர் - அனுபந்தத்திற் காண்க. இருவீரரும் இருபுறஞ் சுற்றியது சூரிய சந்திரர் மேருவுக் கிருபுறமும் மாறிச்சுற்றுதற் குவமை.

மந்யு - கோபம். அபி அடைமொழி - ருத்ரகோபமே ஒருருவாயிற் றென்பது.

அபிமன்யுவும் ஜயத்ரதனும்.

[ஒருவனைப் பலர்வெல்லுமநீதி, தந்தைக்குநிகர்தனயர்.]

எஅ. முந்துற்ற போரிலுறு மைவரைக் காப்பவன்
முடுகினுன் வேறுதிசையில்
முழுவலியி னெருவனெடு முடிவேந்தர் நாணற்று
முதுகிட்டு மீளவுற்றுத்
தந்துற்ற போரிலொரு பகலளவு மொருதேரிற்
சலியா துடற்றுவான்றோர்
தகர்த்தவனி வருவான்கை விற்கோத் தறித்திடத்
தனியாழி யொருகையேந்தச்
சிந்துற்ற தொருகோடி சேனையுஞ் சிந்துபதி
செங்களப் போராற்றலான்
சிவன்றந்த கதைவிடத்திறலோனு மிரவியொடு
செவ்வான் களத்துவீழ்ந்தான்
தந்தைக்கு நிகர்தனய ரென்னுமுரை நாட்டுறாஉந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

ஐவரைக் காப்பவன் - சகதேவன் பாரதப்போரில் ஐவரைக் காக்கவேண்டுமென அதற்கியைந்த கண்ணன். அபிமன்யுவிவாக காலத்தில் மதுபர்க்கங் கொடுக்கும்போது தருமர் கேட்டதாக முதனூல் கூறும். கூசு-செய்யுளில் "சென்றிறங்கினரூறிலார்" என்புழியுங் காண்க.

ஒருவன் - அபிமன்யு. தனியாழி - முதனுளிற் கண்ணனுபதேசித்தபடி தேருருளையைக் கழற்றி மறையொடு சுழற்றினுன் என்பது.

சிந்துபதி - ஜயத்ரதன். இரவி செவ்வானத்தும் திறலோன்களத்தும் வீழ்ந்தாரென்க. பகலளவு மொருதேரினிற்றல் முதலியன சூரியற்கு மொப்பதறிக. தனக்கு நிகர்தன் விழுமிய பொருள் என்பது பரிகார பக்கம் என்பர்.

கண்ணன் அர்ச்சுனனைத் தெருட்டுதல்.

[காமத்தின் தீங்கு, தீயோரியல்பு, சகுனம், புத்ரசோகம்.]

எகூ. அவத்தினியல் சிந்துபதி துச்சளை மணாளனிவ
 னாரணிய முற்றழன்மயில்
அருங்காம மோகனை யைங்குடுமி தரவீமன்
 அறன்மகனி னுய்ந்தவனுயிர்
தவத்தினியல் கதையினாற் சேய்படச் செய்திறஞ்
 சதுட்டய ரலாரேனையோர்
சகியாது விம்மவிது சகுனத்தி னோர்ந்துமே
 தகுவிறலின் வருக்ரீடியைச்
சிவத்தினியன் மாலிந்த்ரன் சேயொருவ னுக்காய்ச்
 செழுந்தழல் வீழ்தல்காட்டித்
திறம்பட மறுத்திடச் செய்துமன நிறுவுவன்
 சேய்துயரு நிற்குமேயோ
தவத்தினிய லாப்பொருள் தரணியிற் பிறிதிலெனுந்
 தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
 சச்சிதானந்த சிவமே.

துச்சளை - துர்யோதனன் தங்கை. துர் + சளை - கெட்ட கலகக்காரி. ஐங்குடுமி - பெருமிகை செய்தார்க்குத் தண்டனை. சதுட்டயர் - துர்யோதனன், கன்னன், துச்சாதனன், சகுனி என்னும் நால்வர்.

கண்ணன் இந்திரனை நெருப்பில் வீழ்வதாகக் காட்டி இவனால் மறுப்பித்தபோது "தன்துயர் தனக்குத் தெரியும்" என்ற இந்திரனை மறுத்தவன் இப்போது பொறுக்கலாற்றானாயினான். "மக்கள் மேல் வைத்த காதல் மறப்பரோ முனிவர்தாமும்" என்றார் பிறரும்.

மகுடம்: ஜயத்ரதன் வரம்பெற்றதைக் குறிக்கும்.

அருச்சுனன் சபதம்.

[அன்பு, அறிந்தோர் விதியைவிலக்காமை, நெடுமொழிகூறல்.]

அ௦. நாரணன் கதையெலாங் காட்டினு நரனுற்ற
நலமில்சகு னம்வினவலும்
நண்ணுமிரு கண்ணினுங் கண்ணனு நீர்விட்டு
நன்மருக னெனமூர்ச்சைபோம்
வீரனையு மேலணைத் தன்புநீ ராற்றுங்கி
வியன்பா சறைப்புகுதலும்
மெய்யுற்ற பார்த்தனும் விளைவெலா மறன்மொழிய
மேவுதுயர் சொல்லவலமோ
ஏரணியு மைந்தனை யியலழித் தவனுளை
யென்கைப் படாதுய்வனேல்
இயனூ லறம்பலவு மெய்த்தழித் தேனழிக
வென்றுவன் புரைகூறினன்
தாரணியை விண்ணினுஞ் சான்றதென வந்துறாஉந்
தன்னருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

நாரணன் - ஈண்டுக் கண்ணன், உபசாரவழக்கு.

சகுனம் - நற்கலன், சங்கமுதலியவை வீழ்தல், கண்ணிடனுடல், பிரிந்தார் துயர்பட வெதிர்தல் முதலியன. கண்ணனும் - உம்மை மாயைகடந்த தெய்விகத்தன்மையுடைமையையுணர்த்தும். "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தா ழார்வலர் - புன்கணீர் பூசறரும்" என்பதுகுறள்.

மெய்யுற்ற - உணர்வுற்ற. அறன் - தருமன். மைந்தன் - அபிமன்யு. எய்த்து - மறந்து. அழித்தேனழிக - தன்மைவியங்கோள். வன்புரை - சபதம்.

"வான்பழித்திம் மண்புகுந்து மனிதரையாட்கொண்டவள்ளல்" என்பது திருவாசகம். குயிற்பத்து.

கண்ணன் சிவோகம்பாவனை.

[அருச்சுனன் கனவிற்கயிலைக்கேகுதல், பாசுபதம்பெறுதல், பக்தி.]

அக. ஆர்கலி யுலாமுலகம் யாவையு மளிப்பவ
　　னருவீர னுடனேர்மனையி
லண்மியோ ரறைதன்னி லர்ச்சுனன் ருத்ரபலி
　　யணிபெறச் செய்தல்காட்டிக்
கார்கலந் தனகண்ட னுமங்க ளுங்கூறிக்
　　கண்ணுமறை செவியறிவுறூஉக்
கவினுற்ற தர்ப்பசய னத்தின்மேற் பசுபதியின்
　　கருணைபெற வைத்தனன்பின்
ஏர்கலந் தோரறையிற் றனமர்ந் தொருஹம்ச
　　மேன்றபா வனையினெய்த
இயல்விஜயன் கண்ணனொ டிருங்கயிலை நண்ணியே
　　யீசனருள் பெறுதல்கண்டான்
சார்கலைகள் சாற்றுமொரு ஹம்ஸமென வுறைகின்ற
　　தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
　　சச்சிதானந்த சிவமே.

ஆர்கலி - கடல். வீரன் - அர்ச்சுனன். அண்மி - அடைந்து. ருத்ரபலி - சிவபூஜை. நாமங்கள் - சிவஸஹஸ்ரநாமம். கண்ணுமறை - தியானசுலோகமுதலியன. செவியறிவுறூஉ-செவியின்கண் அறிவுறுத்தி.

ஹம்ஸ பாவனை - ஸோஹம் பாவனை. அவனுனென அறிதல், அவ்வுணர்ச்சியிற் றனுஞ்சிவத்தொடபேதமாய்க் குருவாய்நின்று அர்ச்சுனற்கும் அறிவுதெரிய நினைந்து நிட்டை கூடல்.

அவன் நினைவின் வலியாலும் தன்தியான பலத்தாலும் அர்ஜுனன் கண்ணனோடு கனவின்கட் கயிலைசென்று வரம்பெற்று மறை பயின்று துயினீங்கிக் கண்விழித்தானென்பது. அன்னம் - அன்னப் பேடுமாம்.

பதினுன்காநாட் போர்.

அருச்சுனன் ஜயத்ரதனை நாடல்.

[தூதனுப்புதல், நடராஜர் அபிஷேக காலம்.]

அஉ. கொதித்திசைக் குந்நரன் கூற்றஞ் சுயோதனன்
குறித்துணர விட்டறன்சேய்
கூடியீ ரேழ்நாட் களங்குறுக வெதிரிகள்
கூறுமிரு பான்யோஜனை
மதித்திசைக் கும்வகை வகுத்துமேல் வெல்ரதனை
மறைத்தணிகொள் சேனையூடே
மால்விடுந் தேர்முனைஇ வருவிஜயன் குரவனை
வணங்கிமேற் கன்னனையொரீஇக்
கதித்திசைக் கும்வருணன் மகனுஞ் சதாயுவைக்
கதாயுவென வாக்கியெதிருங்
கையா யிரன்படக் கண்ணனொரு மறைதரக்
கனன்றட்டு மேனடந்தான்
சதுர்த்தசியி னரிகன்னி மாசியபி ஷேகங்கொள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கூற்றம் - சபதமொழிகள். உணரவிடல் - தருமர் கடோற்கசனால் தூர்யோதனற்குணர்த்தல். இருபான் - இருபது.

வெல்ரதன் - ஜயத்ரதன். முனைஇ - கடவி. குரவனை வணங்கி- எதிர்த்த துரோணனை வேறுநோக்கொடு செல்கின்றேனென வணங்கி மேற்சென்று. கன்னனைஒரீஇ - கன்னனைப் புறக்கணித்து. சதாயு - நூறுவயதுடையவன். கதாயு - சென்ற ஆயுளையுடையவன்.

அரி - சிங்கம், ஆவணி. கன்னி - புரட்டாசி. மாசி இவைகளில் வருஞ் சதுர்த்தசிகள் நடராஜர் அபிஷேகதினங்கள். சித்திரை ஓணம், ஆனியுத்திரம், மார்கழித்திருவாதிரை இவைகளையும் இனம் பற்றிக்கொள்க.

துர்யோதனன் கவசமற்றது.

[நல்லோரைப்பகைத்தலின்பயன், தந்திரத்தில் வெல்லலாகாமை.]

அரு. உந்திரத வீரனெதி ரொருவரு நிலாதோட

லோர்ந்துநிரு பன்வேண்டலும்

உற்றதுணை யோர்பகைமை யுறுதிரு ழாமைகொடி

யோருறவு கொண்டனைமுனை

வந்திரத முற்றவர்க ளாரணனு நரனுமா

மற்றவரை வெல்வைநீயோ

வந்தனையிந் தாவெனு மறையோன்றன் கவசமும்

வாங்கியமிர்'தப்பொய்கைசேர்

சுந்தரனை யுறநரனு நரகாரி யயில்விடச்

சூழ்கவச மறமகிபனும்

துணையற்று வலியற்று மேவிரத மற்றுமே

தொன்றுபோ லோடியுய்ந்தான்

தந்திரத் தூழ்வெலு மந்திர மகற்றிடுந்

தண்ணருட் சிவகாமிசேர்

சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ

சச்சிதானந்த சிவமே.

நிருபன் - துர்யோதனன். பாண்டவர் வனத்துறைந்தமையாலும் பெருமன்னனுதலாலும் தானரசனுய் விளங்குவதுபற்றி. மேலுமறிக.

வந்தனை - வந்தாய். இந்தா - கொடுக்கிறேன் பெறுக என்புழி வரும் இடைச்சொல். கவசம் - பிரமகவசம். பொய்கை - கண்ணனுற் புதிதாக நிருமிக்கப்பட்டது. சுந்தரன் - அர்ச்சுனன். நரகாரி - நரகாசுரனைக் கொன்ற நாராயணஸ்திரம்.

தெய்வசகாயமுள்ளவரைக் குறும்பர் வெல்லலரிதென்பது மகுடக் கருத்து. பழமொழி உ௨ள - செய்யுளை நோக்குக.

ஜயத்ரதன் வதை.

[சிலையின்மணியொலி, கீழோர்செருக்கு, அதர்மத்தின் தோல்வி.]

அச. திருமனை யெனும்விஜய னொருசிலையின் மணியோதை
யோவா தொலிப்பமாலும்
செங்குமுத வாயூது சங்கினொலி கேட்டலுஞ்
செம்மனத் தருமன்மாழ்கி
யுருமனைய சாத்தகியை வீமனையு மேவினன்
உடைந்துதோற் றுறுநர்சூழ
உடன்வீம னுரககொடி யோற்கெதிரி னுறுதுணைவர்
ஒருபாதி யறவீழ்த்தினன்
சிரமனைய போதினிகன் மால்பரிதி யாற்பரிதி
தேயவிரு ளோடுமேயுஞ்
செயத்திரதன் செந்தலை சமந்தமுறு தந்தைகைச்
சென்றெய்த நரனுமெய்தான்
தருமனை வயிர்த்தவர்கள் சாருமிட மமையாத
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

திருமனை-திருமகட் குறையுளானவன் ஸ்ரீமான் என்பது. சிலை மணி - வில்லிற்கட்டிய மணி. மாழ்குதல்-ஆபத்தையுணர்த்துங் குறியோ என அஞ்சுதல். வீமன் சாத்தகி இவரால் காணாத ஜயத்ரதனை மறுமுறை தேடலும் மற்றுஞ்சிலரை அழித்தலும் கண்ணன் கருத்துப்போலும். உரும் - இடி. சிரம் - வடமொழி, நீண்டகாலம். பரிதி-சக்கராயுதம், சூரியன். இருளோடுமேயுஞ் ஜயத்ரதன் - இதுவரை நிலவறையின் மறைந்த ஜயத்ரதன் சூரியன்முன் மறைந்த இருள் சூரியனீங்க முழையினின்றும் புறப்படல் போல இருளோடுங் கிளம்பினன் என்பது.

தருமன் - தரும புத்திரன். தருமஞ் செய்வோரை எதிர்ப்பவரும் தண்டிக்கப்படுவோர் என்பது மகுடக்கருத்து.

இராத்திரி யுத்தம்.

கடோற்கசனும் கன்னனும்.

[துணைப்போர்புரிதல், மூடர்களின் ஞானம்.]

அரு. சுடருற்ற விருபரிதி யும்மிக விலங்குறச்
சூழ்நிருபர் கண்டுமாயன்
சூழ்ச்சியோ விண்ணிறைவன் தோதகம தோவென்று
துன்னுசாத் தகியைவளைய
இடருற்ற வவனிலைமை நாரணன் குறியினரன்
என்றுமிகு சிரவணனுயிர்
ஏகுவித் தானெவரு மிதுநீதி யோவெனலும்
என்னைமுன் னாட்செயலென்றான்
படருற்ற அன்றிர விடிம்பைமகள் பூசலாற்
படையெலா மாயநிருபன்
பாரதப் போர்முடிப் பானிவனையில் விடுகெனப்
பரிதிமக னைப்பணித்தான்
சடருற்ற துன்பொரு ளகற்றுமிரு ஞானமாந்
தன்னருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

இருபரிதி - சூர்யன், சக்கரம். மிகவிலங்குற - சிலேடை. விலங்குற, இலங்குற எனப்பிரிந்து சக்கரம் விலகச் சூரியன் பிரகாசித்தலை யுணர்த்தும். தோதகம் - வஞ்சனை. மிகுசிரவணன் - பூரிச்ரவஸ். முன்னாட்செயல் - அபிமன்யுவொடு பலர்பொருதல். என்னை - என்ன? வினாவினைக் குறிப்புமுற்று.

படர் - வருதல், துன்பம். இடிம்பைமகன் - கடோற்கசன். பாரதப்போர் முடிப்பான் - இவனே பாண்டவர் செய்யும் போர் எல்லாஞ் செய்து முடிக்கும் வெகுளியன் என்பது.

கன்னன் அர்ச்சுனனைக் கருதி இந்திரன்மாட்டுப் பெற்ற சக்தி ஆயுதத்தை இவன்மேலிட்டிழத்தலைக் குறிக்கும் மகுடம்.

பதினைந்தாநாட் போர்.

துரோணர் சுவர்க்கமெய்தல்.

[அந்தணர்க்குறுதி, தீவினையச்சம், நிராயுதரை எய்யாமை.]

அகூ. காரன்ன மேனியன் கடவுதேர் விஜயனொடு
கௌரவப் படையுமோதிக்
கலந்தொரு வருக்கொருவர் கதுவுபோர் நீடலுங்
கருதுமேழ் முனிவரர்களும்
நீரன்ன வேதநெறி கூறிவிண் புகுதலும்
நேர்ந்துமறை யோன்சாந்திசேர்
நிலையினறன் மைந்தனுஞ் சிலேடையின் மகன்படல்
நிகழ்த்தவளர் கருணையானைப்
பேரன்ன த்ருஷ்டன்விடு படைதலை துணித்தலும்
பிறங்குளைத் தாமனெய்யும்
பெலப்படை நிராயுதர்க் கண்டுபின் மீளவரு
பெருமுனியு முனிவாற்றினான்
சாரன்ன பூரணி பௌர்ணிமா மதிநிலவு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

கார் - மேகம். கதுவுதல் - பற்றுதல். எழ்முனிவர் - பின் அனு பந்தத்திற் காண்க. வேதநெறி - அந்தணர் பொரலாகாதென்பதும் தனுர்வேதமாதலிற் கற்பித்தல் இதுவரை வீட்டுமற்குதவிப்போர் செய்தல் அமையும் என்பதும் மேல்மோக்ஷ இச்சை (சாந்தி) எய்தற் பால தென்பதுமாம்.

சிலேடை - அச்வத்தாமா ஹத: குஞ்சர: என்பது. அச்வத் தாமா என்பது கலிங்கத்தரசன் பட்டயானைக்கும் பெயர். வீமனாற் கொல்லப்பட்டது. நிராயுதர் மேற் பிரயோகித்த அஸ்திரங்கள் தமக் கிணையின்மையிற்றிரும்பு மென்பது. கண்ணன் குறிப்பால் யாவரு நிராயுதராக வீமன்மாத்ரம் சற்றுடன் பொருதுமீண்டு நிராயுதனாக அந்நாராயணாஸ்திரம் திரும்பியது என்பது.

எட்டாவது

கன்னபருவம்.

பதினாறுநாட் போர்.

[கன்னன் சேனாபதியாதல், பணிவின்மையின் பயன்.]

அஎ. மின்னுடையும் வேல்விரா டன்றுருபன் விறல்கொண்ட
மீளியை யடர்த்தகாளை
மிருபத்தொ டறுநாளின் வேட்களத் துற்றனன்
மேற்கன்னன் சேனையிறையாய்
மன்னுடையு மணிகொண்டு வந்தனன் றொந்தமுனை
வாட்போரில் கேமதூர்த்தி
வாகையுறு வீமனின் வதம்படக் கண்ணன்பின்
வருமிளவல் விந்தானுவின்
தன்னுடல் செகுத்தனன் சஞ்சத்த கர்க்கொண்டு
ஜயனுறத் தருமனிளையோன்
றரும்போரில் முடிவணங் கான்றம்பி யிருவருந்
தலைகுனிந் தோடலானார்
தன்னடியர் தருசோட சோபசாரங் கொளுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

உடைதல் - தோற்றல். துருபதனைக் கொன்றமீளி - துரோணர். அவரைக் கொன்றகாளை - த்ருஷ்டத்யும்நன்.

மன் உடையும் அணி - மன்னர்கள் தோற்றற்கேதுவாகிய சேனை. தொந்தம் - ஒருவர்க்கொருவர். கேமதூர்த்தி - க்ஷேமதூர்த்தி, நூற்றுவரிலொருவன் - இளவல் - சாத்தகி. முடிவணங்கான் - ஒருவரையும் வணங்காதவன், இறுமாப்பாளன் என்பது. பாண்டவ கீதையில் "தருமந்தெரியும் செய்வதில்லை, அதர்மம் தெரியும் விடுவதில்லை" என்ற கருத்தடங்கிய சுலோகம் இவன் கூற்றென்பது நோக்குக.

முடிவணங்குவாரைத் தலைநிமிரச் செய்பவள் என்பது மகுடக் கருத்து.

பதினேழா நாட் போர்.

[சாரதிச்சிறப்பு, சமானனே ஏவலின்றீமை, தற்புகழ்ச்சி.]

அஅ. முனைவனடி சூழ்மொய்ம்பர் ஐவரும் மற்றைநாள்
முன்னியணி கொண்டெதிர்தலும்
முடுகுதேர்க் கன்னற்கு மூதறிவி னூர்வலவன்
மோலிபுனே சல்யனென்றே
துனைவி னவனைச்சுயோ தனனுற்று வேண்டலும்
சூழ்வலிய னரிதினேர்ந்து
துன்னினன் கடவுதேர்க் கன்னன்மொழி சொல்லெலாந்
துச்சமென மாற்றுநீரான்
நணிவணங் கொருவிலொடு விஜயனொரு பாலுற
நவில்வீம னுலவியோர்பால்
நண்ணிமுனை யிற்றருமன் கன்னன்வலி யாற்றுமை
நாடியெதிர் கூடினனே
தனைவணங் கேதாத சர்க்காறு தலையுதவு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மொய்ம்பு - வலிமை. முன்னி - நினைத்து. மோலி - கிரீடம். துனைவு - சீக்கிரம். துன்னுதல் - நெருங்குதல்.

துச்சமென மாற்றுதல் - நிராகரித்துப் பேசுதல். பாண்டவர் பக்கல் பக்ஷபாத முடையவனுதலாலும் தருமர் பிரார்த்தனைக் கிணங்கியவனுதலாலும் நன்று சொல்வதையும் பிறர் சொல்வதைக் கேளாமை கண்ணன் இயற்கையாதலாலும் அது யுத்தவீரனுகிய சல்லியனுக்கு வெறுப்பைத் தருதலாலும் இவனை விடவும் துர்யோதனற்கு முடியாமையாலும் பிறவாற்றுலும் இங்ஙனம் பேசுவானென்பது.

ஆறுதலையுதவல் - கங்காதரணமுதலிய சாருப மளித்தல். தருமர்க்கு கன்னயுத்தத்தில் ஆறுதலளித்தலுங் குறிப்பு.

வீமனும் துச்சாதனனும்.

[பிறரைப் பழித்தல்கூடாமை, நெடுமொழிகூறல்.]

அகூ. துர்ப்புத்தி கொண்மைந்தர் சுயோதனனொடு சூழ்தலுந்
தோன்றுநர சிங்கவீமன்
துன்னுசில துணைவரை வீழ்த்தியே துச்சாத
னன்றுணைத் தோளின்மேவி
யெப்புத்தி கூறினை யெழிலாட்கு மன்னவையி
னியல்வேறு பதிகொளென்றே
இயங்குபசு வோவைவர் என்றுரங் கிறியே
இரத்தசுவை யினிதினிதெனக்
கொட்பிற் றிரிந்துகூத் தாடினான் கன்னன்முற்
கூறெவரு மதிமாழ்கினர்
குலவுதா ளாற்றலை குமைத்துச் சுயோதனன்
குலுங்குதலை காண்பனென்றான்
சற்புத்ர போகமைந் தொடுபன்னி ரண்டினருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மைந்தர் - நூற்றுவர். நரசிங்கவீமன் - உவமைத்தொகை. துர்யோதனன் பாஞ்சாலியைச் சபையில்வைத்துத் "தோற்றவர்களும் அநாதைகளும், உன்னைமீட்க வல்லமையற்றவர்களும், பசுக்கள் போன்றவர்களுமாகிய உன்பதிகளைமறந்து ஜயசீலனும் நிரம்பிய செல்வனுமாகிய என்னை விரும்பு என்பட்ட மகிஷியாயிரு" என்றிவ்வாறு பேசியதையும், துச்சாதனன் ஆமோதித்ததையும் இப்போது வீமன் எடுத்துக்கூறி யார் பசுக்களென்று துர்யோதனன் காணத் துச்சாதனனைப் பிளந்து இரத்தத்தைக் குடித்தானென்பது. குலுங்குதலை - சபையில் சிரக்கம்பஞ் செய்ததலை.

ஐந்தாமிடம் புத்ரஸ்தானம் - கஉ ஆமிடம் போகஸ்தானம்.

அருச்சுனனும் கன்னனும்.

[யுத்தப்ரோத்ஸாகம், வினைக்கட் செய்வகை மறத்தல்.]

௯0. வன்மமுறு பகையொரீஇப் பாசறையில் வருபார்த்தன்
மன்னுதரு மற்காண்டலும்
வன்கணக் கன்னனுயிர் வாங்கிலையென் வந்தனை
வலியிலியென் றேதமிகைசேர்
சன்மமுறு விஜயனைத் தளர்விலியுங் கொண்டுமேற்
சயந்தனசு ரற்றுக்கல்போல்
சகங்கிளர வுற்றமுனை யிற்புக விடுத்தனன்
றழன்மனை நினைப்பூட்டினன்
தன்மறந் துறுபோரிற் கன்னன்விடு மம்பெலாந்
தகுக்ரீடி மாற்றவிடநேர்
தன்னரவம் விட்டனன் றரணிபுகு தேரினற்
றலைமகுட முந்தியதரோ
தன்மமொடு நன்மனை தசத்தொடுறு மேழினருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பாசறை - பகைமேற் சென்றோருறைவிடம். வலியிலி - விஜய னெனப் பேர்படைத்தும் வில்வி என விற்கைகொண்டும் இன்னுங் கன்னனைப் பொருதுவென்றிலை என்ற இகழ்ச்சிக்குறிப்பு. க்ருஷ்ணர் இவ்வைவுவாங்குவிக்கவே அர்ச்சுனனை அவரிடம் அழைத்துச் சென்றது. அதுவும் அருச்சுனற்குப் போரில் எழுச்சிமூளும் பொருட்டு.

மிகைசேர் என்றது அளவுகடந்து வைத தருமனை ஆவேசத்தா லடிக்கச்சென்ற அர்ச்சுனனது கோபத்தை உணர்த்துவது. தளர் விலி - க்ருஷ்ணன். கொண்டு - நீதிகூறி அக்கோபத்திற்குக் கன்ன னைக் காட்டிச்சென்று.

தரணிபுகுதேர் - க்ருஷ்ணன் தாளை யூன்றலாற் சற்றுக் கீழே இறங்கியதேர். தன்மம் - பத்தாமிடம். மனை - களத்திரஸ்தானம்.

விஜயன் கன்னனை வேறல்.

[முனிவர் வெகுளலின்பயன், அறவியல்பு.]

கூக. போற்றுமறை வலவனுற் புகுமரவி னுய்ந்தனன்
பொருவிலா னென்றுசீறிப்
பொருளிழந் தானெனப் புண்ணியமு நொந்தனன்
புக்கிரத மேல்வினைசெயும்
ஆற்றலவ னன்கணையி னவசமுற மகிபனும்
அணிநெடுந் தேர்புதையலால்
அவனியி னிறங்கியே அஞ்சுகில னறமுணர்வை
அமர்கசிறி தெனவையனும்
எற்றெழுக வெனவிஜய னீதிசெறி வோய்காண்க
வென்றப்பு மாரிசொரியா
இருநிலனின் றெதிர்வான்ற னிதயகவ சம்பிளந்
தெதிரின்முக முளரிகொய்தான்
சாற்றுமற நுட்பமெய்த் தனிஞான மௌநிறாஉந்
தன்னருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மறைவலவன் - மறையில்வல்லவன், வலவன் - சாரதியுமாம். பொருவிலான் - இலான், விலான் எனப்பிரியும்.

புண்ணியமுநொந்தனன் - செய்த புண்ணியங்களும் வந்துதவாமையின் நொந்தான். செய்தவளவில் "கன்னன் கொடை" எனப் பிரசித்தமாதலின் அம்மகிமைதோன்ற வில்லிபுத்தூரார் க்ருஷ்ணன் கன்னனிடத்துத் தருமயாசகஞ் செய்ததைக்கூறினர். முதனூலில் ஈண்டுக் கூறியாங்குக் கன்னன்தேர் புதைந்து கன்னன் யுத்ததர்ம முணர்ந்தவனே! சற்றுநில் தேரைத்தூக்கிவிட்டு உன்னையுங் க்ருஷ்ணனையும் வெல்வேன் எனக் க்ருஷ்ணன் குறிப்புணர்த்த விஜயன் நேற்று அபிமன்யு வதம் யுத்ததர்மமோ என்று தேரின்றிக் கீழ்நின்ற கன்னனொடு பொருது வென்றான் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஒன்பதாவது

சல்யபருவம்.

[தெய்வசகாயம், தனபாக்யங்களின் அமைப்பு.]

கூஉ. வனமிருந் துறுதவனும் வனமாலி யருளினல்
மன்றுணைக் கன்னனைவெல
மாழ்குகுரு சேனையுஞ் சல்லியன் முதன்மையின்
வந்தறுதி நாட்போர்கொள
முனைமுரண் படைமோதி நகுலனுங் கன்னன்றன்
மூவர்சுத ரைக்காய்ந்தனன்
முடுகிவரு சல்யனெடு வீமன் கதைப்போர்
முயங்கினன் பின்னறன்மகன்
சினமருவு மத்ரபதி யும்மவன் றம்பியுஞ்
சேர்ந்தறக் கூர்ங்கணைதொடச்
செற்றமிகு பாஞ்சால னுக்கெதிர் நிலாதரவு
சேர்கொடிய னேடினனரோ
தனமிரண் டொன்பதிற் றகவிருமை யிற்றருந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

தவன் - அர்ஜுனன். வனமாலி - துளசிமாலையையுடைய கண்ணன். மன்றுணை - துர்யோதன சகாயன். முதன்மை - சேனபத்யம். அறுதிநாள் - கஅ-ம் நாள், முடியுநாள். கன்னன் புதல்வர் மூவர் - பின்னர் அனுபந்தத்திற் காண்க. மத்ரபதி - சல்லியன். பாஞ்சாலன் - த்ருஷ்டத்யும்நன். அரவுசேர் கொடியன் - நாகத்துவசனுகிய துர்யோதனன்.

இராசிக்கிரண்டாமிடம் தனஸ்தானம் எனப்படும். ஒன்பதாமிடம் பாக்யஸ்தானம் எனப்படும். இரண்டு ஒன்பதிலுள்ள சுபக்கோள் முதலியவற்ருல் இருமையிலும் இரட்டியாகவும் நன்மையைத் தருபவள் என்பது மகுடக் கருத்து.

துர்யோதனன் மடுவில் மறைதல்.

[பகையெச்சங் கூடாமை, மானத்தால் மறையை இழத்தல்.]

கூரு. மானவலி யோடிளைஞர் சூழ்தலும் வீமனும்
வலிந்தவரை மாயவீழ்த்தான்
வருசகுனி சகதேவன் வன்படையி னுயிரொரீஇ
மன்னுகிளை யொடுமேகினன்
கானவனை யெதிர்காளை கௌரவப் படையெலாங்
காய்கணையி னறவீழ்த்தினன்
சுருதியசு வத்தாமன் முதலியோர் மடுமூழ்கு
காவலனை யுறல்வினவியே
நானவனை வெல்கவெனும் வீமன்முத லோரொடு
நண்ணுமறன் மகன்வைவினில்
நன்மறை முயல்பவன் நவில்கதையொ டெய்தியே
நாட்டுசம ரெழுகவென்றான்
தானவப் படைவென்று மூவாறு கணநிறுவு
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

இளைஞர் - எஞ்சிய துர்யோதனன் றம்பியர். கிளை - சுற்றம். கானவனை எதிர் காளை - கிராதனொடு பொருத அர்ஜுனன். கிராதன் - வேடரூபியாகிய சிவபெருமான். சிவபெருமானோடு நின்று பொருதவன் என்பதனால் மற்றவர் அவனுக்கு எத்துணையென்பது குறிப்பு. மடுமூழ்கு காவலன் என்னும் விசேடணம் துர்யோதனன் எதிர்நிற்றலாற்றாது துணைகளுமிழந்து தனித்தோடி மடுவில் மூழ்கி மறைந்தானென்பதை யுணர்த்தும்.

நன்மறை - சிவனைக்காணும் மந்திரம். முன்னர் நாகருலகிற் பயின்றது. நாட்டுசமர் - வைரப்போர், புகழ் நாட்டும் போருமாம்.

துர்யோதனன் வதை.

[படைகெட்டுத் தனித்தவனை மாயையாலும் வெல்லுதல்.]

கூச. ஆற்றலிரு வோர்முனைஇ யருங்கதை யுடற்றுபொழு
தவனியொடு விண்ணுமதிரும்
அணிநதிகள் காண்பலனு மன்றுவந் துற்றனன்
அருஞ்சேனை யறுமொருவனை
மாற்றலரு வலியனை யுயிர்ப்பற் றிலானையெவ்
வாற்றினுங் கவர்கவென்னும்
மாண்மொழியு முன்சாப முங்கருதி யூருவை
வாயுமக னும்பிளந்தான்
தேற்றலரு வெகுளியிற் சேர்பலனுங் கண்ணனிற்
றேறிமேற் றுவரைபுக்கான்
தேவனுறு தேரினெடு மைவரு மெதிர்ப்பாடி
சென்றிறங் கினரூறிலார்
சாற்றுபதி னெண்புரா ணத்தொளிர் புராதனி
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

இருவர் - வீமனும் துர்யோதனனும். முனைஇ - முனைந்து. உடற்றுதல் - பொருதல். நதிகள் காண் பலன் - யுத்தமுடியுமளவும் தீர்த்தயாத்திரைக்கு விதுரனெடு சென்ற பலராமன்.

மாண்மொழி - சுக்ரநீதியை எடுத்துக்கூறும் கண்ணன்மொழி. சேனையற்றுத் தனித்தவனும் உயிரில் நிராசையுடையவனும் நீதியைக் கடந்து எதுவுமஞ்சாது செய்வன். வெல்வதுமரிது. ஆதலின் அவனை எவ்விதத்தும் (மாயைகலந்தும்) வெல்லலாம் என்பது சுக்ர நீதி. இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றது முதலியன. ஈண்டு முதனூலெடுத்துக் காட்டுதல்.

பத்தாவது

சௌப்திகபருவம்.

[காந்தாரியின் வெகுளி, விதியின்வலிமை, த்ரிகாலஞானம்.]

கூ௫. முன்னமரின் மாய்தேரின் விஜயனைக் காத்தனன்
மூள்சினக் காந்தாரியை [டு
முதுமொழியி னாற்றுவான் முன்னுமறன் மொழிகோன்
முகுந்தன்கஜ நகரிபுக்கான்
தன்னமுறு சுயோதனற் சார்ந்துசே னாபதித்
தகைகொளசு வத்தாமனும்
தகைகிருபன் மொழிகொளான் றவவாளிற் பாண்டவர்
தனிப்பாடி வறிதாக்கினான்
முன்னமுணர் கண்ணனும் வந்தனன் னகுலனொடு
முளரிவரு பாவையெய்தி
மொய்ம்பினன் முடிமணியை வீமன் பெறுனெனின்
முடிகுவன் சரதமென்றாள்
தன்னருட் சித்தியும் புத்தியும் புவிநிறாஉந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

முன் அமரின் மாய்தேர் - முன்னர்த் துரோணகர்ணயுத்தங்களில் பிரமாஸ்திரத்தால் வெப்பந்தாக்கப்பட்ட தேர்.

விஜயனைக் காத்தனன் - அர்ச்சுனனைத் தான் முன்னரிறங்கிக் கைப்பிடிகொடுத்திறக்குங் கண்ணன் அன்று வில்லுநீயு மிறங்கென்று முன்னரவனை இறங்கச்சொல்லித் தான் பின்னிறங்க அக்கினியினுதித்த குதிரையுந் தேரும் அக்கினிமயமாயின என்பது. ஊறிலார் என்பது ஞாபகம், தருமர் அபிமன்யுமணநாளில் மதுபர்க்கங் கொடுக்கும்போது பாண்டவர்களைக் காக்க என்றதற்கு ஓமென்றவன் ஊறில்லாது காத்தான் என்பதற்கு. கஜநகரி - வாரணாவதம். நகுலனொடு - தருமர் அழைத்தற்கனுப்பிய நகுலனோடு. மொய்ம்பினன் - அஸ்வத்தாமா. குந்தி - சித்தியின் அம்சம் என்பர்.

அருச்சுனனும் அசுவத்தாமாவும்.

[பிரமசரியவன்மை, பெரியோர் மொழிக்கடங்குதல்.]

௬௬. தெம்முனும் பெண்முனுஞ் செப்புரை வழாவிமன்
சேரவசு வத்தாமனைத்
தீயனவ னியல்கூறித் தன்றேரில் விஜயனொடு
சீர்த்கரும னைக்கொண்டுமால்
வெம்முனையி னண்ணலும் வியாசனொடு கங்கையுறை
வீரனை ஷிகமெய்தலும்
விஜயனும் பிரமசிர மெனுமம்பு விட்டனன்
வியாசனவை மீட்கவெனவே
யம்மவெளி தோமீட்சி யர்ச்சுனன் மீட்டன
னும்பிரம சரியமெலிவால்
அந்தணன் மாட்டாமை யாற்சிரோ மணியொடு
மருஞ்சூலு நேர்ந்தனரரோ
தர்ம்மவலி தவவலிமை யூழ்வலிமைநாட்டுறாஉந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பிரமசரியம் - ஈண்டு விவாகமாகாதவன் என்பதன்று. பிரமத்தினிடத்தில் சரிப்பதென்பது. அர்ச்சுனனது தவவன்மையும் தீமை பயிலா மனமும் யாவருமறிந்தன. அச்வத்தாமா சபலசித்தன். சாபக்ரஸ்தமான ஐஷிகாஸ்திரத்தைப் பிதாவாற் பெற்றுக் கண்ணனிடத்தில் சக்கர பரிவர்த்தனை பெற இச்சித்தவன். பிதா, வியாசர், கண்ணன், கிருபன் தடுப்பவும் நன்னெறியில் ஈடுபடாதவன்.

சிரோமணி - அசுவத்தாமாவின் சிரசில் உடன்பிறந்த சூடாமணி. சூல் - பாண்டவ பத்நிகளின் கர்ப்பம். பாண்டவர்கள் இன்மையாதற் பொருட்டென்று விட்டமையால் அபாண்டவாஸ்திரம் எனக்கூறுவர். இக்காலத்து மிக மாறுபட்டதை (அடாப்பழியை) அபாண்டம் என மருவி வழங்குவர்.

ஸ்த்ரீ பருவம்.

[முனிவர்சாபம், வினைப்பயன், காலத்தில் மறைவெளிப்படுத்தல்.]

கூஎ. சனித்தபோ தடனெய்து தன்சிரோ மணியீந்து
தன்றேசு மறவெண்ணினுள்
தகுமுனிவர் முனிவெய்தித் தரணியி லுழன்றனன்
தகவிலசு வத்தாமனே
நுனித்துணரு முனிமொழியி னிருபனொடு காந்தாரி
நுவலுமற் றுளமாதரும்
நோன்பினொரு மாதுதுயர் ஒருசேர நுகர்துயர
நுதலவுரை செப்பவலமோ
துனித்தரு களத்துவரு குந்தியுங் கன்னற்குத்
துணைவனிற் கருமஞ்சொனுள்
துன்பெவையு முனிவனும் அகற்றியெல் லார்க்குமே
சொல்லபர வினைமுற்றினுன்
தனித்துறுநர் மொழிருத்ர யாமளப் பயனிறாஉந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

தேசறுதல்-அருச்சுனற்கு உவந்தளித்த பிதா தனக்களியாமையின் மனப்புழுங்கிய அச்வத்தாமா "நின்மகன் குறைவித்தையுடையன்" என்னும் அபகீர்த்தி நீங்க ஐஷிகமறையை அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, பிதா 'அர்ஜுனன் க்ஷத்ரியன் அவனுக்கு வேண்டும் உனக்கு வேண்டாம்' எனவும் விடாது பிரார்த்தித்தான். பிறகு தந்தை 'வித்தையைத் தெரிந்துகொள், பிரயோகிக்கக் கூடாது, பிரயோகித்தால் நின்ற இடத்தில் நில்லாமலும் தேசழிந்தும் உலைவாய்' என்று சபதங்கூறி அளித்தார். மீறிப் பிரயோகித்தமையால் தேசழிந்ததென்பது.

முனிமொழி - தௌம்யர் ருத்ரஜபம். சந்து கூறிய முனிவர் மொழியுமாம். ஒருமாது - குறைமுடித்துக் குழன் முடிக்குந் திரௌபதி.

சாந்தி, ஆனுசாஸிக பருவங்கள்.

[ராஜதருமம், மோக்ஷதருமம், ஆபத்தருமம், சான்றோரியல்பு.]

கூஅ. ஆன்றமைை வியாசனொடு கண்ணனுஞ் சாந்தனுவும்
அருண்முனிவர் பலருமுறையும்
அணிகொளுங் களமதிற் சரதற்ப மேவுவோன்
அருள்பெறப் பாண்டவர்களும்
என்றமைந் தார்தரும னியலரசர் தருமமும்
எழில்வீட்டி னியலுமியலா
எல்லையி னுறக்கடவ தென்னென் பதும்வினவ
இணையிலா வீரன்பலகால்
நோன்றமைந் தார்வயி னுனித்துணரு மிதிகாச
நுவன்றுளச் சாந்திநிலையும்
நுண்கலைஞர் துணைமையு நோதற்க ணுறுதியும்
நூறரசர் கதையுஞ்சொனான்
சான்றவர்க் கென்றுமொரு சந்தேக முறவருள்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சாந்தனு, - பீஷ்மர். சரதற்பம் - பாணங்களாலாய படுக்கை. "இறங்குதலை செம்மையினுயர்த்துக" (கூக) என்ற பீஷ்மர் தலையை ஓர் அர்த்த சந்த்ர பாணத்தினால் அர்ஜுனன் உயர்த்தினான் என்பது மறிக. இயலா எல்லை - ஆபத்துக்காலம். நுனித்துணர்தல் - புண்ணியம் போன்று பாவமாதல் முதலியவற்றையும் உணர்தல்.

உளச்சாந்தி - யானெனதென்னுஞ் செருக்கறுதல். கலைஞர் துணைமை - நல்லுள்ள மெனினும் ஒருகால் முக்குண வசப்படுமாதலின் என்றும் பெரியாரையும் துணைக்கோடல். நோதற்கணுறுதி— "இடுக்கண் வந்துற்ற காலை எரிகின்ற விளக்குப்போல நடுக்கமொன்றானுமின்றி நகுக" சிந்தாமணி.

அசுவமேத பருவம், ஆச்ரமவாஸிக பருவம்.

[கையறுநிலை, பிராயச்சித்தம், அரசர் தபோவனஞ் சார்தல்.]

கூகூ. அமரர்நிலை வீட்டுமனு மெய்தலு மறன்மகன்
அணிகங்கை யவளருகிலே
அருங்கரும முற்றிமன வயர்வுற்று மன்னுரிமை
யவாநீக்கி வனநினைந்தான்
கமர்பிழைத் துறுபாலி னுற்றவனே மனநிறீஇக்
கண்ணனொடு வ்யாசமுனியும்
காண்டகுமொர் பரிமேத மாற்றிநற் றாதையாற்
கவினரசு முடிசூட்டினார்
சமர்பிழைத் தார்நினைவு சாராமன் முதியனுந்
தருமனுய ரன்பின்மூழ்கித்
தன்கதிக் கோருறுதி சாரத் தபோவனஞ்
சார்ந்தனன் விதுரனுடனே
தமர்பிழை யொறுத்தவன் றண்ணளிபி னுறவெனுந்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

அவாநீக்கல் - ஞானியும் வீரனும் பிதாமகனுமாகிய வீட்டுமனிறந்தது பற்றியும் உலகநிலைமையில் உவர்ப்புத் தோன்றியுமென்க. கமர் உறுபால் - சத்துருவைச் 'சங்கரித்தும் உலகம் புரத்தலாகிய நீதியைக் கைவிடுதற்குவமை. தாதையால் முடிசூட்டல் - தருமர் திருதராஷ்டிரனுக்குக் கீழ் யுவராஜனகிக் காந்தாரியை அந்தப்புர முதன்மையிலமர்த்தி இருவரையும் கடுஞ்ஞம் ஆதரித்தார் என்பது. மேல் த்ருதராஷ்டிரன் தருமரனுமதிபெற்றுத் தபோவனம்புக்கான் என்பது. நகூஞ ராஜ்ய காலம் என்பதும் காந்தாரி வசனத்தாற் பெறப்படும். மகுடம் தருமர் தயவை உணர்த்தும்.

தருமர் ராஜ்ய பரிபாலனம்.

[வேதவாய்மை, அரசர் அறம்வளர்த்தல், நீதியுடைமை.]

க00. மிக்கோர்கள் முனிவேந்தர் வேதமனு வோதவும்
வேலரசர் புடைசூழவும்
விஜயனொடு வீமனும் விறலோர்க ளிருவரும்
வியன்மதி யமைச்சராகத்
தொக்கோர்ந்து நாற்றிசைப் பதிகளென வுறையவும்
சூழ்நகர மக்கள் காணத்
தோன்றுசிங் காதனஞ் சுபமுற விளங்கியே
தொன்மையற நாட்டவருவோன்
மிக்கோ விடுஞ்சுருதி வாய்மைமொழி தேறியே
வியனுலகு சிவமயமுமை
மெய்ம்மயம் விஷ்ணுமயங் குகமய மென்றேறியே
மிகுநீதி பெறவாண்டனன்
தக்கோர்கள் மூவா யிரஞ்சூழ்பொன் மன்றுவளர்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

மனு - மந்திரம். தம்பிகள் நால்வரும் மந்திரிகள். வீமனை யொழிந்த மூவரும் தனக்காகப் பெரிய தாதையை யுபசரிப்பார் கள். இருப்புப் பாவையை வீமனெனத் தழுவி நெரித்த கோபத் தால் வீமன் மாத்ரம் த்ருதராஷ்டிரனைப் பழிப்பது வழக்கம். நாற்றி சைப் பதிகள் இந்திரன், யமன், வருணன், குபேரன்.

சுபமுற - தருமனுறைதலால் ஆசனம் விளங்கிற்றென்பது. ஸர்வம் சிவமயம் ஜகத், சக்திமயம், விஷ்ணுமயம் குகமயம் ஸர்வாகாரோ பகவான் எல்லா வுருவுமானன் என்பது. "நவந்தரு பேதமாகி நாதனே நடிப்பன் கண்டாய்" என்பது சித்தியார். ஆஸ்திக மதமெல்லாம் வளர்க என்பது குறிப்பு.

பாரத நடராஜ சம்பந்த விமரிசனம்.

[சந்திரவம் சத்தின்விருத்தி, துருவாசர் தோற்றம், ஆளும்வகை.]

க0க. ஆர்கலி முகட்டெழு மணிமதியை முடிசூடி
யதன்குலம் வளர்த்தனையதாஅன்
றன்மிவரு மன்னற்கெ னத்தந்த துருவாச
னருளினை வர்த்தந்தனை
பார்களிப் புறவிருந் துழியிருந் தெந்தைநீ
பகரிந்த்ர ரோடுமோலைப்
பரிந்தளித் தெங்குமே பயிறண்ட நாதராய்ப்
பண்ணுவித் தகமுமோர்ந்தே
ஏர்கலந் துறுநீல கண்டவாஞ் ஞாகிரியி
னினிதுறு கிரீசமாதோ
ரெழிற்பாக நின்பெயரி னியல்சதக மெழுதிநின்
னிணைமலர்க் கணிகுவேனே
சார்கலிக் கொருகயிலை தன்புலிசை யெனவருஉந்
தன்னருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

சந்த்ர சேகரனுக்குச் சந்திரவம்சத்தோடியைபு. சுவேதகி என்னுமரசன் என்றும் யாகதீக்ஷையுடையனகப், புரோகிதர்கள் ஓய்வு வேண்ட, அரசன் மறுத்தலும், அவர்கள் நெற்றிக்கண் படைத்தவன் தான் நின் நெருப்புக்கஞ்சான் என, அரசன் அவ்வாறே கயிலையிறையை நோற்று வேண்ட, பரமசிவன் நானேவரல் மரபன்று, வலிய அந்தணனை அளிப்பேனென்று தனதம்சம் பொருந்தத் துருவாசனை ஆக்கித் தந்தமையாலும் அவனல் வம்சம் தோற்றியபடியாலும் ருத்ராம்சம் மரபுக்குக் காரணமென்பது. தக்ஷயாக சேடமே பாரத யுத்தம் எனச் சௌப்திக பர்வாவிற் கூறப்படுதலுங் காண்க.

நூற்பயனும், உரிமையுரையும்.

[ஜயநூல், பாரதவேத ஒப்புமை, பாரதமோதும் பயன்.]

௧0௨. பர்வங்கள் பதினெட்டு கொண்டதொரு வம்சமது
பகர்மூன்று பொருளுடையது
பதினெண் கணத்தரும் பவுரிகொள் வலத்தது
பவக்கடல் கடத்துமொருகோல்
சர்வங்க ளறுநீதி யோர்க்குறு ஜயத்தம்பம்
கண்ணுபல னுக்களவுகோல்
கணபதி கரங்கொண்டு கவினுற்ற தென்றுபுகழ்
கடவுண்முனி யருள்பாரதம்
ஓர்வங்க மிடர்தீர வென்றுவிஜ யம்விழைந
ரோதுமறை யென்போலியர்
உணரவுரை சின்மொழி த்ரயோதசி வ்ரதநாத
உன்னடிக் கோதுவேனே
ஸர்வஉரு நாமங்கள் தனதெனக் கொண்டருள்செய்
தண்ணருட் சிவகாமிசேர்
சந்த்ரமௌ லீசனே தில்லைவளர் நடராஜ
சச்சிதானந்த சிவமே.

பர்வம் வம்சம் என்பன சிலேடை. பர்வம் - கணு. வம்சம் - மூங்கில். மூன்று பொருள் - அறம்பொருளின்பம். நாலாவது பவக்கடல் கடத்துமொருகோல் என்பதனாற் பெறப்பட்டது. மோக்ஷதர்மம் முதலியன விஸ்தரிக்கப்படுதல் காண்க. சாதன சாத்தியமாக மூன்றும் ஒன்றும் எனப்பட்டது. பவுரி - சுற்றுதல். தேவாம்சமாகப் பலர் பிறந்ததை யுணர்த்தும். கண்ணுதல் - நினைத்தல். வங்கம் - தோணி.

கைலாசாதிபதிக்கும் பாரதத்துக்கும் உள்ள சம்பந்தமானது பூலோக கைலாசமாகிய சிதம்பர நடராஜாவுக்கு முண்டென்பது பற்றி ஸ்ரீமந்நடராஜாங்கித மகாபாரத சதகம் என இந்நூல் இயற்றப்பட்டதென்பது.

ஸ்ரீநடராஜபாத பாரத சம்பந்தம்.

[பரதநாடகத்தான்கழலிற் பரதவம்சாவளியின் சரிதைக்கு உரிமை.]

நாவுக் கடங்கா நலங்கொண்மா பாரதம் நற்சதகப்
பாவுக் கடங்கப் பகரொண்ணு மோவுரைப் பற்றிகந்த
கோவுக் கடங்காக் குளிர்கொன்றை யான்மணி மன்றுணட
மேவுக் கடங்கலிற் ருனுமத் தாட்கீழ் மிளிர்வுறுமே.

சரஸ்வதி பூஜையன்று இந்நூல் முற்றுப்பெற்றமை.

தொல்வித்த கன்சகந் தோற்றிய நாவல ஞன்முகத்துஞ்
சொல்வித்த கங்கொண்ட மெல்லியல் க்ருஷ்ணன் துதிக்குவந்
பல்வித்த கங்கொளும் பாரத சாரம் பகர்சதகம் [தே
சொல்வித்த சாரதை யின்மலர்ப் பாதந் துணையெமக்கே.

அரங்கேற்றம்.

௧. ஐயா யிரத்திரு பானெனுன்ப தாங்கலி யாண்டினிந்நூல்
மெய்யாம் பிரபவ மேவுந் துலையுற்ற வேணுளினிற்
பொய்யான தற்ற புகழ்நாவ லன்கல்வி போற்றும்வண்மைக்
கையான் குருவெனக் காமெழில் வேற்பிள்ளை கண்டதுவே.

௨. தாதைக் குரைத்த தகைசால் சதகந் தனக்கிணையான்
வேதக் குடிலையின் மெய்ப்பொரு ளானேன் வியன்புலியூர்ப்
போதத் துருவான் மஹாமஹோ பாத்யாய பொற்புறும்பேர்
நாதன் சிவதண்ட பாணியின் பாங்கர் நவின்றதுவே.

௩. விபவநல் லாண்டினில் மேவுதை மாதம் விளம்புமிந்நூல்
இபவத் திரத்தா னெழிலரு ளாலரங் கேறியதால்
உபயபா ஷாஞான மோதுநர் கல்லூரி யுத்தமனற் [யே.
சபைவைத்திலங்குவித்தான்க்ருஷ்ணமூர்த்தியென்சாஸ்திரி

சிவமயம்.

அ னு ப ந் த ம்.

பாரதீய நாம விமர்சனம்.

சந்திர வம்சாவதரணம்.

இருநிலம் விளங்க எழுமதி யமுத
தாரையிற் றோன்றுந் தகுமதிப் புதனும்
மனுமக ளிளைபான் மகிழ்புத னளித்த
தனுவல் புரூரவத் தகையு மவன்பால்
வருசுவர்ப் பானவி பெறுபுக ழாயுவும்
அன்னோன் பெற்ற அணிமகம் பலசெய்
நன்னோன் புற்ற நகுஷநா மத்தனும்
யயாதியென் றெவரு மியம்பவன் சேயும்
சாந்திர ரென்னத் தகும்பெய ரினரே.
தந்தைசொற் போற்றித் தரணிகைக் கொண்ட
மைந்தன் பூருவென் றுரை தரு மகிபனும்
மற்றவன் பன்னியர் தம்மிற் கோசலை
பெற்றவன் ஜநமே ஜயனெனும் பெயரனும்
சுந்தையிற் றோன்றிய ப்ராசிந் வானும்.
சையம் புரைதோட் சய்யாதி மன்னும்
திரிசங் குதவத் திகழ்மகள் வராங்கி
அருமையி னுதவு மகம்யாதி வேந்தும்
க்ருதவீ ரியன்பெறுங் கேழ்கிளர் பானு
மதியவள் பெற்ற மகன்ஸார்வ பௌமனும்
கேகயச் சுந்தரி கிளர்ஜயத் ஸேநனும்
அபரா சினநற் கேள்விய னொருவனும்
விதர்ப்ப நாட்டினள் வியன்மரி யாதை

சுதனெனத் தந்த தோன்ற லரிஹனும்
அவன்பால் வந்த மகாபௌம அண்ணலும்
ஸுயஞ்ஞை யென்னுஞ் சுடரிழை யளித்த
அயுதா நாயியா மண்ண லொருவனும்
ஒளியெனும் பாசிழை யுதரம் பூத்த
அக்ரோ தனனு மவன்பாற் கலிங்கி
கண்டு வளித்த தேவா திதியும்
விதர்ப்ப மர்யாதை வியன்சேய் ரிசனும்
வாமதே விப்பெயர் மான்மகன் ரிக்ஷனும்
தக்ஷகன் புதல்வி தருமகம் பலசெய்
அந்திய நாரனும் அணிமகத் தகவால்
நதிஸரஸ் வதியொடு நன்மணம் புணர்ந்து
தருஞ்சேய் திரஸ்நுவும் தன்பாற் களிந்தி
இயைந்தநன் மனைத்திற் றோன்றிய இலிலனும்
ரதந்தரி எனுமன்னே ரமைவயிற் றோன்றிய
துஷ்யந்த நாமத் தோன்றலு மவன்பாற்
சகுந்தலை யீன்ற தனயன் பரதனும்
பௌரவப் பெயர்கொளும் பாங்கின ரென்ப:—
பார்கொளப் பரந்த இசையினன் பரதன்
தனக்கிணை யின்மையிற் றனயரை மதியான்
பரத்து வாஜனைப் பண்ணவ ரளிக்கப்
புவிபெற வளித்த புமன்யுவென் வேந்தனும்
சுவர்ணையிற் றோன்றிய சுஹோத்திர நாமனும்
ஜயந்திமற் றளித்த அத்தியும் யசோதை
அன்பி னளித்த விகுஞ்சன வரசனும்
சுந்தரிக் கவன்பாற் றோன்றஜ மீடனும்
பன்னியர் பலருளும் ரிக்ஷயின் பாலன்
ஸம்வரணப் பெயர்த் தகையு மாதித்தன்
தபதியென் றளித்த தனயையிற் றோன்றும்
குருவும் பாரதக் குறியின் விளங்குப:—

குருமணம் பெற்ற சுபாங்கியின் குணமகன்
விடூரத னென்னும் வேந்துஞ் சம்ப்ரியை
அவன்பாற் பெற்ற அநஸ்வா னென்னும்
தோன்றலு மமிர்தையிற் றோன்றுப ரீக்ஷித்தும்
மிகுநல் வேடத் தவடரு வீமனும்
மென்மைய ளளித்த வியன்பரிச் ரவணப்
ப்ரதாப மிகுத்த ப்ரதீப வேந்தனும்
சுந்தரி யீன்ற சந்தனு மகானும்
கங்கை மனைவயிற் றோன்றுகாங் கேயனும்
பரிமள வல்லிபாற் பகர்சித் ராங்கத
விசித்திர வீர்ய வேந்தனும் வியாத
னருளா லம்பிகை யம்பா லிகைவயிற்
றுன்னிய திருத ராட்டிரன் பாண்டு
மன்னிய புகழ்பெறு மன்னரு மவர்பாற்
காந்தாரி பெற்ற கருவினூற் றுவரும்
குந்திதே வருளாற் கொண்மக வைவரும்
கௌரவ நாமங் கதுவுவ ரென்ப:—
பாண்டுவிற் றோன்றிய ஐவரும் பாண்டவ
கௌந்தேய நாமங் கதுவுவர் கேண்மோ:
குடிப்பெயர் நிறீஇய குரிசின்மற் றொருசிலர்:
முற்பெயர் எவர்க்கும் முறைமையின் வழங்கும்:
பாண்டவர் தம்பாற் றிரௌபதி பயந்த
பிரதிவிந் தியனும் பெருஞ்சுத ஸோமனும்
சுருத கீர்த்தியும் தொல்சதா நீகனும்
சுருத ஸேநனும் துலங்குப பாண்டவர்
திரௌபதே யரெனச் செப்புறு பவரே:—
பாண்டவ மகாரெனப் படுவர்மற் றின்னும்
அருச்சுன சுபத்திரைக் கபிமன்யு வென்றும்
இடிம்பை வீமற்குக் கடோற்கச னென்றும்
பிறங்குவ ரிருவர் பெட்புடை யுத்தரைக்

கபிமன் யுவின்பா லவதரித் துலகம்
நிலைபெறப் பரீக்ஷித் தென்னு நெடும்பெயர்
பூண்டவன் ஞேன்றிப் பொற்புடைப் பாண்டவர்
ஆண்டவிவ் வவனிக் கணிகல மாகி
ஜநமே ஜயனெனுந் தகைசால் புதல்வனைத்
தோற்றியிப் பாரதத் தொல்கதை புவியினி
னிலைபெறச் செய்தன னென்ப அதான்று
வியன்புகழ் நிலவிய வியாதனல் லருளால்
ஜநமே ஜயனெனுந் தகைசான் மன்னன்
வபுஷ்டமை தனபாற் சதாநீ கன்னொடு
சங்கு கன்னப் புத்திரர் தம்மையும்
சதாநீ கன்வழிச் சார்வை தேகியால்
அச்வ மேத தத்தனென் றவனி
ஏத்துபௌத் திரனையும் இயல்பி னேன்றனன்
சந்திர வம்சச் சரித்திர மிதனை
மந்திர முறையின் வழுத்துவோர் தாமும்
புத்ரபௌத் ராதியர் பொலிய
வத்ஸர நூறு மன்னியர் வாழியே.

பாரத முக்கிய அரசர்களின் குறிப்பு.

பாண்டவர்கள். இவர்கள் பாண்டுவின் புத்திரர்கள் ஐவர். இவர்களுக்குள் தருமன், வீமன், அர்ஜுனன் இவர் மூவரும் குந்தியின் புதல்வர்கள். நகுலசகாதேவர் இரட்டையர் மாத்திரியின் புதல்வர்கள். மத்திர தேசாதிபதி சல்லியன் மாத்திரியின் சகோதரன்.

இவ்வைவரும் முறையே தருமதேவதை, வாயு, இந்திரன், அச்சுவினி தேவதைகள் (இவர்கள் தனித்தியங்காத இரட்டையர்கள்.) என்னும் தேவதாம்சமாகப் பிறந்தவர்கள்.

இவர்கள் உலகத்தில் தருமநெறி தப்பியொழுகும் அசுராம்சமாகப் பிறந்த வேந்தர்களைப் பொருதுவென்று பூபாரந் தீர்க்கப் பரமனருளாற் பிறந்தவர்கள். இதற்காகவே விஷ்ணுவும் கோகுலத்தையும் யதுவம்சத்தையும் தோற்றித் தமதம்சமாகக் கிருஷ்ணவதாரத்தையும் உண்டுபண்ணினர். அசுராம்சமானவர்கள் பின்வருங் குறிப்புகளிற் காண்க.

பாண்டவர்களைவரும் ஐந்து பழைய இந்திரர்கள் சிவாபராதத்தால் பிலத்தில் அடைக்கப்பட்டார்கள். கணவனொடு பல பிறப்புக்களிலும் தொடர்ந்து சென்ற நாளாயனி கணவன் முத்திநிலைபெறத் தான் அவாவின் சேடத்தால் அருந்தவஞ்செய்து பரமசிவனைக் கண்டு ஐந்துதரம் பதியைக்கொடு என்று பிரார்த்திக்க இவ்வைவரையும் அடைகவென்றார் என்பது.

இவர்கள் சிவபக்தி விஷ்ணுபக்தி இரண்டுமுடையவர்கள். தருமர் த்ரியம்பக உபாசனையாற் பொருள் பெற்று அச்வமேதஞ்செய்ததும் யுத்தத்தில் வியாசர் சதருத்ரோபதேசஞ் செய்ததும் அர்ஜுனன் சிவலிங்கார்ச்சனத்தாலும் சிவயோகத்தாலும் சித்திபெற்றதும் க்ருஷ்ணர் மொழிதிறம்பாமையும் பிறவும் நோக்குக.

இவர்கள் முக்கிய மனைவியாகிய திரௌபதி நாளாயனியின் மறுபிறப்பில் ஸ்வர்க்கத்திலுள்ள திருவென்னும் அம்சங்கலந்து பரமசிவனருளாற் பஞ்சேந்திரர்களின் போகத்தின் பொருட்டு அயோனிஜையாக நெருப்பிற் றோற்றுவிக்கப்பட்டவள்.

தருமர் ஸ்வர்க்கஞ் செல்லும்போது இவர்க்கு முன் உடம்பு விட்டுத்தேவதா ரூபமான த்ரௌபதியை அங்கே கண்டதும் பிரிந்த அவாவாற் றழுவச்சென்ற காலத்து இந்திரன் கூறுவது:—

ஸ்ரீரேஷா த்ரௌபதீரூபா த்வதர்த்தே மாநுஷம்கதா
அயோநிஜா லோககாந்தா புண்யகந்தா யுதிஷ்டிர
ரத்யர்த்தம் பவதாம்ஹ்யேஷா நிர்மிதா சூலபாணிநா
த்ருபதஸ்ய குலேஜாதா பவத்பி:சோபஜீவிதா.
ஸ்வர்க்காரோஹண பர்வ. ரு-அத். கஉ-கஙு ச.

த்ரௌபதேயர். பாண்டவர்களுக்குத் திரௌபதியிடத்துப் பிறந்தோரைவர். முன்னரகவலிற் காண்க.

பாண்டவர்கள் சகோதர ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர்கள். ஒவ்வொருகால் அபிப்பிராய பேதமுடையவர்கள் போற் காணப்படினும் முடிவில் தருமர் வழிப்பட்டவர்களாகவே இருப்பர். இவ்வைவரும் க்ருஷ்ணன் வழிப்பட்டிருக்கும் அருமை மகாகவி வில்லிபுத்தூரர் முதலியோர் கூறுமிட நோக்கியறிக.

ராஜசூய நகரத்துக் கிருஷ்ணர் பாண்டவரால் எதிர்கொள்ளப் பட்டுப் பிரவேசிக்கும்போது மாககவி கூறுதலை இந்நூல். உஎ-ங் கவியில் "கோபுரத்வாரங்கள் காணுமொன்பது படைத்த கவின் புரம் பொறிகளைந்தெனு மைவரோமெம் புகுந்தனன் கண்ணபுருடன்" எனமொழி பெயர்க்கப்பட்டிருத்தலையும் வில்லி. 'ஐம்புலனு மனமும் போனகரி எய்தி' எனக் கூறுதலையும் நோக்குக.

அடைமொழி யின்றியே ஐவர் என்றால் பாண்டவரைக் குறித்தல் இந்நூற் கதாநாயகர்கள் இத்தன்மையர் என்பதை யுணர்த்தும்.

தருமர், யுதிஷ்டிரர், அஜாத சத்ரு, தருமபுத்திரர், தர்மராஜா இவை ஒருபொருட் சொற்கள்.

யமனுக்குத் தருமன் என்றும் நடுவன் என்றும் பெயராதலின் நீதிநெறி யிகவாத நேர்மையனாய் இறைவழி நிற்போனென்பது பற்றிப் புண்ணியர்களஞ்சாராதலின் செங்கோலிகவாத திறனுடைய புத்திரனை வேண்டிப் பாண்டு மன்னன் குந்திதேவிக்குத் தருமனை முதற்கண் உபாசிக்கச் சொன்னானென்பது. நூலிற்பெரும்பாலும் வேறு பர்யாயங்களாற் கூறாது தருமன் என்னும் பெயரையே யாளு

தல் பற்றிப் புண்யங்களின் அதிஷ்டான தேவதையாகிய தரும தேவதை என்பர் சிலர். [இத்தரும தேவதைக்கு கீர்த்தி, லக்ஷ்மி, த்ருதி, மேதை, புஷ்டி, சிரத்தை, க்ரியை, புத்தி, லஜ்ஜை, மதி என்னுங் குணங்களின் அதிதேவதைகளாகிய தக்ஷகுமாரிகள் பதின்மரு மனைவியர் என்றும் இத்தரும தேவதையும் யமனும் ரூபபேத முடைய ஒருவரே யென்றும் கூறப்படுகிறது.

வனத்தில் மான்ரூேல் கவர்ந்தோடியது, யக்ஷப்ரஸ்நம், நாயாய்த் தொடர்ந்தது, ஸ்வர்க்க லோகத்தின் மார்க்கத்தில் நரக லோகக் காட்சி தந்தது முதலிய சந்தர்ப்பங்களிலும் விதுரனது முடிவில் அவனது சக்தி தருமனிடத்து அடைந்தது என்புழியும் யமனே என்பது இனிது புலப்படுதல் காண்க.

தர்மபுத்ரர் ஜனனகாலம் பாரதத்தில்:—

"ஸூர்யன் துலாராசியில் நிற்கப் பூர்ண திதியாகிய பஞ்சமியில் இந்த்ர தைவத்யமான கேட்டையிற் சந்திரனிற்க எட்டாவதாகிய அபிஜித் முகூர்த்தத்தில் தருமர் பிறந்தா"ரென்பது.

இதற்கு முன் ஒருவூ கர்ப்பம் காந்தாரி, உ-வதுவூ முடிவில் துர்யோதனுதியர் ஒவ்வொரு நாளிளையவர். துர்யோதனன் பிறந்த பின் வீமன்.

"வீமன் ஜனனம். ஸிம்மத்தில் குரு. துலாத்தில் சூர்யன். மகர நக்ஷத்திரத்தில் சந்திரன், திரயோதசி திதி, பித்ருமுகூர்த்தம்.

பிறகு ஒருவூ பாண்டு இந்திரனைக் குறித்து உபாஸித்தது.

"அர்ஜுனன் ஜனனம். பூர்வ பல்குனியும் உத்தர பல்குனியும் சேர்ந்த பகலில் பங்குனி மாஸத்தில் அர்ஜுனன் ஜனனம்."

இம்மூன்று குறிப்பைக்கொண்டு காலங் கணித்தல் வேண்டும். தருமருக்கு முக்ய மனைவி த்ரௌபதி. புத்ரன்-ப்ரதிவிந்தியன்.

இரண்டாவது மனைவி (சைப்யா,) தேவகி. புத்ரன், யௌதேயன்.

தருமனுக்குத் த்ருதராஷ்டிரனல் யுவராஜ பட்டாபிஷேகமும் அர்த்த ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்யப்பட்டன.

இராஜசூய நடைபெற்ற பிறகு சில சகுனங்களுண்டாக அவற்றின் பலன்களைத் தருமர் நாரதரை வினவ அவர் இவற்றின் பயன் "இன்று பன்னீராண்டின் பின்னிகழும். உன்னால் ஒரு பெரும்போர் நிகழும் அதனால் உலகத்தில் பெருங்கலக்கமுண்டாகும். நீ என்ன மறுக்கினும் நில்லாது. ஜயமடைவாய்" என அதற்காகவே தருமர் மிகுந்த சாந்த விரதம் பூண்டு பொறுக்கமுடியாத பல இன்னல்களையும் பொறுத்தது. ஸாதுவாகிய இவரிடத்துத் துர்யோதனாதியர் மேன்மேற் பிழைசெய்தல் ஏனைப் பாண்டவர்களுக்கும் பிறர்க்கும் மிகுந்த கோபத்தையும் விளைத்தது. மனைவிமாட்டு அபசாரஞ்செய்த துச்சாதனன் ஜயத்ரதன் முதலியோரையும் பொறுத்தலாலும் வனஞ்செல் பொழுதில் த்ருதராஷ்ட்ரன் முதலியோரை வணங்கிச் சேறலாலும் கோஷ யாத்திரையிற் றுரியோதனனைக் கந்தருவனின் மீட்டலாலும் வீமனால் அடிபட்டு உதைபட்டு வீழ்ந்த துர்யோதனன் பால் வருந்திக்கூறும் மொழியாலும் தருமரது ஸஹஜமான மனோநிலை அறியப்படும். இதனாலன்றே தருமதேவதை யக்ஷனாகி இவர்க்கெதிர்ப்பட்டு ஐவரையும் உய்வித்ததும் வீமன் அளகையிற் செய்த யுத்தத்தில் வெகுண்டெழுந்த குபேரன் இவரைச் சன்மானித்ததும். என்க.

வீமன் பலமும் அர்ஜுனன் ஜயமும் க்ருஷ்ணன் நீதியுமெனக் கவியிற் கூறப்படினும் தருமர் சாந்தத்திற் பிரியமுடையவர் பகைவர்கள் அதிற்கட்டுப்படாவிடின் யுத்தத்தில் ஸ்திரமுடையவர் என்பதை யுதிஷ்டிரர் என்னும் பெயராலும் 'வித்தொத்த தென்வாளி விளைவொத்ததவன்வாளி' என்னும் தருமர் முனையினிற்றலாற்றாது தோற்றோடிய துரோணர் மொழியாலுமுணர்க.

ஏனைய ராஜ்ய நிர்வாக முதலிய எல்லாமுடைமையிற்றருமர் தாமே தவஞ்செய்து பாசுபத முதலியன பெறுதலியலாமையிற் றம்பியாற் பெறுவித்தும் தனயராற் பொருவித்தும் பகை கடந்தனரென்க. தமர் திறமையெல்லாம் அரசனுக்கே என்பது.

பெரியோரைத் துணைக்கோடலும், அவரைப் பல்காலும் பல்பொருளும் உசாவியுணர்தலும், உயிர்களைக் காப்பதிலேயே ஊக்கமும், "அறவோர்க் களித்தலும், அந்தண ரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும்,தொல்லெதிர் சிறப்பின் விருந்தெதிர் கோடலு"மாதிய

சிறப்பினையுடைய இல்வாழ்க்கை நிலையும், இயம நியமாதி புனித முடைமையும், ஸத்யம் ஞானம் பொறையுடைமை முதலியனவன் றிப் பிறவற்றைத் துச்சமெனக் கருதும் த்யாகபுத்தியும் உறுதி கடைப்பிடியுமாகிய தருமரது இயற்கைக் குணங்கள் நூன்முழுவ தும் பரிமளித்துத் தோன்றி ஓர் இல்லறஞானியின் சொரூபத்தை உதாரணமாக விளக்குதலை ஆங்காங்கு நோக்கியுணர்க. விரிப்பிற் பெருகும்.

உ. வீமன். இவன் இந்திராம்சத்தோடு மேருவின் சிகரத்தைச் சேடன் மறைப்பவுஞ் சிதறவீழ்த்திய வாயுவினம்சமுங் கலந்து பிறந் தமையின் பதினாயிர யானை பலமுடைய பலரையு மாய்த்து நினைப் பருஞ் செய்கையை நிமிஷத்தின் முடிக்கும் வலியனா யிருந்தா னென்பது.

வீமன் வெற்றியைத் தரும் வீரரஸத்தையே விரும்புவன்: எனி னும் க்ருஷ்ணர் தருமர் முதலியோர் சூக்ஷ்மமதியையும் அதனாற்றலை யும் அறிந்து அவர்தஞ் சொல்லினெல்லை யிகவாத எண்மையுமுடை யன். ஒவ்வொரு வேளையில் தருமர் பக்கலில் இருப்பதுபோலவே இருந்து வெளிப்போந்து நொடியிற் பெரும்போர் முடித்து, அதற் குள்ளே தூர்நிமித்த மேதாவது கண்டு தேடுந் தருமபுத்திரருக் கெதிரே தலைதனிந்து வருவான்.

“தெம்முனும் பெண்முனுஞ் செப்புரை வழான் வீமன்” என் பர் வில்லிபுத்தூரர். பகைவர்க்கெதிரிலும் பெண்களுக்கெதிரிலும் சொன்னசொற் றவறான் என்பது கருத்து. த்ரௌபதி நினைத்ததை உடனே முடிக்கும் பேராற்றலன். கீசகவதம், அளகையுத்தம், அசு வத்தாமன் சூடாமணி கவரச் செல்லுதல் முதலிய இடநோக்கி யறிக. பகைவர்கட்கு இடியேறு போன்றவன். அசுவத்தாமன் விட்ட நாராயணாஸ்திரம் எதிரும்போது க்ருஷ்ணர் குறிப்பினால் யாவரும் நிராயுதபாணிகளாய் நிற்க இவன்மாத்திரம் அதனோடு நெடு நேரம் எதிர்த்துப் போராடல், ஹநுமத்யுத்தம், அளகையுத்தம் முத லிய இடநோக்கி யறிக.

அரக்குமாளிகையினின்றும் அன்னை முதலானவர்களைத் தூக் கிச் சேறல், விராடநகரத்தில் மடைப்பள்ளியிலமர்ந்து சகோதரர் களுக்கு உண்டி முதலிய வசதியளித்தல் முதலிய செயலைக் காணு

மிடத்து வீமனைப் பாண்டவர்களுக்கு 'இடுக்கண் களையுமோர் கை' என்றே கூறலாம். வீமனைத் துர்யோதனனுதியர் கங்கையிற் கட்டி விட அவனைக் காணுது தருமர் முதலியோர் தேடியுழலுதலை வாயு பூதத்தை இழந்து நாற்பூதமும் தேடுதல்போல் என வில்லி உவமித் தமையால் பாண்டவர்களுக்கு வீமனது இன்றியமையாமை இற் றெனத் தெரியவரும்.

வீமனைப்போலவே இடிம்பை கடோற்கசன் என்னும் ராக்ஷஸ மனைவியும் மைந்தனும் பாண்டவர்கட்கு ஆவன செய்வதிலிருந்து நுண்மதிமாந்தர் ராக்ஷஸகணத்தையும் அடக்கியாளுந் தன்மை புல னுகும்.

கடோற்கசன் தருமராணையாற் றுர்யோதனன்பாற் றூதுபோய் அருச்சுனன் சபத மறிவித்தபோது அவன் இராக்கதனென்றிழித் துக்கூற.

க. அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை நகைத்துரைப்பா
னரக்க ரேனும்
சிந்தனையில் விரகெண்ணுர் செருமுகத்தில் வஞ்சகமுஞ்
செய்யா ரையா
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருந்தார் நிரைக்கழுவில்
வீழச் செய்யார்
உந்துபுன லிடைப்புதையார் ஒருநரி விருப்பகற்ருர்
உரையுந் தப்பார். (உகக.)

உ. செழுந்தழல்வாழ்மனைக்கொளுவார்செய்ந்நன்றிகொன்றறியார்
தீங்கு பூணுர்
அழுந்துமனத் தழுக்குருர் அச்சமுமற் றருளின்றிப்
பொய்ச்சூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான மடைவித்துக்
கொல்ல வெண்ணுர்
எழுந்தமரின் முதுகிடார் இவையெல்லாம் அடிகளுக்கே
ஏற்ப தென்ருன். (உஉ௦.)

என்று கடோற்கசன் கூறும் வில்லி பதின்மூன்ரும் போர்ச்சருக் கச் செய்யுள்களால் கடோற்கசனது அறநெறி பிழையா வீரமும் இருந்தவா றறிக.

இன்னும் வீமன் வெளிச்செல்லும்போது பூமரங்களையும் காய் மரங்களையும் கண்டால் அவற்றைப் பறித்தலும் அவற்றின் அழகைப் போக்குதலாலும் அதுவே ஒரு சிவலிங்காகாரமாய் நிறைந்து விளங் கலாலும் அப்படியே அவ்வுருவைச் சிவலிங்க ஆக்ருதியாகவும் நைவேத்யமாகவும் பாவித்து உள்ளுருகிப் பூசித்து வேண்டுவன புசித்துச் செல்லும் அந்தரங்க வழிபாடுடையன் என்பர். விரிப்பிற் பெருகும்.

ரு. அர்ஜுனன். இவன் இந்திரகுமரன். செய்காரியத்தில் ஊக் கமும் சித்தியும் உடையவன்.

அக்நிவேச்யரிடத்தும் பரசுராமரிடத்தும் துரோணர் கற்ற அஸ்த்ரவித்தை எல்லாவற்றையும் இவனுடைய குருபக்தியும் நுண் ணறிவும்பற்றி நன்கு உபதேசித்தார். தன் மைந்தனாகிய அச்வத் தாமாவுக்கும் அப்படி உபதேசித்தாரல்லர். கஎ-ஞ் செய்யுட் குறிப் புரையு நோக்குக.

அர்ஜுனன் தந்தையாகிய இந்திரனை எதிர்த்தும் சொன்ன சொற்றவறாது அக்னிக்குக் காண்டவவனத்தை ஈந்து இந்திரனை வென்றோட்டினான். பரதாரங்களைப் "பிறர்மிச்சிலென் றிசையான்" என்றபடி மறந்தும் நினையாத பேராண்மையன். ஊர்வசியைத் தாயென வணங்கிப் பேடியாந்தன்மையும் பெற்றமையால் காம த்தை வென்ற கடுந்திறலுணரப்படும். முப்பத்திரண்டழகும் பொருந்தியவனாதலின் பல கன்னியரும் விரும்பி மணக்கும் காமன் போன்றவன். தவத்தாற் பரமசிவனை உவப்பித்து அவரோடு மல்ல யுத்தமுஞ் செய்து விளையாடிப் பாசுபதமும் பெற்ற தவத்தினன். இந்திரலோகத்தும் யுவராஜனாக இருந்து நிவாதகவசர் முதலியோ ரைக் கொன்று பூமிக்குத் திரும்பியவன்.

க்ருஷ்ணனோடு அர்ஜுனன் உடலுயிர்போல் அபேதமுறை யிற் பழகியவன். இதுபற்றியே க்ருஷ்ணார்ஜுனர் என அடுக்கியும் பார்த்தசாரதி என க்ருஷ்ணனை விதந்தும் வழங்குவர். முதனாட் போர் தொடங்கும்போது அர்ஜுனன் போர் மறுத்துக் கூறுங்காற் கண்ணன்,

உன்னையான் பிரிவதில்லை ஒருமுறை பிரிந்து மேனாள்
நன்னிலா வெறிக்கும்பூணாப் நரனு நாரணனு மானோம்.

பின்னொரு பிறப்பின்யாமே யிராமலக் குமப்பேர் பெற்றோம்
இந்நெடும் பிறப்பினீயும் யானுமா யீண்டு நின்றோம்.

நின்னிடை மயக்குமிந்த நேயமு மொழிக வென்று
தன்னிலை யவர்க்குக் காட்டித் தத்துவந் தெளிவித்தானே.

எனத் தான் அபேதநிலை கூறலும் கீதா தத்வோபதேசஞ் செய்வதும் வழிபடுதெய்வ நிற்புறங் காப்ப என்பதுபோல் உடன்பிரியாது நின்று காப்பதும் முதலிய இடங்களைக்கியறிக.

மனைவியர். த்ரௌபதி, உலூபி, சித்ராங்கதை, சுபத்ரை.

புத்திரர்கள். அபிமன்யு, இராவான், பப்ருவாகனன்.

சு. நகுலன். இரட்டையர்களாகவே எண்ணப்படும் அச்சுவினி தேவதாம்சமான இரட்டைப்பிள்ளைகளில் மூத்தவன். மத்திரதேச குமாரியாகிய மாத்ரியின் புதல்வன். சல்யன் இவளுடைய சகோதரன்.

நகுலன் மிகுந்த அழகுடையவன். அச்சவித்தையிற் சிறந்தவன். விராடநகரத்தும் அச்வபாலனுயமர்ந்தவன். பகைவர் குலத்தை அழித்தலால் நகுலன் எனக் காரணப் பெயராக்குவர். தமயன்மார் மூவரிடத்தும் அன்புடையவன். நச்சுப்பொய்கையில் யக்ஷன்மொழிப்படி ஒருவனை எழுப்புங்கால் தருமர் இவனை எழுப்ப, யக்ஷன் காரணம் வினவ, என் அன்னைக்கு யானுளன், மாத்ரிக்கு ஒருவன் வேண்டும் என்ற தருமர் விடையால் மாற்றாந்தாய்ப்பிள்ளையிடத்தும் தருமர்க்குள்ள அன்புநிலை அறியத்தக்கது. இராஜசூய திக்விஜயத்தில் மேற்றிசையை வென்றவன்.

த்ரௌபதேய புத்ரன்: சதாநீகன்.

உ-ம் மனைவி சிசுபாலன் மகள் ரேணுமதி: புத்ரன் நரமித்ரன்.

ரு. சகதேவன். மாத்ரி புதல்வர்களில் (இரட்டையரில்) இளையவன்.

சோதிட நுண்ணறிவும் சிறந்த ஒழுக்கமுமுடையவன். எதிர்கால விஷயங்களையறியும் தத்துவஞானி. அது கண்ணன் தூது செல்வதைப்பற்றி வினவியபோது:—

நீ பாரதவமரில் யாவரையு நீருக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதந்தீர்க்க மற்ருர்கொல் வல்லாரே. (௩௪.)

பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபாரத மென்ருன். (௩௫.)

என்னும் கருத்துக்களை அறிந்தும் அஞ்சாதுங் கூறலாலும் அது போற் கண்ணனை மனத்தாற் கட்டிய திடத்தாலும் அறியக் கிடக்கும்.

த்ரௌபதேய புத்ரன். சுருதஸேநன்.

உ-ம் மனைவி மகதேச குமாரி விஜயை: புத்ரன் சுஹோத்ரன்.

சூ. குந்தீ. சூரஸேனராஜன் மகள். குந்தி போஜராஜன் தத்த புத்ரி. குந்திபோஜன் சூரஸேநனுக்கு அத்தை மகன். குந்தியுடன் பிறந்தவர்கள் ஐவர். க. வசுதேவன் (க்ருஷ்ணபிதா.) உ. ச்ருத தேவா, ௩. ச்ருதகீர்த்தி, ௪. ராஜாதிதேவி, ரு. ச்ருதச்ரவா என்பவர்.

க. ச்ருததேவா. காருசதேசத்து விருத்தசர்மா மனைவி. மகன் தந்தவக்ரன்.

உ. ச்ருதகீர்த்தி. கேகய த்ருஷ்டகேதுவின் மனைவி. மகார். சந்தர்த்தனன் முதலவர்.

௩. ராஜாதிதேவி. அவந்தி ஜயத்ஸேநன் மனைவி. மகார். விந் தானுவிந்தர்.

௪. ச்ருதச்ரவா. சேதி தமகோஷன் மனைவி. மகன். சிசுபாலன். இவள் ஷித்தி தேவதாம்சம். துர்வாஸர் அனுக்ரஹம் பெற்றவள்.

எ. காந்தாரி. காந்தார தேசத்தரசன் சுபலன் மகள். சகுனி சகோதரன்.

சகோதரிகள். க. ஸத்யவ்ரதா உ. ஸத்யஸேநா ௩. சுதேஷ்ண ௪. ஸம்ஹிதா ரு. தேஜச்ரவா ௬. ஸுச்ரவா எ. நிருதி அ. சுபா ௯. சம்படா க0. தசார்ண என்னும் பதின்மர். இவர்களும் த்ருத ராஷ்டிரனுக்கே மனைவியானார்கள்.

இவள் தர்மஹந்த்ரு தேவதாம்சமாய்ப் பிறந்தவள். (தர்மத் தைக் கெடுப்பது) என்பது பொருள். இப்படியும் ஒரு தேவ தையோ எனின், ஆம். இது த்ரோபவ சக்திக்குளடங்கும்.

த்ரௌபதி ஸ்வயம்வரத்தில் போயிருந்த நூற்றுவரும் தோற் றுத் திரும்பி அரக்குமாளிகையிற் பாண்டவர் இறந்திலர் இப் போது த்ருபதனையடுத்து வலியராயினர் என்று கூறக்கேட்ட திருதராஷ்ட்ரன் முதலியோர் பயந்து விதுரனாற் பாண்டவரைக் க்ருஹப்ரவேச வ்யாஜமாய் அழைத்தனர். அப்போது வந்த த்ரௌ பதியைக் காந்தாரி கண்டதும் இவள் நமது மக்களைக் கொல்லப் பிறந்த காளியோ என அஞ்சினாள் என்பது.

தனக்கு முதலிற் குழந்தை பிறவாமையாலும் விதிவயத்தாலும் கருவை மோதிக்கொண்டாள். எனினும் கணவன் கண்ணில்லாமை யால் தானும் கண்ணைப் பொத்திக்கொண்ட கற்புடையவள். துஷ் டர்களான பிள்ளைகள் பலவாற்றாலுந் தேற்றித் தெளியாமைபற்றித் தானே சபித்தாளென்பது. கைகேயியிடத்து ராமன் அன்புடைமை போற் காந்தாரியிடத்துத் தருமருக்கும் அன்புண்டு. தர்மராஜ்ய ப்ர திஷ்டையின்பின் தருமர் காந்தாரியை அந்தப்புரத்தலைவியாகவும், த்ருதராஷ்டிரனை ராஜாவாகவும் நியமித்து யுவராஜாவாக ௧௫. வரு ஷம் ஆண்டமையால் அறிக. யுத்தமுடிவிற் றருமர் வேண்டு கோளால் கண்ணன் காந்தாரிபாற் சென்று பாண்டவர்கண்மேற் பிழையின்மை கூறி அவர்மேல் அன்புசெய்யவும் கோபந்தணியவும் கேட்க, அவள் புத்திரசோகந் தணியாளாய், "க்ருஷ்ண! நூற்று வரையுங் கொன்ற நுங்களை யாது செய்வதென்று முடிவு தோன் றாது கோபக்குன்றினிற்பேன், நின்வாய்ச்சொல்லால் 'சபியாதே' என்றபடி "சபிப்பதையே முடிவெனத் துணிந்தேன், பெறுக" எனக் கண்ணன் நானே பெறுவலெனக் காந்தாரி "நீயும் நின் சுற்ற மும் பாண்டவர்களுடன் [இன்று ௩௬-ம் ஆடு சுவர்க்கம் புகுக" என்று சபித்தாள் என்பது. கண்ணனையும் சபிக்கவல்லவளோ எனின் பூபாரந் தீர்க்கவந்த மாலவதாரத்தின் கார்யம் முற்றுப்பெற்

றமையின் அவன் மீளுங்காலம் இவள்மூலம் தோற்றியதென்பது. இதனுல் யுத்தத்தின்பின் தர்மராஜ்யகாலம் ௩௬ ஷூ மென்பதும் விளங்குமாறு. அதன்பின் பரிக்ஷித்தின் பட்டாபிஷேகமென்பது.

அ. த்ரௌபதி. த்ருபதன் மகள் என்பது பொருள். இந்திரத் திரு என்னுந் தேவதாம்சம். அரக்குமாளிகைச் செய்தியால் மனங் கலங்கி முனிவர் கௌரவத்தாற்றேறிய உள்ளத்தனுன துருபதன் சுயம்வரம் கோடிக்க அந்தணருருவாய்க் கரந்து சென்று அங்கே வீரசோதனைக்கு நியமித்த இலக்கை வீழ்த்தி அரும்போர் முடித்து அர்ச்சுனனுற் றிரௌபதியைக் கொண்டுசென்ற பாண்டவர் குயவ னில்லிலமர்ந்த குந்திபாற் சென்று நறுங்கனி கொணர்ந்தோமென நயந்து கூறக்கேட்ட தாய் 'ஐவரும் பகிர்ந்து அன்புடன் மிசை மின்' என்றுள்.

பின்னர்த் தருமர் கனியல்லள், கண்கவர் வனிதை என்னக் கேட்ட தாய் என்ன கூறினேனெனத் தியங்கினள். தருமர் மாதாவே! நின்மொழி பிழையாது. "ஸதாம்ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணமந்த: கரணப்ரவ்ருத்தய:" பெரியோர் சந்தே ஹங்களில் அவரது மனச்சான்றே பிரமாணமென்பதுபோல் நின் மனம்போல் என்மனமுங் காமுற்றதென்றுர். ஐவர் மனமும் அங்ஙு னமே. என்னே? ஐவரும் இவ்விந்திரதிருவை முன் ஒவ்வொருகால் நுகர்ந்த பழைய இந்திரர்கள் ஐவராதலின் என்க. இதுபற்றித் தோஷத்தையே நுகரும் பலர் பலவாறு கூறினும் அவளது அற்பு தத் திருவிளையாடல்களில் த்ருதராஷ்டிரன் முதலியோர் நடுங்குஞ் செயல்களையும் கீசகன் துர்யோதனன் முதலியோர் பட்டபாட்டை யும் அக்நியிற் றேன்றிய ஜன்மத்தையு நோக்கித் தெளிக.

சத்யபாமைக்கும் த்ரௌபதிக்கும் சம்பாஷணை முதலிய இடங் களால் அவளது வாழ்க்கைத் துணைநலம் இத்தன்மையதென்பதும் தருமரிடத்துப் பல்கால் வினவிய ப்ரச்நைகளால் அவளது அறிவிலே யுணர்வும் ராஜீய விஷயங்களில் தலையிட்டுக்கூறும் தடைவிடைக ளால் அவளது யுத்ததர்ம ராஜீய உணர்வும் இனைய என்பதும் நன்கு அறியப்படும்.

ராஜசூயத்தின்பின் தர்மருக்கே தர்மபத்னியாகவும் ஏனையோர் வணங்குந் தாயுமானவள். வனத்தில் நடக்கமுடியாத இடத்து அர்

ஜுனன் தோளிற் றூக்கிச் செல்வதாகவுங் கதையுண்டு. ராஜசூயத்தின் முன்னரே உபபாண்டவர் ஜனனம். ஐவர்க்கும் வேறுதாரங்களும் புத்திரஜனனங்களும் ராஜசூயத்தின் முன்னரே நிகழ்ந்தவை என்பதுமறிக. வனபர்வாவிலும், விராடபர்வாவிலும் இவர்கள் பிரமசர்யமாக ஒழுகினரென்பது.

த்ரௌபதி மிகுந்த க்ருஷ்ணபக்தி உடையவள். சூதுசபையில் கண்ணனருளால் பல பட்டாடைகளையும் தோற்றுவித்தவள். இதனைக் கேட்டறிந்த த்ருதராஷ்டிரன் காளியோ என்று பயந்து நினக்கு வேண்டும் வரங்கேள் என்று சொல்லத் திரௌபதி அங்ஙனமாயின் மானமென்பது மாதர்க்கணிகலமாதலிற் றன்னை யடிமையினீக்கலை வேண்ட அரசன் அளித்தேன் இன்னொன்று கேளென அவள் மக்கள் குலமுதலாதலின் அவர்கள் தாஸபுத்ரர்கள் என்றல் பொருந்தாதென்று அவர்களை அடிமையினீக்கலை வேண்டி மேலும் வினவிய அரசனை முறையே யஞ்ஞபதியாதலிற் றருமரை முன்னரும் பின்னர் நால்வரையும் விடுவிக்கவேண்டி அதன்பின் வேறியாதும் வேண்டாம் விட்டால் வெளிச்செல்வோம் என்றாள். இவளுணர்வின் மகிமையால் வெருண்ட த்ருதராஷ்டிரன் அவர்கள் நாட்டையும் அவர்களுக்கே யளித்தனுப்பினன். பின்னர்ப் புத்திரர்களின் உபத்ரவத்தாலும் விதிவலியாலும் சென்ற அவர்களை மீண்டு மழைத்து மறு சூதாடுவித்து வனம் புகுத்தினன். இக்கதையில் த்ரௌபதியின் பெருமித உணர்வையும் தெய்விகக் கற்புநிலையையும் அறிக. சௌப்திக பர்வாவின் முடிவத்தியாயத்தில் தக்ஷயாக சேஷம் பாரதயுத்தம் என்ற குறிப்பாலும் திரௌபதியைக் காந்தாரி த்ருதராஷ்டிரன் இவர்கள் காளியோ என நினைத்தலாலும் குணத்தாலும் த்ருஷ்டத்யும்நனும் இவளும் யாஜக உபயாஜக மந்த்ரோச்சாரணத்தில் வீரபத்ரகாளி அம்சத்தைச் சங்கல்பித்ததென்பது குறிப்பிடத்தக்கது. விரிப்பிற் பெருகுமாதலின் மேல்வரு நாமங்களை வேண்டும்வரைச் சுருக்கிக் கூறுவோம்.

கூ. கிருஷ்ணன். யதுவம்சத்தில் வஸுதேவனுக்கும் தேவகிக்கும் பிறந்தவர், மனைவிகள் எண்மர்:—

க. பீஷ்மகராஜன் புதல்வி ருக்மணி.

உ. ஸத்ராஜித்தன் புதல்வி ஸத்யபாமை.

ரு. கோசல, நக்நஜித்தின் புதல்வி நீலா.

௬. அத்தை ச்ருதகீர்த்தி மகள் பத்ரை.

௭. „ ராஜாதிதேவி மகள் மித்ரவிந்தா.

௮. ஸூர்ய புத்ரீ காளிந்தி.

௯. மத்ராதிபன் மகள் லக்ஷ்மணை.

அ. ரிக்ஷராஜன் ஜாம்பவான் மகள் ஜாம்பவதி. இவள் நின்னைப்போன்ற புத்ரன் வேண்டுமென உமாபதியருளாற் பெற்ற பிள்ளை ஸாம்பன்.

கண்ணன் ௬௪ கலைகளுங் கற்றுணர்ந்து துஷ்டநிக்ரஹசிஷ்ட பரிபாலனத்துக்காகச் செய்த திருவிளையாடல்கள் நூல்முழுவதும் பரக்கக் காணப்படுவதாலும் பாரதமமையாமல் பாகவதம் அவன் மகிமையை உணர்த்த எழுந்தமையாலும் பாண்டவர்க்குக் கண்ணன், அவனையொளித்து எவரெது செய்வதையுங் காணுங் கண்ணன், கருணையொழுகுங் கண்ணன் எனத் தமிழில் மரீஇய சொற்குப் பொருள்கூறி மேற்செல்வோம்.

க௦. ஸாத்யகி. யதுவம்சத்திற் பிறந்த விநியின் புத்ரன் ஸத்யகன், அவன் புதல்வன் ஸாத்யகி. இவன் பிள்ளைகள் க௦ பேர்.

கக. துரோணர். பரத்வாஜர் ஒருகால் க்ருதாசியைக் கண்டு காமுற்ற வீர்யத்தால் துரோண கும்பத்திற் பிறந்தவர். அக்நிவேச்யர் (சிறுதாதை) இடத்து வில்வித்தை கற்றவர். ப்ருஹஸ்பதி அம்சம். புத்ரன் அச்வத்தாமா. பரசுராமன் ஜயித்த பூமியையெல்லாம் வசிஷ்டருக்குத் தத்தஞ் செய்து அவரால் துரத்தப்பட்டு ஓடுங்கால் சேஷமாயிருந்த வித்தைகள் எல்லாவற்றையும் யாசித்துப் பெற்றவர். த்ருபதனிடத்து அஹிச்சத்ரம் என்னும் நகரை அர்ஜுனனால் வென்றுகொண்டவர்.

கஉ. அச்வத்தாமா. த்ரோணர் மகன். மாதா க்ருபாசாரி தங்கை க்ருபி. ருத்ராம்ஸம். வெலற்கரிய வீரர்களையும் சேஷபூரணம் (குறைவற முடித்தல்) போல (த்ருஷ்டத்யும்நன், உத்தமௌஜன், சிகண்டி, த்ரௌபதேயர்) இவர்களைப் பாசறையிற் கஅ-ம் நாளில் தூங்கும்போது கொன்றவன். பாண்டவர்கள்மீது அபாண்

டவமென ஐஷீகாஸ்திரத்தை விட்டுப் பித்ருசாபத்தாலும் வ்யாசாதியர் தடுத்துக் கேளாத அவர் கோபத்தாலும் சிரோமணியையுந் தேஜஸையும் இழந்தான். அச்வத்தாமா என்று மாளவேந்த்ரன் (இந்திரவர்மன்) பட்ட யானைக்கும் பெயர். இதனை வீமன் கொன்றான்.

கந. க்ருபன். கௌதம குலத்திற் சரத்வான் என்பவர் ஜாலவதியைக் கண்டு நழுவிய வீர்யத்தால் அம்புக்கூட்டில் பிறந்தவர். க்ருபி தங்கை. பீஷ்மரால் உபசரிக்கப்பட்டவர். பாண்டவர்கட்கு முதற்குரு. ருத்ரகணாம்சம்.

கச. க்ருதபன்மன். யதுவம்சத்தில் அனுவின் குலத்தில் ஹ்ருதிகன் என்பவனது புத்ரன். அதிரதன். சாத்தகியால் வதம்.

கரு. தந்தவக்ரன். கலிங்கதேசத்துட்பிரிவான அதிராஜதேசாதிபன். ஸஹதேவனால் ஜயிக்கப்பட்டவன். க்ருஷ்ணனது அத்தை ச்ருததேவியின் மகன். பிதா விருத்தசர்மா. க்ருஷ்ணனால் வதம், ஹிரண்யாக்ஷனம்சம்.

கசு. சிசுபாலன். யதுவின் புத்ரன் க்ரோஷ்டா. அவன் வம்சம் ஜ்யா மகன். அதில் தமகோஷனுக்குக் கிருஷ்ணன் அத்தை ச்ருதச்ரவாவினிடம் பிறந்தவன். ஹிரண்யகசிபுவின் அம்சம் புத்ரன் ஸுகேது, த்ருஷ்டகேது. துரோணனால் வதம். புதல்வி ரேணுமதி நகுலன் மனைவி.

கஎ. த்ருபதன். பாஞ்சால தேசத்தரசன். யஞ்ஞசேனன் மறுபெயர். மகாரதன். ப்ருஷதராஜனது மேநகாதரிசனத்தால் நழுவிய வீர்யத்தால் விருக்ஷத்திற் றோன்றியவன். த்ரோணரோடு கற்று வாக்குத் தவறினமையால் வெல்லப்பட்டான். மகன் திருஷ்டத்யும்நன், சிகண்டி, சுமித்ரன், பிரியதரிசன்ன், வீரகேது, ஸுரதன், சத்ருஞ்ஜயன் முதலியோர். இவர்கள் ஜயத்ரதன் கர்ணன் த்ரோணர் இவர்களாற் கொல்லப்படத் தானும் த்ரோணராற் கொல்லப்பட்டான்.

கஅ. விராடன். மத்ஸ்ய தேசாதிபதி. மருத்கணாம்சம், மகாரதன். முதல் மனைவி ஸுரதை. புத்ரர் சிவேதன், சங்கன். உ-ம் மனைவி கேகய ஸுதராஜ புத்ரி. சுதேட்டிணை. பிள்ளைகள்: பப்ரு, உத்தரன், உத்தரை.

சகோதரர்கள்; சதாநீகன், மதிராக்ஷன், சூர்யதத்தன், ச்ருதா நீகன், ச்ருதத்வஜன், பலாநீகன், ஜயாநீகன், ஜயாச்வன், ரதவாகநன், சந்த்ரோதயன், ஸமரதன், என்னும் ஏகாதசர். இவனது விராடநக ரிற் பாண்டவர் அஞ்ஞாதவாசம் புரிந்தனர். த்ருபதன், விராடன் வம்சத்துக்கே த்ரோணன் காலனென்பர். சிவேதன் பாண்டவர் சேனைத்தலைவன். பீஷ்மனால் வெல்லப்பட்டான்.

கக. சிகண்டி. த்ருபதன் மூதற்புதல்வன். முதலிற் பெண்ணா கப் பிறந்து பிறகு யக்ஷனால் ஆணானவன். ரதமுக்யன். அம்பை பீஷ் மனால் தள்ளப்பட்டமையின் அவனைக் கொல்லத் தவஞ்செய்து இப்படிப் பிறந்தாள். ஸ்திரீஜன்மம் மறுபிறப்பிற் புருடனாவது இங் ஙனம் அருமையென்பது. இதில் பல மதபேதமுண்டு. தசார்ண தேசாதிபதி இரண்யவர்மன் புத்ரியை மணந்தான். க்ஷத்ரதேவன், ரிக்ஷதேவன் குமாரர்கள். துரோணரிடத்துக் கற்றவன். பாசறை யில் அச்வத்தாமாவால் வதம்.

உ0. ஜராசந்தன். மகததேசத்தரசன். உபரிசரவஸுவின் புத்ர னாகிய பிருஹத்ரதன் புத்ரன். சண்டகௌசிகர் வரத்தாற் பிறந்த வன். விப்ரசித்தி அம்சம்.

புருஷமேத யாகத்துக்காக அகூ ஆயிரம் அரசகுமாரரைச் சிறை கொண்டவன். க்ருஷ்ணனால் இவர்கள் விடுதலையடைந்தார்கள். புத்ரன் ஸஹதேவன். க்ருஷ்ணனாற் பட்டாபிஷேகமடைந்தவன். புத்ரீ பாண்டவ ஸஹதேவன் பார்யை விஜயை. அஸ்தி பிராஸ்தி என இரு மகளிருமுண்டு. இவர்கள் கம்சனை மணந்தவர். கம்ஸன் க்ருஷ்ணனாற் கொல்லப்பட மகளிர் துன்பஞ் சகியாணாய்ப் பல தரம் க்ருஷ்ணனோடு பொருதான். கஎ-ந் தடவை பலராமன் கலப் பையில் அகப்பட்டு வீமனால் முடிவென்ற அசரீரியாற் பிழைத்து வீமனால் கொல்லப்பட்டான்.

உக. கம்ஸன். உக்ரசேனன் மகன். காலநேமி அம்சம். ஜரா சந்தன் மகளிரை மணந்தவன். தேவகியின் கருப்பங்களை அம்மா னுக்காகாதெனப் பயந்து அழிக்கத் தொடங்கினான். எ, அ-வது பிள்ளைகள் தேவாம்சமாய் மறைந்து வளர்ந்தனர். அவர்கள் பலராம னும் கண்ணனும். கண்ணனைக் கொல்லப் பல உபாயஞ் செய்தும் அவனது அமானுஷ்யச் செயல்களை இகழ்ந்தும் அவனாற் கொல்லப்

பட்டான். கம்ஸஜராஸந்த மித்ரர்கள் ஹம்ஸன், டிபிகன் இவரும் கண்ணனுன் மாண்டனர்.

உஉ. பகதத்தன். நரகாசுர புத்ரன். ப்ராக்ஜ்யோதிஷ நகராதிபன். வைஷ்ணவாஸ்த்ர ப்ரயோகஞ் செய்தவன். அர்ஜுனனுல் வதம்.

உரு. ஜயத்ரதன். ஸிந்து தேசத்து விருத்தக்ஷத்ரன் மகன். துச்சளை புருஷன். ஒரு புத்ரவதம் அர்ஜுனனுல் த்ரௌபதி ஸ்வயம்வரத்தில். மற்றையவன் ஸுரதன். அச்வமேத பர்வாவில் அர்ஜுனன் வருகையைக் கேட்டதும் தானே இறந்துபோனுன். ஜயத்ரதன் வனத்தில் த்ரௌபதியை அபகரித்து எதிர்வந்த வீமஸேநனுன் ஐங்குடுமி தரப்பெற்றுத் தருமரால் பிழைத்து மீண்டவன். தவத்தால் ஈச்வரனது கொன்றைமாலைப்படை தண்டாயுதம் பெற்றவன். தன் மகன் தலையைக் கீழே தள்ளுபவன் தலை ஆயிரந் தூளாக என்று சபித்துச் சமந்தபஞ்சகத்துத் தவஞ்செய்யும் தந்தை கையில் இவன் தலை வீழும்படி அர்ஜுனன் வெட்டி வீழ்த்தினுன்.

உச. பூரிச்ரவஸ். சோமதத்தன் மகன். ரதயூதபயூதபன் (சேனுபதி சேனைக்குத் தலைவன்) அர்ஜுனனுல் புஜச்சேதமும் சாத்தகியால் சிரச்சேதமுஞ் செய்யப்பட்டான்.

உரு. ஸம்சப்தகர். த்ரிகர்த்த தேசத்து ஸுசர்மாவின் புதல்வர்கள் நெடுமொழி கூறுவோர் என்று பொருள். இவர்களுடனிருப்பவர்கள் கு கோடி பேர்கள். பிறர்க்குத் துணையாய்ப் பொருகின்றவர்கள். அர்ஜுனனுல் வதஞ் செய்யப்பட்டார்கள்.

உசா. நிவாதகவசர். தனுவின் புத்ரர்கள் (தானவர்.)

உஎ. காலகேயர். காலகை என்பவள் புத்திரர்கள் (அசுரர்கள்) ஹிரண்யபுரவாசிகள்.

உஅ. ஸஞ்ஜயன். த்ருதராஷ்டிரன் பாகன். அமைச்சனுமாம். உபலாவ்ய நகரத்துக்குத் தூதுபோனவன். வ்யாசாநுக்ரகத்தால் யுத்தத்தில் எங்கும் நிகழ்வதை அறிபவன். த்ருதராஷ்டிரன் ராஜர்ஷியாய்த் தாவாக்கியிலகப்பட்ட பிறகு இமயமலையிற் றவஞ்செய்யச் சென்ருன்.

உகூ. கர்ணன். குந்திக்குச் சூர்யனிடத்துப் பிறந்தவன். விகர்த்தனன் என்றும் பெயர். (கவசகுண்டலத்தை அறுத்துத் தந்தமையால்) சூர்யாம்சம். அங்கராஜ்யத்தைத் துர்யோதனனுற் பெற்றவன். பாகன் மகளிரை மணந்தான். பரசுராமரிடத்துப் பிராமணனென்று கற்றுச் சாபமெய்தினவன். பாண்டவர்க்கின்னல் செய்ய நேர்ந்தது தவிர உலகின் கொடைக்கு நிதர்சனமானவன், ஸுதாமன், ஸுஷேணன், ஸத்யஸேநன், சித்ரஸேநன், ஸுசர்மா, வ்ருஷஸேனன் புத்ரர்கள். சத்ருந்தபன், சத்ருஞ்ஜயன் முதலியோர் சூத குல சகோதரர்கள்.

ரு௦. சகுனி. காந்தாரி சகோதரன். ஏகரதன். த்வாபராம்சம். புத்ரர் உலூகன், வ்ருஷகன், ப்ருஹத்பலன், அசலன், கஜன், கவாக்ஷன் முதலியோர். சகதேவனுல் வதம்.

ருக. சல்யன். மத்ர தேசாதிபதி. குதாயநன் மகன் அதிரதன், ஸம்ஹ்லாத அம்சம். ருக்மாங்கதன், ருக்மரதன் பிள்ளைகள். பாண்டவர் சகாயமாய் வந்தவன் துர்யோதனுல் வஞ்சிக்கப்பட்டு அவன் பக்கலிருந்து தருமராற் கொல்லப்பட்டான்.

ருஉ. துர்யோதனன். கெட்ட சண்டைக்காரன் என்பது பொருள். இவன் பிறந்தபோதே ஊரிற் பல துர்ச்சகுனந் தோன்றினமையாலும் அரசனுக்குப் பெற்ற மூத்த குழந்தையை விடத் துணியாமையாலும் திருடர்களுக்குத் திருடன் என நெற்றியிலெழுதல் சீர்திருத்த ஏதுவாதலாலும் துர்யோதனன் என முனிவர் நாமஞ் சூட்டினர். மூதற்பிள்ளைக்கு முதலக்ஷரம் துர் என்றிருப்பது பற்றி அரசன் யோசிக்க முனிவர் ஸுயோதனன் என்றிட்டார்கள். இதற்கு நல்ல சண்டைக்காரன் என்பது பொருள். இவனுற் பாரதம் என்னுங் குலப்பெயர் சண்டைக்குப் பெயராக மாறியதால் இவன் பெயர் பொருத்தமானதேயாம். மூத்தமகன் குணமே இதுவாதலின் துச்சாதனன் முதலிய நூற்றுவர் பெயரும் இங்குக் குறிப்பிடப்படவில்லை. துச்சாதனன் கெட்ட உத்தரவையுடையவன். தங்கை ஒருத்தி துச்சளே. நூற்றில் மிகுந்து க௦க-ஆம் பெண். கெட்ட கலகக்காரி என்பது பொருள். தருமரை முதலாகக் கொண்ட அநுபந்தத்து இறுதிநிலையில் இவனை அமைக்கவேண்டியிருப்பினும் நூலிறுதி ஓர் மங்கலமாதலின் இவன்றம்பியர் நூற்றுவரில் தப்பிப்பிறந்த விகர்ணன் றன்மையைக் கூறி முடிப்போம்.

௩௩. விகர்ணன். பீஷ்மர் முதலிய பெரியோர்களும் ராஜாங்க சபையிலுள்ளவர்களும் சூதுபோர்க் காட்சியில் த்ரௌபதி வசனத்தையும் அவள்பால் துச்சாதன் முதலியோர் அதிக்ரமத்தையும் கண்டுங் கேட்டும் வாளா இருப்ப அது சகியாது நூற்றுவரிலொருவனும் விகர்ணன் எழுந்து நீதிகளை எடுத்துக் கூறி இவ்வளவு அரசர்கள் துர்யோதனனுதியர்க்குப் பயந்து நீதிகோடலைப் பார்த்திருப்பதோ என வீரத்துடன் பேசினுன். ஸ்காந்தத்தில் சிங்கனும் இரணியனும் ராமாயணத்து விபீஷணனும் போன்று நியாயம் பேசியவன். யுத்தத்தில் நூற்றுவரிற் பெரும்பாலோர் வீமனுல் முடிய இவனும் வீமனுக்கெதிரே வந்து பொரும்போது வீமன் இவனைக் கண்டதும் விகர்ணு என்று தழுவச்சென்று அவன் போர்வேண்டவும் மறுத்தான். நின்மேலென் கைச்சரம் நாடாதென்ருன். பாபியர் சம்பந்த தோஷம் உடல்விடலா னீங்குமென்று போர்வேண்டி அவனும் மாண்டு வீரசொர்க்கம் பெற்ருன்.

கோஷயாத்திரையில் கந்தர்வன் கைப்பட்ட துர்யோதனன் தர்மபுத்ரா அபயமென்று கூவத், தருமர் அர்ஜுனனைத் தெருட்டி சரகூடங் கட்டி விடுவிக்க அனுப்பி அவ்வாறே மீட்டனர். துர்யோதனன் வெட்கமுற்றுத் தலைகுனிந்து வீடுசெல்ல மனமின்றிப் பகைவனுல் உய்விக்கப்பட்ட உடலை வெறுத்து ப்ராயோபவேசம் செய்யத் துணிந்தான். கந்தர்வனுக்குத் தோற்ருேடிய கர்ணன் துர்யோதனனைப் பலவாறு தெருட்டியுங் கேளாது கிடந்தான். அதுபோது சொப்பனத்திற் றுர்யோதனன் பாதலம் போய் அசுரேந்த்ரனுய் ஆசனத்தமர்ந்து அங்குள்ள அசுரர்களால் சன்மானிக்கப்பட்டு பூமியில் அசுராம்சமாய்ப் பிறந்தவர்களையும் நீயே எங்கள் அதிபதி என்பதையும் பரமசிவனுல் ஓரனுக்ரஹமும் ஏற்படக் கூடுமென்பதையும் அதற்குள்ள மறைகளையும் உபதேசிக்க மீண்டு விழித்தெழுந்தான். அதன்பிறகே துர்யோதனன் தர்மர் முதலியோர்க்கு ஈப்பறக்க இடந்தரேன் என்ற தைர்யம் அடைந்தான். எந்தப் பெரியோர் மொழிகளையும் செவியிற் கொண்டிலன். ஸஞ்ஜயன்தூது க்ருஷ்ணன்தூது வியாசர் மொழி காந்தாரி மொழி த்ரோணர் விதுரன் மொழிகளாகிய ஒரு சமாதானமுங் கொண்டிலன். அம்மந்திரத்தையே யுத்தத்தில் பக்கத்துணை எல்லாம் இழந்து தனித்த துர்யோதனன் கஅ-ம் நாள் மடுவில் மூழ்கி உச்சரித்தான். அம்மந்திரத்தால்

இறந்த ஸைந்யமெல்லாம் அசைய ஆரம்பித்தன "மாயிநந்து மஹேஸ்வரம்." ஸகல மாயைகளையும் உடையன் ஸர்வேஸ்வரன் என்றபடி அம்மந்த்ர சொரூபியான அவனசையின் அகிலமுமசையு மென்பது. இதற்குள் ஒடியவனைத் தேடித் தொடர்ந்த பாண்டவர் களில் வீமன் மாநங்கெட்டவனே என்று வைத வைவில் யாரென்று வெளிப்போந்த துர்யோதனன் மனுமுயலுதலை விட்டு மல்லயுத்தம் புரிந்து க்ருஷ்ணஸகாயியான வீமனால் வலியிழந்தொடுங்கினான்.

அறத்தின்முன் னில்லாதாம் பாவம். தர்மமேவ ஜயதி என்ப தற்குப் பாரதப்போர் எடுத்துக்காட்டாகி நிகழ்ந்தது. சுபம்.

பாரதசதகம் முற்றிற்று.